பக்கங்கள் : முப்பத்திரண்டு+VIII

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 29 வியாழக்கிழமை (14.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 230


02
சுதந்திரமான தேர்தலுக்கு உத்தரவாதம் தரமுடியுமா?


09
உத்தரவை மீறியதாலேயே பிரச்சினை


18
சிங்களவரையும் முட்டாளாக்க எத்தனிக்கும் மஹிந்த...


25
கோட்டை விட்டதால் தோற்றோம்

**செய்திச் சரம்**

### யாழ். வலயப் பாடசாலைகள் 3 தினங்கள் மூடப்படும்

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளும் யாழ். மாநகர சபை எல்லைக்குட் பட்ட பாடசாலைகளும் எதிர் வரும் 22 ஆம் திகதி முதல் 3 தினங்கள் மூடப்படும் என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். தேர்தல்கள் ஆணையாளரின் பணிப்புக்கு இணங்க பாடசாலைகள் மூடப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-ஐ)

### நாளையும் வாக்களிக்கலாம்

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் கடந்த இரண்டு நாள்களிலும் தபால்மூலம் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பம் கிட்டாதவர்கள் நாளை வெள்ளிக்கிழமையும் வாக்களிக்கலாம் என பிரதித் தேர்தல் ஆணையாளர் டபிள்யூ.பி. சுமணசிறி தெரிவித்தார். (சி)

### அமெ.காங்கிரஸில் 'கொலைக்களம்'

பிரிட்டனைச் சேர்ந்த சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட 'சிறிலங்காவின் கொலைக்களம்' என்ற ஆவணப்படம் நாளை வெள்ளிக்கிழமை அமெரிக்க காங்கிரஸ் மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு வெளியிடப்பட உள்ளது. தொடர்ந்து இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பான விவாதமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம், நெருக்கடிகளுக்கான அனைத்துலக அமைப்பு என்பன இதற்கு ஏற்பாடு செய்துள்ளன. (உ)

## சீனா, ரஷ்யா உட்பட

# உலக கம்யூனிஸ்டுகளிடம் ஈழத் தமிழருக்கு ஆதரவு

### திரட்டுகிறது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

**தா.பாண்டியன் உதயனுக்கு சிறப்புப் பேட்டி**

சென்னை, ஜூலை 14

சீனா, ரஷ்யா உட்பட உலகெங்கும் உள்ள நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு, இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் விளக்கி, தமிழருக்கு ஆதரவு திரட்டும் பணியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பித்துள்ளது. இதுவரை 49 நாடுகளுக்கு ''உண்மையை விளக்கி'' கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

''இலங்கையில் நிகழ்த்தப்பட்டது பயங்கரவாதத்துக்கு எதிரான போர் அல்ல. அது மனித குலத்துக்கு எதிரான போர் என்பதை உலகெங்கும் உள்ள கம்யூனிஸ்ட்டுகளுக்கு விளக்கி வருகிறோம்'' என்று உதயனுக்கு வழங்கிய விசேட பேட்டியில் தெரிவித்தார் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக மாநில செயலாளர் தா.பாண்டியன்.

இலங்கையில் நடைபெற்ற போரின் போது உண்மையில் என்ன நடந்தது என்பதை இந்தியாவில் உள்ள எல்லா மாநில மக்களுக்கும் விளக்கும் பணியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பித்துள்ளது. அதன் ஒரு கட்டமாக கடந்த 8ஆம் திகதி 'இலங்கைத் தமிழருக்கு ஆதரவு தரும் தினம்' என்று பிரகடனப்படுத்தி இந்தியா முழுவதும் நிகழ்வுகளை நடத்தியது கட்சி.

ஆந்திரா, தமிழகம், கேரளா உட்பட இந்தியாவின் பல மாநிலங்களிலும் இந்தத் தினம் கடைப்பிடிக்கப்பட்டது. கட்சியின் இந்தச் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக ''இலங்கைப் போரின் உண்மையை உலகக் கம்யூனிஸ்டுகளுக்கு விளக்கும்'' திட்டத்தையும் அது

(31 ஆம் பக்கம் பார்க்க)



தா.பாண்டியனின் முழுமையான பேட்டி நாளைய உதயனில்

**கல்விச்சுடர்**

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் படிமுறைப் பரீட்சை இல.9 இன் வினாத்தாள்-II இன்றைய உதயனின் 20,21ஆம் பக்கங்களில் வெளியாகியுள்ளது.

# இராணுவத்துக்கு எதிராகப் பரப்புரை செய்து அரசியல் பிழைப்பு நடத்துகிறது கூட்டமைப்பு

### இது யாழ். தளபதி ஹத்துருசிங்கவின் குற்றஞ்சாட்டு

கொழும்பு,ஜூலை 14

தமக்கு எதிராக வன்முறைகள் இடம்பெறுவதாகப் பரப்புரை செய்து கடந்த மூன்று தசாப்தங்களாக அரசியல் பிழைப்பு நடத்திவந்த கூட்டமைப்பு தற்போது இராணுவத்தினருக்கு எதிராக பரப்புரைகளை மேற்கொண்டு அரசியல் பிழைப்பு நடத்த முயற்சிப்பதாக யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க குற்றஞ்சாட்டுகின்றார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது இராணுவத்தினர் திட்டமிட்டு இடையூறு விளைவிக்கின்றனர் என அந்தக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளார்.

கூட்டமைப்பின் குற்றச்சாட்டுகள் (31 ஆம் பக்கம் பார்க்க)



# இந்திய அரசியல்வாதிகளை சாடுகிறார் அஸ்வர் எம்.பி

### இலங்கையை விற்று அரசியல் நடத்துகின்றனராம்

கொழும்பு, ஜூலை 14

இலங்கையை விற்று இந்திய அரசியல்வாதிகள் தமிழகத்தில் அரசியல் நடத்தி வருகின்றனர் என்று ஆளுங் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் நேற்றுக் குற்றஞ்சாட்டினார்.

காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் சாந்த புஞ்சிஹேவா தொடர்பான அனுதாபப் பிரேரணை மீதான உரை நாடாளுமன்றில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

''அண்மையில் தமிழகம், காயல்பட்டினம் பகுதிக்கு நான் சென்றிருந்தேன். அப்போது இலங்கை நிலைமை தொடர்பாக தமிழக அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டனர். (31 ஆம் பக்கம் பார்க்க)

## யானைகளை கணக்கிடுகிறது அரசு

கொழும்பு,ஜூலை 14

இலங்கையில் உள்ள யானைகளைக் கணக் கெடுப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு இறங்கி உள்ளது. முதல் தடவையாக இத்தகைய கணக் கெடுப்பு அரசால் நடத்தப்பட உள்ளது. யானைகள் ஊர்களுக்குள் புகுந்து நாசம் விளைவிக்கும் போது மனிதர்களுடன் ஏற்படும் மோதல்களால் இறப்பதைத் தடுப்பதற்கும் தந்தங்களுக்காக வேட்டையாடப்படுவதைத் தடுப்பதற்குமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.



ஒகஸ்ட் மாதம் 13ஆம் திகதி முழுநிலா நாளில் ஆரம்பமாகும் இந்தக் கணக்கெடுப்புப் பணிகள் இரண்டு நாள்களில் முடிக்கப்படும் என்று வனவளத் திணைக்களத் தலைவர் சந்திரவன்ஸ பத்திராஜ தெரிவித்தார்.

நீர்நிலைகளுக்கு வரும்போது (31ஆம் பக்கம் பார்க்க)

## நயினை நாயகிக்கு இன்று தேர்

நயினாதீவு,ஜூலை 14

பிரசித்திபெற்ற நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இன்று இடம்பெறும் தேர் உற்சவத்தைக் காண நேற்றே அடியார்கள் கூடத்தொடங்கினர்.

(31 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் சொகுசு பஸ் சேவை

கொழும்பு, ஜூலை 14

போக்குவரத்துச் சபை குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ்களை கொழும்பு நகரில் குறுந்தூர சேவையில் நேற்று முதல் ஈடுபடுத்தியுள்ளது.

புறக்கோட்டை - (31 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சித் தேர்தல் நீதியாக நடந்தால் கூட்டமைப்புடனான பேச்சு வெற்றிபெறும்

### ரணில் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 14

வடக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நீதியாகவும் நேர்மையாகவும் நடத்தப்படுவது அரசு - கூட்டமைப்பு இடையே நடக்கும் பேச்சுகள் வெற்றிபெற உந்து சக்தியாக அமையும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

''வடக்கில் இன்று சில பகுதிகளில் தேர்தல் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்க் கட்சியினர் யாழ். குடாநாட்டில் அச்சுறுத்தப்படுகின்றனர். சில இடங்களில் (31 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானம் காணப் படும் சாத்தியம்.

COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை μ யாழ்ப்பாணம்
ஆடி 13. 2011
பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6715.67↑
மிலங்கா(MPI) 6190.28↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2.3Bn
பங்குகளின் அளவு(No.) 113.5Mn
வியாபாரம்(No.) 19286
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
நுவரெலியா ஹொட்டல் 1550.00
ஜெ எல் மொறிசன் 3750.00
சிலோன கோல்ட் ஸ்ரோர்ஸ் 200.00
ஹவுசிங் டிவலொப்மன்ர் 1440.00
கொழும்பு பார்மசி 1999.90
குறைவு(Top 5 losers) - விலை Rs.
செலிங்கோ இன்சுறன்ஸ் 630.00
சிலோன் பிறேவறி 329.00
பொகி தாரா 1040.00
லங்கா செரமிக்ஸ் 116.00
இன்டஸ்றியல் அஸ்பர்ஸ் 190.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# குடாநாட்டில் நீதியான, சுதந்திரமான தேர்தல் நடைபெறும் என உத்தரவாதம் தரமுடியுமா?

## பிரதித் தேர்தல் ஆணையாளரிடம் சரவணபவன் எம்.பி. கேள்விக் கணை

கொழும்பு,ஜூலை14

யாழ்.மாவட்டத்தில் நீதியான, சுதந்திரமான தேர்தல் நடைபெறும் என்று பிரதித் தேர்தல் ஆணையாளரும் யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும் உத்தரவாதம் அளிக்க முடியுமா?

இங்கு நடைபெறும் அரசியல் அடாவடித்தனங்களையும் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளையும் தடுத்து அவர்களுக்குப் பூரண பாதுகாப்பு வழங்கப்படுமா?

- இவ்வாறு கேள்விக் கணைகளைத் தொடுத்தார் யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவன்.

யாழ்.மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் அரசியல் அராஜகச் செயல்கள் பாதுகாப்புப் படையினரின் பாரபட்சமான நடவடிக்கைகள் தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தேர்தல்கள் ஆணையாளரை நேரடியாகச் சந்தித்து முறைப்பாடு செய்திருந்தனர். அதைத் தொடர்ந்து தேர்தல்கள் ஆணையாளரின் பணிப்பின் பேரில் பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் யாழ்ப்பாணத்துக்கு அவசரமாக அனுப்பிவைக்கப்பட்டிருந்தார். அவர் நேற்று யாழ். செயலகத்தில் அரசி யல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி இருந்தார்.



யாழ். மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அதிகாரியுமான திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இராணுவ உயர் அதிகாரிகளும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு. கருணாநிதியும் கலந்துகொண்டனர். ஆளும்கட்சி வேட்பாளர்களான ஈ.பி.டி.பி. பிரதிநிதிகளும் அங்கு வந்திருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவன், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாள் முதல் கூட்டமைப்பினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறை சம்பவங்களை எழுத்து மூலமாகச் சமர்ப்பித்தார்.

அதேவேளை, அரச அதிபரும் பிரதித் தேர்தல் ஆணையாளரும் வன்முறைகள் அற்ற சுதந்திரமான தேர்தலை நடத்த அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

அரச அதிபரின் கூற்றை வரவேற்ற சரவணபவன், ஆரம்பம் முதல் தொடர்ச்சியாக எம்மீது மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறை சம்பவங்களை தேர்தல்கள் ஆணையாளர், அரச அதிபர், ஜனாதிபதி, பொலிஸ் திணைக்களம் மற்றும் தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்கும் செயலகம் என அனைத்துத் தரப்பினரிடமும் எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளோம். ஆனால் இன்றுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நான் நேரடியாகவே பாதிக்கப்பட்டவன். பொலிஸாரும் பாரபட்சமாகவே செயற்படுகின்றனர். ஈ.பி.டி.பியினரின் அட்டகாசம் ஓயவில்லை. குறிப்பாக தீவகப் பகுதிகளுக்கு எங்களால் செல்லவும் முடியவில்லை. வேட்பாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். ஈ.பி.டி.பி.யினரின் இச்செயலுக்கு இராணுவத்தினரும் பக்கபலமாக இருக்கின்றனர் என நேரடியாகவே குற்றம் சுமத்தினார் சரவணபவன்.

இதற்குப் பதிலளித்த யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியான திருமதி இமெல்டா சுகுமார், முறைப்பாடுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கூறினார்.

நீங்கள் அரசாங்க அதிபர் மட்டுமல்ல தெரிவத்தாட்சி அதிகாரியும் கூட. தேர்தல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கூடிய அனைத்து அதிகாரங்களும் உங்களுக்கே உண்டு. நீங்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார் சரவணபவன்.

இதனை ஏற்றுக்கொண்ட அரச அதிபர் இவ்விடயத்தில் தான் பக்கசார்பின்றி நேர்மையாகவே செயற்படுவதாகவும் தனக்கு எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். நான் அரச அதிபராகப் பெறுப்பேற்று நடத்தும் முதலாவது தேர்தல் இது.

இதனை வன்முறைகளற்ற நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தலாக நடத்த சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அச்சம், பீதி இல்லாமல் அனைத்து வாக்காளர்களும் தாம் விரும்பிய வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் நிலைமை ஏற்பட வேண்டும். இதற்கு நீங்கள் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என அரச அதிபர் கேட்டுக்கொண்டார்.

(ஓ-2-15)

# அரசின் நிகழ்வுகளை பிரசார மேடையாக்க முடியாது

## முறைப்பாடுகள் ஆணையாளரின் நடவடிக்கைக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை14

அரசின் அபிவிருத்தித் திட்ட நிகழ்வுகளை அரசியல் பிரசார மேடையாக்கக் கூடாது - இவ்வாறு தேர்தல் ஆணையாளரினால் அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் மட்டுமன்றி அனைத்துத் திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் வடக்கில் நாள் தவறாமல் அடிக்கல் நடும் விழாக்கள், மக்களுக்கான உதவிப் பொருள்கள் விநியோகம் என்பன இடம்பெற்று வருகின்றன. இந்த விடயம் தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலராகிய உங்களால் எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் எழுப்பிய இந்தக் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும் போதே தெரிவத்தாட்சி அலுவலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் ஆணையாளரால் அறிவிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஜூலை 25ஆம் திகதி வரை அவசரமான அடிக்கல் நடும் வைபவங்களோ, அரச கருத்திட்டத்துக்கு அமைவான அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான நிவாரண விநியோகம், மக்களுக்கான பகிர்ந்தளிப்பு உதவிகள், பாடசாலைகளில் அல்லது பொது இடங்களில் இடம்பெறும் நிகழ்வுகள் போன்றன ஓர் அரசியல் கட் சிக்கு சார்பாகவோ அல்லது இன்னொரு வேட்பாளருக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலோ இடம்பெறக்கூடாது.

இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் சகலரும் செயற்படவேண்டும். நீதி, நியாயமான தேர்தல் இடம்பெறுதவதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். இங்குள்ள வாக்காளர்கள் அனைவரும் சுதந்திரமாக அச்சமற்ற சூழ்நிலையில் வாக்களிக்க வேண்டும்.

மேலும் எமக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் நாம் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்திருக்கிறோம். அவர் இந்த விடயங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்றார்.(ஓ-15-2)

# நிகழ்வுகள்

### விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 14

ஆறுதல் நிறுவனத்தின் மாதாந்த அறிவுப் பயணம் நிகழ்வில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் விசேட கருத்தரங்கு நடத்தப் படவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த கணித புள்ளி விவரவியல் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி அறிவழகன் புள்ளிவிபரவியல் ''ஓர் ஆரம்ப அறிமுகம்'' எனும் தலைப்பில் கருத்துரைகளை நிகழ்த்துவார். (ற-313)

### கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 14

நல்லூர் றோட்டறக் கழகத்தின் ஏற்பாட்டில் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான மாபெரும் இலவச உயிரியல் பாடக் கருத்தரங்கு இன்று வியாழக் கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் காலை 8.15 மணிமுதல் பிற்பகல் 4.15 மணிவரை யாழ். ஆரியகுளம் புதிய உயர் தொழில்நுட்பவியல் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் தென்னிலங்கையைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் கருத்துரைகளை வழங்க வுள்ளனர்.

(ற)

### நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 14

வண்ணார்பண்ணை வடமேற்கு ஸ்ரீவிசுவேச விநாயகராலயத்தில் ஸ்ரீவிசுவேச விநாயகர் தல இலக்கியங்கள் நூல்வெளியீடு இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

ஆலயத்தின் மூல மூர்த்தி, பரிவார மூர்த்திகள் மீது பாடப்பட்ட ஊஞ்சற்பாக்கள், போற்றிப்பாமாலை ஆகியவை அடங்கிய தொகுப்பு நூலாகவும் ஆலயத்தின் பரிபாலன சபையின் முன்னாள் தலைவர் அமரர் தணிகாசலம் பத்மநாதன் ஞாபகார்த்தமாகவும் இந்த நூல் வெளியிடப்படுகின்றது.

ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா அன்று நிர்வாக சபைத் தலைவர் பூ.சிவனேசன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. (ற-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்க தேர்தலில் அனைவரும் ஆதரவை வெளிப்படுத்துங்கள்

## அமைச்சர் பஸில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

இந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்ட அரசுக்கு ஆதரவு வழங்க வேண்டும், அந்த ஆதரவை உள்ளூராட்சி தேர்தலில் வெளிப்படுத்த வேண்டும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாவலர் வீதி, கோயில் வீதி ஆகியவற்றை 'காப்பெற்' ஆக்கும் வேலைத்திட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயத்துக்குச் சமீபமாக தார்க்கலவை இயந்திரத்தை அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து இயக்கி பணியை ஆரம்பித்து வைத்தனர்.

அங்கு பஸில் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

இன்று யாழ்ப்பாணத்தில் பல்வேறு வீதிகளையும் 'காப்பெற்' வீதிகளாக மாற்றும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது.

இன்று நாட்டில் சமாதானம் நிலவுவதுடன் நிம்மதியான சூழலும் உருவாகியுள்ளது. அபிவிருத்தி மூலம் உங்களின் பல் தேவைகள் நிறைவேறக் கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

யாழ்ப்பாண மக்கள் அபிவிருத்தி செயற்பாடுகளுடன் கல்வி மற்றும் தொழில் வசதிகளையும் பெற வேண்டும். வடக்கு மக்கள் சகல வளங்களையும் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காகவும் அவர்களின் அடிப்படைத்தேவைகள் அனைத்தும் நிறைவு செய்யப்படவேண்டும் என்பதற்காகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முழு அக்கறை கொண்டுள்ளார்.



அவற்றில் ஒன்றாக வீதிகளை காப்பெற் வீதியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இளைஞர் யுவதிகள் எதிர்பார்ப்பது கடந்த காலங்களில் இழந்த பல்வேறு தொழிற்சாலைகள், வேலைத்தலங்கள் உருவாக வேண்டும் என்பதே. அவற்றை நிறைவேற்றவும் விவசாயம், மீன்பிடித் தொழில்களைச் செய்து அவற்றைச் சந்தைப் படுத்தவும் கூடியதான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

பின்தங்கிய வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு பல்வேறு நிறுவனங்களின் உதவியுடன் வீடு, மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம் - என்றார். (ஒ-ஐ-7)

# கிளிநொச்சியில் நேற்று கூட்டமைப்பினர் பிரசாரம்

கிளிநொச்சி, ஜூலை 14

உள்ளூராட்சி சபைக்கான தேர்தலில் கரைச்சிப் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று மாலை அம்பாள்குளம் பகுதியில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வேளமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் சங்கையா மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் நாவை குகராஜா, ம.சுகந்தன், சு.தயாபரன் உள்ளிட்ட வேட்பாளர்கள் உரையாற்றினர். நிகழ்வில் 200 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். (ஒ-10-6)

# தென்மராட்சி கல்வி வலய அலுவலகம் சாவகச்சேரியில் நாளை திறந்து வைப்பு

தென்மராட்சி, ஜூலை 14

தென்மராட்சி கல்வி வலய புதிய அலுவலகம் நாளை வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி ஹென்ஸ்மன் ஒழுங்கையில் மாகாண கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடமே திறந்து வைக்கப்படவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் மாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-207)

# நூல் அறிமுக விழா

தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம் எழுதிய ஆசிரியத் தலையங்கத் தொகுப்பான ''ஊருக்கு நல்லது சொல்வேன்'' நூல் அறிமுக விழா இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு கதிரேசன் வீதியிலுள்ள இலங்கை விஸ்வகர்ம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விழாவுக்கு மேற்படி நிதியத்தலைவர் எழுச்சித்தந்தை ஆர்.எம்.நாகலிங்கம் தலைமை வகிப்பார். பேராசிரியர் அ.மோகனதாஸ், உடுவை எஸ்.தில்லைநடராஜா, பேராசிரியர் டாக்டர் எம்.கருணாநிதி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (ஒ-160)

# கொழும்பு பல்கலைக்கழகத்தில் இந்திய ஆய்வு மையம் அமைப்பதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்து

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சமகால இந்திய ஆய்வு மையம் Centre for Contemporary Indian Studies & CCIS ஒன்று ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கையில் கடந்த 12 திகதி அன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான கல்விசார் ஓர் உறவின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ள சமகால இந்திய ஆய்வு மையத்தை ஆரம்பிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் இந்திய உயர் ஆணையாளர் ஆசோக் கே.காந்தா மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் Kshanika Hirimburegama ஆகியோர் இலங்கை வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் முன்னிலையில் நேற்றுமுன்தினம் கையொப்பமிட்டுள்ளனர்.

இப்புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், CCIS I உருவாக்குவதற்காக 56.5 மில்லியன் ரூபாக்களும், ஏனைய கல்வி சார் ஆராய்ச்சி அபிவிருத்தி உதவிகள், நூலகம் அமைத்தல், தகவல் தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட வள மையம் உருவாக்கல் போன்றவற்றிற்கான உதவிகளும் இந்தியாவால் வழங்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என உயர் ஆணையகத்திலிருந்து வெளியிடப்பட்ட ஊடகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இரு நாடுகளுக்கிடையில் காணப்படும் மிகப் பலமான கல்விசார் உறவிற்கு தற்போது உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள சமகால இந்திய ஆய்வு மையம் மேலும் வலுச்சேர்க்கும் என பேராசிரியர் Kshanika Hirimburegama நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

யூன் 2010 ல் இலங்கை அதிபர் இந்தியாவிற்கான தனது சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்த போது இம்மையத்தை உருவாக்குவதற்கான ஆரம்ப முயற்சிகள் உருவாக்கப்பட்டதாக உயர் ஆணையாளர் அசோக் காந்தா தெரிவித்துள்ளார். (எ-10)

# வெளிநாட்டு தமிழ் அமைப்புகள் மீது போர்க்குற்ற விசாரணை அவசியம்

## லியம் பொக்ஸுக்கு கொழும்பு ஆலோசனை

இலங்கையில் இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் கொழும்புக்கு எதிராகச் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தும் வெளிநாட்டு தமிழ் அமைப்புக்கள் மீது அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகள் அமைப்பில் சிறுவர்களை இணைத்துக் கொண்டமை தொடர்பாக வெளிநாட்டு தமிழ் அமைப்புகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளாக முன்வைத்து இக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்த அரசாங்கம் திட்டம் போட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் படைத்தளபதிகளால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்களுக்கு வெளிநாடுகளில் நிதி சேகரித்து ஆயுதங்களை கொள்வனவு செய்து அனுப்பிய வெளிநாட்டு தமிழ் அமைப்புகளை பொறுப்பு கூறவைப்பதற்கான முனைப்புகளை அரசு மேற்கொண்டுள்ளது.

இதனடிப்படையில் வடக்கு கிழக்கில் காணாமற்போன சிறுவர்கள் தொடர்பில் யுனிசெவ் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையை கடந்த 9ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்திருந்த பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சர் லியாம் பொக்ஸிடம் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கையளித்துள்ளார். இதன் போது வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் சமுகமளித்திருந்தனர். (எ-10)

# அமைச்சரவை அமைச்சர்களின் சொத்தை ஏலத்தில் விற்க வேண்டும்: ஜே.வி.பி.

ஹெஜிங் உடன்படிக்கையின் படி ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கிக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் செலுத்த வேண்டுமென லண்டன் நீதிமன்றம் உத்தரவிட்ட 162 மில்லியன் டொலர்களை திரட்டுவதற்கு அமைச்சரவை அமைச்சர்களினதும் மத்திய வங்கி ஆளுநரினதும் சொத்துகளை ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என ஜே.வி.பி. கூறியுள்ளது.

நாட்டிற்கு நட்டத்தை ஏற்படுத்திய இந்த ஹெஜிங் உடன்படிக்கைக்கு ஜனாதிபதியின் ஆதரவுடன் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத் தலைவர் அனுர குமார திஸாநாயக்க கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், உலக சந்தையில் எரிபொருளை வாங்குவதற்கு இத்தகைய ஒப்பந்தம் அவசியம் என வலியுறுத்தி 06.09.2006 ஆம் திகதி அமைச்சரவைக்கு விளக்கமளித்தாகவும் அனுரகுமார திஸாநாயக்க கூறினார்.

'அதன்பின் இது குறித்து ஆராய்வதற்கு மத்திய வங்கி அதிகாரிகளை உள்ளடக்கிய குழுவொன்றை அமைச்சரவை நியமித்தது. இக்குழுவின் சிபாரின்படியே 5 வங்கிகளுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த குழுவின் அறிக்கை திறைசேரியின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டது. எனவே அமைச்சரவை அமைச்சர்கள் இதற்கு பொறுப்பேற்கவேண்டும். இதற்கான பொறுப்பை வேறு எவர் மீதும் சுமத்த முடியாது' என அவர் கூறினார். (எ-10)

# வடக்கு முஸ்லிம்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை இல்லை: அமைச்சர் றிசாட்

கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் வட மாகாணத்திலிருந்து விடுதலை புலிகளினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீள்குடியமர்த்த அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அமைச்சர் றிசாட் பதியுதீன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனினும் இதற்காக வேண்டி நானும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக்கும் இணைந்து பாடுபடுவோம் என புலிகளினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்களில் ஒருவரான அமைச்சர் றிசாட் பதியுதீன் குறிப்பிட்டார்.

வட மாகாணத்தில் அரசு மேற்கொள்ளும் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,''இறுதிக் கட்ட யுத்தத்தில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கை மிக விரைவில் நிறைவடையவுள்ளது.

இதனையடுத்து, புத்தளம், அநுராதபுரம் போன்ற பல இடங்களில் உள்ள வட மாகாண முஸ்லிம்களை மீள்குடியமர்வுக்கான நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. (எ-10)

# சென்னை செல்லும் ஹிலாரி; இலங்கை குறித்துப் பேசுவாரா?

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் எதிர் வரும் 19ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

தமிழ் நாட்டுக்கும் செல்லவுள்ள அவர் தமிழ்நாட்டில் தங்கியிருக்கும்போது அரசுடன் இலங்கை உட்பட வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தமாட்டாரென இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவரது விஜயம் அரசு ரீதியாக அமையாதென நிகழ்ச்சி நிரலில் தெரிவிக்கப்படுகிறது. சிவில் சமூக மற்றும் அபிவிருத்தி விவகாரம் தொடர்பான கொள்கையாளர்களையும் அரசசார்பற்ற அமைப்புக்களையும் அமெரிக்கக் கம்பனிகளின் பிரதிநிதிகளையும் வர்த்தக குழுவினரையும் சந்தித்து அவர் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

'வெளிநாட்டு கொள்கைகள் தொடர்பான அனைத்து கலந்துரையாடல்களும் புதுடில்லியில் நடைபெறும். வெளிநாட்டு அமைச்சர்களுடனான சந்திப்பில் அயல் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும்' என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஞ்சம் கோரும் அகதிகளை ஏற்றுக்கொள்ளுங்கள்
# நியூஸிலாந்து அரசிடம் தமிழர் அமைப்புக் கோரிக்கை

நியூஸிலாந்து அரசிடம் அரசியல் தஞ்சம் கோரும் 85 தமிழ் அகதிகளையும் அகதிகளாக அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளுமாறு பிரான்ஸ் நாட்டு தமிழர்நடுவம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரான்ஸிலிருந்து அந்த நாட்டு தமிழ் மக்களின் உணர்வைப் பிரதிபலித்து தமிழர் நடுவம் இந்த அவசர நடவடிக்கை தொடர்பான கடிதத்தினை நியூசிலாந்து தூதரகம் ஊடாக நியூஸிலாந்து அரசிடம் கையளித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தஞ்சம்கோரும் அகதிகளை அங்கீகரிப்பது 1951ஆம் ஆண்டு ஐ.நா. அகதிகள் சாசனம் மற்றும் 1967 மேலதிக உடன்படிக்கைகளின் கையொப்பதாரரான நியூஸிலாந்து அரசின் கடமை ஆகும்.

இலங்கை அகதிகள் நியூஸிலாந்து நோக்கி கப்பலில் பயணிக்கையில் கப்பல் பழுதடைந்து நடுக்கடலில் வைத்து இந்தோனேஸிய கடற்படையிடம் அகப்பட்டுள்ள 85 தமிழ் அகதிகளும் நியூஸிலாந்து அரசிடம் அரசியல் புகலிடம் கோரியுள்ளனர்.

எனினும் முள்ளிவாய்க்கால் வரை இலங்கையின் போர் நடவடிக்கைகளை எதிர் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களை உள்ளடக்கிய இந்த அகதிகளின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள நியூஸிலாந்து அரசு தயங்குகின்றது.

இந்தப் பின்னணியில் மேற்படி அகதிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என பல தமிழர் அமைப்புக்களும் மனித உரிமைகள் அமைப்புக்களும் நியூஸிலாந்து அரசிடம் கோரிவருகின்றன.

85 தமிழ் அகதிகளும் இலங்கை அரசின்போர்க்குற்றங்களை நேரில் கண்டு பாதிக்கப்பட்ட மக்கள் என்பதால் இந்த மக்களைப் பாதுகாக்க வேண்டியது சர்வதேச போர்க் குற்ற விசாரணைகளை கோரிநிற்கும் மக்களின் கடமை என தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளது. (வ)

## முருங்கைக்காய் விலை சரிந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 14


யாழ்ப்பாணத்தில் முருங்கைக்காயின் விலை திடீரென சரிந்து காணப்படுகின்றது.

மன்னாரில் இருந்து பெருமளவு முருங்கைக்காய் எடுத்துவரப்படுவதாலேயே அவற்றின் விலைசரிவதற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரத்தில் ஒருகிலோ முருங்கைக்காய் 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

மன்னாரில் இருந்து முருங்கைக்காய் எடுத்துவரப்பட்டதை அடுத்து திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ முருங்கைக்காய் 150 ரூபாவுக்கு நேற்றுமுன்தினம் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-26)

## ஆசிய பசுபிக் சிறுவர் இணைப்புத் திட்டம் தரம் 5 மாணவர்கள் ஜப்பான் பயணம்



வலி. வடக்கு, ஜூலை 14

ஆசிய பசுபிக் சிறுவர்கள் இணைப்புத் திட்டத்தின் கீழ் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் கடந்தாண்டு அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் ஆறுபேர் ஜப்பானுக்கான பயணத்தை இன்று ஆரம்பிக்கின்றனர்.

கடந்த மூன்று மாதங்களாக இவர்கள் ஜப்பான் மொழியை கொழும்பில் கற்றதுடன் ஜப்பான் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் அந்த நாட்டின் பழக்கவழக்கங்களை அறியவும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு மாணவியும் ஏனைய இடங்களைச் சேர்ந்த ஐந்து மாணவ, மாணவிகளுமாக மொத்தம் ஆறு மாணவர்கள் இந்தச் சுற்றுலாவில் இடம் பெற்றுள்ளார்கள்.

இவர்களுடன் முகாமையாளராக ஸ்ரீயாணி ஹேவாஹடம் உதவியாளர்களாக ரி.எம். ரிலக்கமல் முதுஹம டில்சான் ஜெயதிலகவும் செல்லவுள்ளார்கள்.

இந்த அணியில் யாழ்ப்பாணம், உடுவில் மகளிர் கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தவரும் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி கற்பவருமான தாரணி இந்திரன், களுத்துறை முஸ்லிம் பெண்கள் மகாவித்தியாலய பசிதா பாறுக், கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த நவீன் ஆர்.பிறேமரத்தினா, கொழும்பு ஆனந்தாக் கல்லூரியைச் சேர்ந்த சானுஜா எதிரிசிங்கா, காலி மகிந்தா வித்தியாலயத்தைச் சேர்ந்த லகித் நவவோதயா, கொழும்பு விசாக வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜே. ஜீ.பி.களனி பயிசரா ஆகியோர் இந்த சுற்றுலாவுக்குச் செல்கின்றனர். இவர்கள் ஒரு மாத காலம் ஜப்பானில் தங்கி நின்று பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## பயிற்சி பெற்ற தாதியர் தற்காலிக நியமனம்

தென்மராட்சி, ஜூலை 14

யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாகாண வைத்தியசாலைகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு 15 பேர் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

பயிற்சியின் நிறைவிலான பரீட்சைக்குத் தோற்றியுள்ள இவர்கள் நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை மாகாண வைத்தியசாலையில் பணியாற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

## இலவச மருத்துவ முகாம்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தால் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை தாளையடி தேவாலயத்தில் இலவச மருத்துவமுகாம் நடத்தப்படவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் பொது மருத்துவம், சத்திரசிகிச்சை, சிறுவர் மருத்துவம்,கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை,காது, மூக்கு, தொண்டை சிசிச்சை, தோல் சிகிச்சை, பற்சிகிச்சை ஆகியவற்றுக்கான மருத்துவ சேவைகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் நடமாடும் ஆய்வுகூட மருத்துவ சோதனைகளும், ஈ.சி.ஜி ஸ்கானிங் பரிசோதனைகளும் இடம்பெறும்.(ற-313)

* * *

நாவற்குழி, ஜூலை 14

தியாகி அறக்கொடை நிதியம் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து நடத்திவரும் முதியோருக்கான இலவச மருத்துவ முகாமுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலகப் பிரிவு ரீதியாகக் கரவெட்டியில் 17 ஆம் திகதியும், கோப்பாயில் 24 ஆம் திகதியும், சண்டிலிப்பாயில் 31 ஆம் திகதியும் கோப்பாயில் ஒகஸ்ட் 7 ஆம் திகதியும் சண்டிலிப்பாயில் ஒகஸ்ட் 14 ஆம் திகதியும் மருத்துவ முகாம் இடம் பெறவுள்ளது. (எ-121)

### பயிற்சி வகுப்புகள்

தென்மராட்சி
ஜூலை 14

உள்ளூர்அதிகார சபைத் தேர்தலின் வாக்களிப்பு நிலையங்களில் எழுதுநராகக் கடமையாற்றவுள்ள தென்மராட்சி பிரதேச உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பு நாளை வெள்ளிக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது என்று தெரிவத்தாட்சி அலுவலர் ஆ.சுவாமிநாதன் அறிவித்துள்ளார். ( ம-207)




எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் தவராசா புவனேஸ்ரன்

திதி: பிரதமை

மண்ணில்: 17.02.1974
விண்ணில்: 14.07.2003

எங்கள் உயிரோடு கலந்துவிட்ட நீங்கா நினைவுகளில் உங்களின் ஆத்மா சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

பழைய பொலிஸ் நிலைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

## தேவை

சாவகச்சேரி நகரில் உள்ள கணக்காய்வு நிறுவனமொன்றுக்கு கணக்கு எழுதுநர்கள் உடன் தேவை. வேலை தொடர்பான பயிற்சி வழங்கப்படும். க.பொ.த.உயர்தர வர்த்தகப் பிரிவு பரீட்சையில் சித்தி பெற்று கணினி மற்றும் ஆங்கில அறிவுடைவர்கள் விண்ணப்பிக்கலாம்.

நவரட்ணம்ஸ் அன்ட் கம்பனி
MUF/16, நவீன சந்தை மேல்மாடி.
சாவகச்சேரி.

T.P.NO. 0771971300

C/574885

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1309 நீலம்

கன்னி

13 19 30 55

12-07-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 3,139,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 258,618 | 20/- | 5,172,360/- |
| 2 இலக்கங்கள் | 23,775 | 40/- | 951,000/- |
| 1 இல. + லக்கினம் | 23,568 | 60/- | 1,414,080/- |
| 2 இல. + லக்கினம் | 2,146 | 200/- | 429,200/- |
| 3 இலக்கங்கள் | 623 | 1000/- | 623,000/- |
| 3 இல. + லக்கினம் | 57 | 10,000/- | 570,000/- |
| 4 இலக்கங்கள் | 04 | 200,000/- | 800,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,139,200/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,959,640/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 695 | | 646,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 309,486 | | 10,605,640/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,294,650/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

15 24 37 52

ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 692 | 500/- | 346,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 200,000/- | |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 695 | | 646,000/- |

இந்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 300,000/-

## வாழ்த்துகின்றோம்

12 ஆண்டுகளின் பின்னர்........
வவுனியா நகரசபை நடத்தும்

"பௌர்ணமி கலை விழா"

காலம்: இன்று

(14.07.2011) வியாழன் பிற்பகல் 3.00 மணி

இடம்:

புதிய கலாசார மண்டபம்,நகரசபை, வவுனியா

தலைமை

எம்.எம்.ரதன்

உப தலைவர், நகரசபை, வவுனியா.

இந்த நிகழ்வு சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்:

செந்தில்நாதன் நற்பணி மன்றம்,
1ஆம் குறுக்குத்தெரு, வவுனியா.

எஸ்.மயூரன்
தலைவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்தியா மனமார்ந்து உதவினால்...

தமிழர்களுக்கு நியாயமானதும் நீதியானதுமான அரசியல் தீர்வு கிடைக்க இந்தியா தனது முழுப் பங்கையும் வழங்கும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கைக்கான இந்தியாவின் பிரதித் தூதுவர் விக்ரம் மிஸ்ரா.

இனப் பிரச்சினைக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண வேண்டிய கட்டாய நிலைக்குள் இலங்கை தள்ளப்பட்டுள்ளது. இந்தக் கட்டத்தில் இந்தியா தனது முழுப் பங்கையும் வழங்கும் - என்றும் அவர் கூறியுள்ளார்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான பிரசைகள் குழுவினரை சந்தித்து உரையாடிய வேளை, குழுவினர் விடுத்த கோரிக்கை ஒன்றுக்குப் பதில் அளித்த போதே, இந்தியப் பிரதித் தூதுவர் தமது நாட்டின் இப்போதைய நிலைப்பாட்டை வெளியிட்டார்.

இலங்கையின் இனப்பிரச்சினையை - தமிழர்களுக்கு உள்ள பிரச்சினையை - தீர்ப்பது குறித்து இந்திய அரசு கரிசனை காட்டும் தொனியில் நீண்ட காலமாக அவ்வப்போது கருத்துக்களை வெளியிட்டு வந்தது. இப்போதும் அவ்வாறே சொல்லிக்கொள்கிறது. கடந்த மாத இரண்டாவது வாரத்தில் கூட இந்திய அரசின் உயர்மட்டத் தூதுக் குழு ஒன்று கொழும்பு வந்து சென்றது.

அந்தவேளை, இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்திய அரசு அளவுக்கு மிகுதியாக, மூக்கை நுழைக்கத் தாம் அனுமதிக்கப்போவதில்லை என்ற தொனியில் இலங்கை ஜனாதிபதி இந்திய அதிகாரிகளிடம் உறுக்கிக் கூறும் தொனியில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இவற்றை மனதில் வைத்தே, இலங்கைத் தமிழர் தரப்பு சலிப்படைந்திருப்பதைப் பிரதிபலிக்கும் கருத்துக்களை சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவினர், குடாநாட்டு மக்கள் சார்பில், தமது ஆதங்கத்தை இந்தியப் பிரதித் தூதுவரிடம் வெளியிட்டிருந்தனர்.

இந்திய அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் வரை பலரும் இலங்கைக்கு வந்து போகின்றனர். கொழும்பில் அரச பிரதானிகளுடன் பேசுகின்றனர். ஆனால் ஆக்கபூர்வமாக, தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்குவது சம்பந்தமாக உருப்படியாக எதுவும் கருக்கொள்ளவில்லை.

இத்தகைய அந்தகாரமான நிலையில் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு அமுங்கிப் போகும் நிலையைச் சுட்டிக்காட்டிய சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான தூதுக்குழு -

இப்போதாவது தனது உணர்வுபூர்வமான பங்களிப்பை நல்கி, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை உருவாக்குவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கோரியுள்ளது.

நாட்டில் முப்பது வருடப் போர் முடிவுற்று, சமாதானமும் அமைதியும் ஏற்பட்டுள்ள சாதகமான சூழ்நிலையைத் தக்கவாறு பயன்படுத்தி, இனப்பிரச்சினைக்கு தமிழர்களின் அரசியல் உரிமைகளை வழங்கக்கூடிய உரிய சந்தர்ப்பம், ஆட்சியிலுள்ள மஹிந்த அரசுக்குக் கிடைத்துள்ளது. நாட்டு நலனில் ஓர் அலகாகக் கொண்டு தமிழர்களின் உரிமைகளை வழங்கும் விருப்பம் அரசுக்கு் இருப்பின், இந்தக் காலம் அதற்கு மிகவும் பொருத்தமான ஒன்றாகும்.

ஆனால், அதற்கான மனப்போக்கையோ விருப்பத்தையோ அரசிடம் காண முடியவில்லை. அரசமைப்புக்கான பதின்மூன்றாவது சட்டத்திருத்தத்தில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளை, தார் பூசி அழித்துவிட்டு, அவற்றுக்குப் பதிலாகச் சில சில்லறை உரிமைகளை வழங்குவதற்கே அரசு மேளம் கொட்டுவதாகத் தோன்றுகிறது.

இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதற்கு தனக்கு விருப்பம் உண்டென இந்தியாவுக்கும் சர்வதேசங்களுக்கும் காட்டிக்கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச்சுக்களை ஆரம்பித்தது. ஆனால் அவை ஆமை வேகத்தில் நகர்கின்றன. அரசியல் தீர்வுக்கான அரிச்சுவடி கூட இன்னும் பேச்சு மேசைக்கு எடுக்கப்படவில்லை.தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சமர்ப்பித்த ஒன்பது பிரதான அம்ச அரசியல் அதிகாரப் பொறிமுறை குறித்துத் தொட்டும் பார்க்கவில்லை அரசு. அடுத்த தடவை, பின்னர் பார்ப்போம் என்று காலைப் பின்னுக்கு வைத்து நடக்கவே முனைகிறது!

அதற்கிடையில், குட்டையைக் குழப்பக்கூடிய தெரிவுக்குழுவையும் தூக்கிப்பிடிக்கிறது அரசு.தெரிவுக்குழு தீர்வு குறித்து ஆராய்ந்துகொண்டிருக்கும் போது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனான பேச்சு சமாந்தரமாக தொடரும் என்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமது கட்சி ஒத்துழைக்கத் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கா தெரிவித்தபோதிலும் அரச தரப்பு அதனைக் காதில் போட்டதாக இல்லை.

எல்லா வகைகளிலும், தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்குவதில் இலங்கை அரசுக்கு உண்மையான, இதய சுத்தியான விருப்பம் இன்னும் உணர்வு பூர்வமாகப் பிறக்கவில்லை என்பது புலப்படுகிறது.

இந்தியப் பிரதித் தூதுவர் மிஸ்ரா தெரிவித்திருக்கும் கருத்து இந்த வேளையில் அவதானிக்கப்படவேண்டிய ஒன்றே.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 1987முதல் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட தவறுகளாலும் ஒரு சாராரின் விருப்பம் இன்மையாலும் அவை வெற்றி பெறவில்லை. இவை நடந்து முடிந்தவை-

இன்று நிலைமை அப்படியல்ல. நிரந்தரமான தீர்வுத் திட்டம் ஒன்றைக் காணவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேச்சுக்களை நடத்துகின்றன. அவை நம்பகத் தன்மையுள்ளவையாகக் காணப்படுகின்றன. இலங்கை அரசு நாடாளுமன்றத் தெரிவுக்குழு யோசனையை முன்வைத்துள்ள போதிலும் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கட்டாயம் அதிகரித்துள்ளது-

அரசியல் தீர்வு என்பது வடக்கு, கிழக்கு மக்களுக்கு கண்துடைப்பாக அமையாது. அதேவேளை இலங்கையில் வாழும் எல்லாத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உணர்வுபூர்வமானதாகவும் அமையவேண்டும். அதற்குரிய முழுப் பங்களிப்பையும் இந்தியா வழங்கும் - என்று அந்த நாட்டின் பிரதித் தூதுவர் மிஸ்ரா தமது கருத்துகளையும் அவதானிப்புகளையும் விவரித்திருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நியாயமான, உகந்த தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இந்தியாவுக்குப் பெரும் பங்குண்டு என்றே தமிழ் மக்கள் நீண்டகாலமாக நம்பி வருகிறார்கள். ஆனால் தனக்குரிய அந்தப் பங்கை ராஜ தந்திர முறையில் மேற்கொள்வதில், அது போதியளவில் உள்ளார்த்தமாக செயற்பட முனைந்தது மிக மிகக் குறைவே.

இந்தியப் பிரதித் தூதுவரின் கருத்து அவரது நாட்டு அரசின் நிலைப்பாடா அல்லது அவரது தனிப்பட்ட அவதானிப்பா என்பதனை நிச்சயப்படுத்தி வகுத்துக் கொள்ள முடியாது. எனினும் இந்தியாவின் மறைமுகமான பங்களிப்பும் தூண்டுதலும் இல்லாமல் காரியம் ஒப்பேறுவது கடினம் என்பதனையே இப்போதைய பூகோள அரசியல் வலைப்பின்னல் தெளிவாகக் காட்டுகிறது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் - அதாவது இலங்கை தனது நிதித் தேவை மற்றும் வர்த்தக வளத்துக்குத் தங்கியிருக்கும் நாடுகளுடன் - இந்தியா சேர்ந்து உழைத்தால் மட்டுமே, இனப் பிரச்சினைத் தீர்வில் அதனால் [illegible] பங்களிப்பை வழங் க முடியும். அது குறித்து சிந்திக்கக் கூடாதா?

# தேசத்தின் மகுடம் கண்காட்சியில் வடக்கு மாகாணத்துக்கும் முக்கியத்துவம்

**அதன் தலைவர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய**

யாழ்ப்பாணம், ஜூலை 14

தேசத்தின் மகுடம் கண்காட்சியில் வட மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களையும் அபிவிருத்தியில் பங்கெடுக்கச் செய்வோம்.

தேசத்தின் மகுடம் கண்காட்சியின் தலைவர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய இவ்வாறு வட மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவித்துள்ளார்.

ஆறாவது தடவையாக தேசத்தின் மகுடம் கண்காட்சி அனுராதபுரம் - ஓயாமடுவில் இடம்பெறவுள்ளது.

2007 ஆம் ஆண்டில் இருந்து தேசத்தின் மகுடம் கண்காட்சி இடம்பெறுகின்றது.

ஆனால் 2012 இல் ஒயாமடுவில் நடக்கும் கண்காட்சியில் வடக்கில் உள்ள 34 சபைகளும் பிரத்தியேகமாக செயற்படுவதற்குரிய இடம் ஒதுக்கப்படும்.

இதன் ஊடாக வெளிப்படும் அபிவிருத்தி - நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும்.

இதற்காக 22 ஆயிரம் மில்லியன் ரூபா செலவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-302)

# வேலையற்ற பட்டதாரிகளாக நாட்டில் 89 ஆயிரத்து 472 பேர்

யாழ்ப்பாணம், ஜூலை 14

சகல மாவட்டங்களிலும் இருந்தும் இறுதியாக தொகுத்த பட்டியலின் பிரகாரம் 89 ஆயிரத்து 472 வேலையற்ற பட்டதாரிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு மாவட்ட அரச அதிபர் ஊடாக தொகுத்த வேலையற்ற பட்டதாரிகளின் பட்டியலில் இருந்தே இதற்கான விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டிலிருந்து 2011 வரை நாட்டின் உள்நாட்டு-வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறி இதுவரை வேலையற்றோர் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரமே பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் உள்ளன.

இதில் இருந்து முதற்கட்டமாக 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச திணைக்களங்களிலும், கூட்டு ஸ்தாபனங்களிலும், சபைகளிலும், தனியார் வங்கிகளிலும் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட பட்டதாரிகள் ஆண்டு மூப்பின் அடிப்படையில் தெரிவுசெய்ய தேசிய வரவு செலவு திட்டப் பணிப்பாளர் நாயகம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

(எ-302)

# தமிழர்களின் புகலிடக் கோரிக்கைக்கு நியூசிலாந்து அரசின் நடவடிக்கை என்ன?

**யாகூ இணையம் கருத்துக் கணிப்பு**

இந்தோனேஸிய கடற் படையால் கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர்களின் புகலிடக் கோரிக்கை தொடர்பாக எந்த விதமான நடவடிக்கையை நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக கருத்துக் கணிப்பு ஒன்றை யாகூ இணையத் தளம் மேற்கொள்கிறது.

புகலிடம்கோரிய இலங்கை அகதிகளை நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டுமா ?, கனடா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் பேச்சுக்களில் ஈடுபட வேண்டுமா? சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்ப வேண்டுமா? எதுவும் சொல்லத் தெரியவில்லையா? என நான்கு கேள்விகள் மேற்படி இணையத் தளத்தால் கருத்துக் கணிப்புக்காக கேட்கப்பட்டுள்ளன.

ஆயினும் கருத்துக் கணிப்பில் இதுவரையான முடிவுகள் இந்தத் தமிழர்களுக்கு சாதகமாக அமையவில்லை. 18ஆயிரத்து 790 பேர் வரை வாக்களித்துள்ளனர்.

இதேவேளை மேற்படி அகதிகளை சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்று 11ஆயிரத்து 574 பேரும், கனடா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று 2ஆயிரத்து 422 பேரும், நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டும் என்று 4ஆயிரத்து 255 பேரும், சொல்லத் தெரியவில்லை என்று 539 பேரும் வாக்களித்துள்ளனர் என்று தகவல்கள் குறிப்பிடுகின்றன. (வ)

# சிவத்தம்பியின் நினைவு அஞ்சலிக் கூட்டம்

நெல்லியடி, ஜூலை 14

வடமராட்சி இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் நினைவு அஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணியும் விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணனும் முன்னாள் தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் த. அஜந்தகுமார், மூத்த எழுத்தாளர் குப்பிளான் ஐ. சண்முகம் உதவிக் கல்விப் பணிப்பாளர் அனாதரட்சகன் ஆகியோர் உரையாற்றுவர்.

(ஒ-319)

## பக்தனின் குணாம்சம்

மாசற்ற பக்தி கொண்டவனே உண்மையான பக்தன். அவனுக்கு வரும் எத்தகைய நிலையும் "அது இறைவனால் கொடுக்கப்பட்டது" என எண்ணி அதைத் தயக்கமில்லாது சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளும் பண்பு இருக்கவேண்டும்.

ஒருவனுக்கு எதிர்வரும் கஷ்டங்கள், தொந்தரவுகள், இடையூறுகள், துன்பங்கள் அனைத்தையும் அவன் தாங்கி நின்று ஈடுகொடுத்து வரும்போதுதான் அவனது உண்மையான பலமும் பெறுமதியும் பிரகாசிக்கும்.

பலர் தாம் அடியார்கள் என்று கூறிக்கொள்வார்கள். ஆனால் அவர்கள் தம்மை முறையாகக் கொண்டு நடத்துவதில்லை. உண்மையான பக்தி என்பது உறுதியான நம்பிக்கையால் ஊன்று கோலிடப்பட்டது. அத்துடன் ஸ்திரமானது எவ்வித சந்தர்ப்பங்களிலும் மாற்றமுறாதது. இவ்விதமிருந்தால்தான் பக்தியின் உண்மையான பலனை பக்தன் பெறத் தகுதி வாய்ந்தவனாகின்றான்.



*(நன்றி: சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்)*

**சாயி சிந்தனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.தேர்தல் நிலைமை குறித்து அமெரிக்கத் தூதரக அதிகாரி ஆராய்வு



யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பிலும் அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அலுவலர் ஜோன் எம்.டிஸ்ரார் நேற்று நேரில் வந்து ஆராய்ந்தார்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வந்த அவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்.செயலகத்துக்கு நேற்றுக் காலை விஜயம் செய்த அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறவுள்ள தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகள் எந்தளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன வாக்காளர் இடாப்பு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதா? எத்தனைபேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்? என்பது தொடர்பான விவரங்களைக் குழுவினர் பெற்றுக் கொண்டுள்ளனர்.

மேலும் வேட்பாளர்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பாகவும் அதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் அரச அதிபரிடம் கேட்டு அறிந்து கொண்டுள்ளனர். (ம-15)

# வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் வான் தோண்டும் பணிகள் ஆரம்பம்

வடமராட்சி, ஜூலை 14

வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் பொலிகண்டி மேற்கு பகுதியில் வான் தோண்டும் பணி பாரம்பரிய மற்றும் சிறுகைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பிரதேச கடற்பரப்பில் தொண்டைமானாறு தொடக்கம் பொலிகண்டி வரை ஏற்கனவே வான் தோண்டப்பட்டிருந்தது. முனை வரையான கடற் பகுதியில் வான் தோண்டப்படாமல் இருந்து வந்தது. இது தொடர்பாக பொலிகண்டி தொடக்கம் முனைவரையாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தத்தம் பகுதி கடற் பகுதிகளிலும் வள்ளங்கள், கட்டுமரங்களை கடலுக்குள் கொண்டு செல்லவும், கடலிலிருந்து கரைக்குக் கொண்டு வரவும் வான் தோண்டப்பட வேண்டும் என அமைச்சரிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்தே வான் தோண்டாத பகுதிகளில் வான் தோண்டுவதற்கான பணிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார். வான் தோண்டும் பணி முனை கடற்பகுதிவரை தொடர்ந்து நடைபெறும். (த-236)

# மானிப்பாய் இராஜகாரியார் வீதி மக்கள் பாவனைக்குத் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

மானிப்பாய் இராணுவ முகாமுக்கு அருகில் அமைந்துள்ள இராஜகாரியார் வீதி நேற்றுமுன்தினம் மாலை 5 மணி முதல் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி உச்சியோடை, கட்டுடை, சங்குவேலி ஆகிய பிரதேசங்களுக்குச் செல்லும் குறுக்கு வீதியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

யுத்த காலத்தின்போது மூடப்பட்ட இந்த வீதியின் இரு மருங்கிலும் இராணுவக் காவலரண்கள் அமைந்திருந்தமையால் மக்கள் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் முதல் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த வீதியால் மக்கள் தற்போது போக்குவரத்துச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-313)

# பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் நாளை தென்மராட்சிக்குப் பயணம்

தென்மராட்சி, ஜூலை 14

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்டக் குழு நாளை வெள்ளிக்கிழமை தென்மராட்சிப் பிரதேசத்துக்கு வருகை தரவுள்ளது.

தென்மராட்சி நகரசபையின் நெல்சிப் திட்டத்தால் மேற்கொள்ளப்படவுள்ள இராமலிங்கம் பழைய பாடசாலை வீதி, மீசாலை கேணியடி வீதி ஆகியவற்றின் சேவைகளை ஆரம்பித்துவைப்பதுடன் தொடர்ந்து நாவற்குழி கோப்பாய் உவர் தடுப்பாணை திறப்பு நிகழ்வும் சரசாலைப் பிரதேச மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தின் ஆரம்பநிகழ்வும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து கெயார் நிறுவனத்தால் புனரமைக்கப்படவுள்ள முதலாம் மைல் வீதி, இரண்டாம் ஒழுங்கையின் திருத்தப் பணிகளுக்கான ஆரம்ப நிகழ்வும் கேரதீவு நாவற்குழி ஆகிய வீதிகளின் ஆரம்பப் பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

மீசாலையில் அமைக்கப்பட்டுள்ள பழவகை உற்பத்திகளின் கட்டடத் திறப்பு விழா, மீசாலைப் பிரதேச விவசாயிகளுக்கு விவசாய உபகரணப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு ஆகியவற்றிலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு தென்மராட்சி கலை, கலாசார மண்டபத்தில் பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சர் ரத்னாயக்கா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், தென்மராட்சிப் பிரதேச செயலாளர், மாகாண அமைச்சின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-207-313)

# அதிக பயணிகளுடன் சென்ற பஸ் உரிமையாளருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூலை 14

அதிகமான பயணிகளை பஸ்ஸில் ஏற்றிச் சென்ற குற்றத்துக்காக பஸ் உரிமையாளரை ஆயிரம் ரூபா அபராதமாகச் செலுத்தும்படி உத்தரவிட்ட யாழ்.நீதிமன்ற மேலதிக நீதவான் அ.பிரேம்சங்கர், அபராதம் செலுத்தத் தவறின் ஒரு மாதகால சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார்.

யாழ்.நகரிலிருந்து புறப்பட்ட பஸ் ஒன்றில் அளவுக்கதிகமாகப் பயணிகளைத் திணித்து அடைத்துச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ். பொலிஸாரால் பஸ் உரிமையாளருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கிலேயே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

(ஒ-4)

## மாணவர் கைவண்ணம்....



புதிய வருகை: கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை சமூக விஞ்ஞான மன்றம் 'களம்' கையெழுத்துச் சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. பாடசாலை கேட்போர் கூடத்தில் சமூக விஞ்ஞான மன்றத் தலைவி க.தர்ஷிகா தலைமையில் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது. சஞ்சிகையின் முதற் பிரதியை மன்றத் தலைவியிடமிருந்து பாடசாலை அதிபர் கா.சசிகரன் பெற்றுக் கொள்கிறார்.

(ம-36)

# உயர்தரத்துக்கு தோற்றவுள்ள மாணவருக்கு உதவு தொகை

கைதடி, ஜூலை 14

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழகம் இந்த ஆண்டு கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உதவு தொகை வழங்கும் நிகழ்வு ஒன்றை அண்மையில் கைதடி மத்தி வளர்மதி கல்விக் கழக வளாகத்தில் நடத்தியது.

மேற்படி கழகத்தின் தலைவர் லயன் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக டென்மார்க் கிளையின் நிர்வாக உறவுகள் பி.இராஜேந்திரன் தர்மலிங்கம் தம்பதிகள் மற்றும் லண்டன் நிர்வாகக் கிளையின் துணைத்தலைவர் எஸ்.சிவராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் 24 மாணவர்கள் உதவு தொகை வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இந்த விழாவில் கைதடியைச் சேர்ந்த சனசமூக நிலையங்கள் பலவற்றின் பிரதி நிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-288)

# உரமானியம் பெறுவதற்கு பதிவுகள் ஆரம்பமாகின

யாழ்ப்பாணம், ஜூலை 14

2011/2012 காலபோக நெற்செய்கைக்கான உரமானியம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்யும் பணிகள் அந்தந்த கமக்கார அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்வயல் கமக்கார அமைப்புக்கு உட்பட்ட நெற்செய்கையாளர்கள் இன்று தொடக்கம் 16 ஆம் திகதிவரை தமது விவரங்களைப் பதிவு செய்யுமாறும், நெற்செய்கை மேற்கொள்ளப்படும் காணி உறுதியின் போட்டோப் பிரதியுடனும் குத்தகையாளர்கள் காணிச்சொந்தக்காரரின் ஒப்புதலுடன் அந்தக் காணி உறுதியின் போட்டோப் பிரதியுடனும் வருகை தருமாறு அமைப்பின் செயலாளர் வீ.கா. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ம-207)

# இலகு வேலைத்திட்ட பயனாளிகளுக்கு உணவுப் பொருள்

யாழ்ப்பாணம்,ஜூலை 14

இலகு வேலைத்திட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கான உணவுப் பொருள்கள் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்துக்கான பொருள்கள் மட்டுமே விநியோகிக்கப்படவுள்ளன.

இந்தப் பொருள்களில் அரிசி தவிர்ந்த ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் உள்ளடங்கும். ஒருநாள் வேலை என்ற அடிப்படையில் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

# இ.போ.சவின் அசண்டையீனம் மாணவர்கள் நெருக்கடி நிலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 14

பாடசாலை சேவை தவிர்ந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் பாடசாலை மாணவர்களை ஏற்றுவதில் நடத்துநர்கள் காட்டும் அசண்டையீனப் போக்கால் மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

கிராமப் புறங்களிலிருந்து நகர்ப்புறப் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் பருவகாலச் சிட்டையைப் பெற்றுள்ள நிலையில் பாடசாலை சேவைப் பேருந்தில் செல்வதற்கான நேரம் தவறும்போது நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஏனைய பேருந்துகளில் செல்ல முடியாதுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

அதாவது, இலங்கைப் போக்குவரத்துச்சபையினுடைய பேருந்துகளை இடைமறித்து ஏற முற்படும்போது மாணவர்களைப் புறந் தள்ளிவிட்டுப் பொதுமக்களை ஏற்றிச் செல்லும் சம்பவங்களைக் காணக்கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் நேரம் தவறினால் மாணவர்கள் பாடசாலை செல்லாமல் வீடு செல்லும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

கூடுதலாக இந்தச் சம்பவங்கள் இளவாலை, மாதகல், சண்டிலிப்பாய், மானிப்பாய் பிரதேசங்களில் இடம்பெற்று வருவதாக மாணவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனமெடுத்துத் தமது பயணத்துக்கு ஆவன செய்யுமாறு மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி

# கிளிநொச்சி தொண்டர் ஆசிரியர்கள் யாழ். வலயத்தில் கவனயீர்ப்புப் பேரணி

மகஜர் ஒன்றையும் கையளித்தனர்






யாழ்ப்பாணம், ஜூலை 14
கிளிநொச்சி கல்வி வலய தொண்டர் ஆசிரியர்கள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி யாழ். கல்வி வலயம் முன்பாக நேற்று முற்பகல் கவனயீர்ப்புப் பேரணியில் ஈடுபட்டனர்.

இது சம்பந்தமாக மகஜர் ஒன்றையும் அவர்கள் அங்கு வைத்து வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவனிடம் கையளித்தனர்.

தற்போது உள்ளூராட்சித் தேர்தல் காலமாகையால் இந்தவிடயம் சம்பந்தமாக எதுவும் கூற முடியாது. எனினும் சம்பந்தப்பட்டவர்களுக்கு இதுபற்றித் தெரிவிப்பதாக மகஜரைப் பெற்றுக்கொண்ட இளங்கோவன் தெரிவித்தார் என்று தொண்டர் ஆசிரியர்கள் கூறினர்.

இந்த விடயம் சம்பந்தமாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பல வகையான நெருக்கடிக்குள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக கிளிநொச்சி கல்விவலய பாடசலைகளில் கடமையாற்றியுள்ளோம். யுத்தம் முடிவடைந்து இன்றுவரை நிரந்தர நியமனம் எமக்கு வழங்கப்பட வில்லை.

இன்றுவரை எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படாத நிலையிலும் பாடசாலைகளில் கடமையாற்றி வருகிறோம்.

இவ்வாறு சுமார் 365 பேர் வரை கடமையாற்றுகிறோம். 60 வீதத்துக்கும் அதிகமானோர் குடும்பஸ்தர்களாக இருக்கிறோம். இதனால் வாழ்க்கையைக் கொண்டு நகர்த்துவதில் பெரும் இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதியால் வடமாகாணத்துக்கென வழங்கப்பட்ட ஆயிரம் பேருக்கான நியமனத்தில் ஏனைய மாவட்டங்களுக்கான பிரதேசங்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, மன்னார், மடு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கல்வி வலயங்களில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நிய மனம் வழங்கப்படவில்லை, இந்த விடயத்தில் நாம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகிறோம்.

இந்த விடயம் சம்பந்தமாக கல்வி அமைச்சர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, மு.சந்திரகுமார் மற்றும் கிளிநொச்சி கல்வி வலய பணிப்பாளர் ஆகியோருக்கு அறிவித்திருந்தோம்.

கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்ற அமைச் சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த விடயம் தொடர்பில் ஒப்புதல் அளித்திருந்தார்.

எனினும், இன்றுவரை இவர்கள் உத்தியோகபூர்வமாக எதுவித பதிலையும் தரவில்லை. எனவே தான் இந்தப் பேரணியை நடத்த முன்வந்தோம். இனிமேலாவது இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா? என்று தெரிவித்தனர்.

(ம-4-288)

## பரவைக்குளம் வீதியைப் புனரமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 14
திருநெல்வேலி பரவைக்குளம் வீதி மழை ஆரம்பமாவதற்கு முன்னதாக திருத்தியமைக்கப்படும் என நல்லூர் பிரதேச சபை செயலாளர் திரு எம். சாந்தசீலன் தெரிவித்தார்.

வீதி திருத்தவேலைகளை ஆரம்பித்த சமயம் சிறுதடங்கல் ஏற்பட்டது. அது குறித்து தாங்கள் கவனமெடுத்து உகந்த வகையில் திருத்த வேலைகளை செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.

மழைக்கு முன்னர் குறிப்பிட்ட வீதி புனரமைக்கப்படும் எனவும் செயலாளர் திரு எம். சாந்தசீலன் மேலும் தெரிவித்தார். (எ-7)


## ஆதரவற்றோரின் விவரம் சேகரிப்பு

நாவற்குழி, ஜூலை14
இந்து அமைப்புக்களின் ஒன்றியம் யாழ்.மாவட்டத்தில் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த வன்னி மக்களில் விதவைகள், பெற்றோர்களை இழந்த பிள்ளைகளின் விவரங்களைச் சேகரித்து வருகின்றது.

பிரதேச செயலர்களின் ஒத்துழைப்பு இதற்காகக் கோரப்பட்டுள்ளது.

இத்தகையோரின் உடன் தேவைகளை அறிந்து நிதி வசதிக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் உதவிகள் செய்யப்படுமென ஒன்றியத்தின் செயலாளர் சு.பரமநாதன் அறிவித்துள்ளார். (எ-121)

### நினைவுக்காக...



வெளியீடு:- பேராசிரியர் தி.வேல்நம்பியின் 'திருக்குறளில் முகாமைத்துவம்' நூல் வெளியீடு சோமஸ்கந்தாக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. முதற் பிரதியை வணிக பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா வெளியிட்டு வைக்கிறார். சமூகசேவகர் அ.த.க. கிருஷ்ணராசா பெற்றுக்கொள்கிறார். (ம-72)

## வாதரவத்தைப் பிரதேச மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் நெருக்கடி

அச்சுவேலி, ஜூலை 14
வாதரவத்தைக்கான குடிதண்ணீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நேரம் குறிப்பிட்டு வழங்கப்படுவதால் நீண்டநேரம் குழாய்க்கு அருகில் காத்திருந்து குடிதண்ணீர் பெறவேண்டி இருப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வாதரவத்தைக்கான குடிதண்ணீர் விநியோகம் புத்தூர் நிலாவரையில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து விநியோகிக்கப்படுகின்றது.

குடிதண்ணீர் விநியோகத்தை தேசிய குடிதண்ணீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை மேற்கொண்டு வருகின்றது.

அண்மைக்கால வரட்சி மற்றும் குடிதண்ணீர் பயன்பாடு அதிகரித்த வேளையில் குடிதண்ணீர் காலை மாலை வேளைகளில் நாளாந்தம் நான்கு மணிநேரம் அளவில் விநியோகம் மேற்கொள்ளப்படுவதால் குடிதண்ணீரைப் பெறுவதற்கு நீண்டநேரம் காத்திருக்கவேண்டி இருப்பதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வாதரவத்தை, விரவாணி, பெரிய பொக்கணை உள்ளடங்கிய பிரதேச மக்கள் குறித்த பிரதேசத்தில் நல்ல தண்ணீர் கிணறுகள் இல்லாத நிலைமையில் குடிதண்ணீர் குழாய் மூலம் பெற்றே பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(எ-11)

## மக்கள் வங்கியின் அதிஷ்டசாலிகள்

தென்மராட்சி, ஜூலை 14
மக்கள் வங்கியின் 50ஆவது ஆண்டை முன்னிட்டு விற்பனை செய்யப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டுக்களின் சீட்டிழுப்பு அண்மையில் அந்தந்த வங்கிக் கிளைகளில் நடத்தப்பட்டன.

ஒவ்வொரு கிளையில் தெரிவு செய்யப்படும் இரு அதிஷ்டசாலிகளுக்கு தங்கப் பதக்கங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

சாவகச்சேரி கிளையில் இடம்பெற்ற சீட்டிழுப்பில் கைதடி யைச் சேர்ந்த ஆ.தியாகராசா, சாவகச்சேரியைச் சேர்ந்த க.சுதாகரன் ஆகியோருக்கு அதிஷ்டம் கிடைத் து தங்கப்பதக்கங்கள் அண்மையில் வழங்கப்பட்டதாக கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்தார்.

(எ-207)

## பாடசாலை செல்லாத மாணவர்களை கண்காணிக்கும் மானிப்பாய் இராணுவம்

யாழ்ப்பாணம், ஜூலை 14
மானிப்பாய் மற்றும் உடுவில் பிரதேசங்களில் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களை கண்காணிக்கும் பணியில் மானிப்பாய் பிரிவு இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த சில மாதங்களாக மேற்படி பிரதேசங்களில் குறைந்த வயதுடைய பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாமல் கூலி வேலைக்குச் செல்வதை சமூக ஆர்வலர்கள் அவதானித்து இராணுத்தினரிடம் முறையிட்டுள்ளனர்.

இதனால் இராணுவத்தினர் பாடசாலை செல்லாத மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று விசாரணை செய்து பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புமாறு பெற்றோர்களுக்கு அறிவுரை கூறி வருகின்றனர்.(எ-313)

## நெடுந்தீவில் பிடிக்கும் மீன்களை வெளியே கொண்டு செல்லத்தடை

விஜயகலா எம்.பியிடம் முறைப்பாடு

நெடுந்தீவு, ஜூலை14
நெடுந்தீவு பிரதேச மீனவர்கள் தாம் பிடிக்கும் மீன்களை நெடுந்தீவுக்கு வெளியே கொண்டுசென்று விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் மீனவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

விஜயகலா மகேஸ்வரன் நெடுந்தீவுக்குச் சென்றபோது இந்த முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் தாம் பிடிக்கும் மீன்களை வேறு இடத்துக்குக் கொண்டுசென்று விற்க முடியாது எனவும் அவற்றை நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்பதால் பெரியளவில் நஷ்டத்தை எதிர்கொள்ளவேண்டியிருப்பதாகவும் கூறப்பட்டது.

எனவே வெளியிடங்களுக்கு படகு மூலம் கொண்டுசென்று மீன்களை விற்பனை செய்தவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறும் இதன் ஊடாக இங்குள்ள நூற்றுக்கணக்கான மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தமுடியும் எனவும் அவர்களது கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-60)

## கைதடிப் பகுதிக்கு புதிய மின்மாற்றி

தென்மராட்சி, ஜூலை13
கைதடி நகர்ப் பகுதியில் அதிகரித்து வரும் வர்த்தக நிலையங்களின் நலன்கருதி கைதடிச் சந்தியில் புதிய 160 கே.வி. மின்மாற்றி பொருத்தப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி கிளையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஜ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ உடை தரித்தோரால் கிளிநொச்சியில் இடையூறு

## ஜே.வி.பி. தேர்தல் குழு முறையீடு

கொழும்பு, ஜூலை 14

ஜே.வி.பியின் தேர்தல் நடவடிக்கைகளுக்கு இராணுவ உடை தரித்தவர்களால் இடையூறு விளைவித்தமை தொடர்பாக நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் கிளிநொச்சி மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிநிதி லலித்குமார் வீரராஜினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து ஜே.வி.பி. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த 8ஆம் திகதி தர்மபுரம் பிரதேசத்தில் மக்களைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஜே.வி.பியின் வேட்பாளர்கள் உள்ளிட்ட ஆதரவாளர்களின் நடவடிக்கைக்கு இராணுவ உடை தரித்திருந்த குழுவால் இடையூறு ஏற்படுத்தப்பட்டது.


இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு 21 212 என்ற இலக்கத்தை உடைய ஜீப்பில் வந்த குழு ஒன்று ஜே.வி.பியின் கிளிநொச்சி அலுவலகத்தை வீடியோ எடுத்துள்ளது. அந்த ஜீப்பின் சாரதியான இராணுவ உடை தரித்திருந்த நபராலேயே வீடியோ எடுக்கப்பட்டது.

அத்தோடு யாழ். - கிளிநொச்சி உள்ளிட்ட வடக்கு மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் டபிள்யூ.பி.ஜே.டி. 8291 என்ற இலக்கத் தகட்டை உடைய வானில் வந்த இராணுவ உடை அணிந்தவர்கள் ஐ.ம.சு. முன்னணியின் பிரசார சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தனர். அவர்களால் ஜே.வி.பியின் சுவரொட்டிகள் கிழித்தெறியப்பட்டன.

- இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாதனைப் பயணம்....



இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் ஏற்பாட்டில் பிரான்ஸுக்கு கல்விச் சுற்றுலா மேற்கொள்ளவுள்ள மகாஜனக் கல்லூரி மாணவியான தரண்யா மணிசேகரன் பாடசாலை அதிபர் பெற்றோருடன் காணப்படுகிறார். (வ)

# நெல்லியடி ம.ம.வியின் 90ஆவது ஆண்டு விழா நாளை முதல் மூன்று தினங்கள்

பருத்தித்துறை, ஜூலை14

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் 90ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் நாளை 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் கல்லூரி கலையரங்கில் அதிபர் செ.சேதுராசா தலைமையில் நடைபெறவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதலாம் நாள் பரிச்ளிப்பு விழா நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணித புள்ளிவிவரவியல் துறைத் தலைவர் கலாநிதி சி.சற்குணராசா கலந்துகொள்ளவுள்ளார். இந்த விழாவில் பரிசில்களை யாழ். பல்கலைக்கழக மொழியியல் துறைத் தலைவர் திருமதி சிவராணி சற்குணராசா வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்குப் பிரதமவிருந்தினராக அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார். அன்றைய தினம் பரிசளிப்பும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த விழாவின் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் வே.தி. செல்வரத்தினம், யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன், வடம ராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மூன்றாம் நாள் நிகழ்வு 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் நெல்லிக்கனி மலர் வெளியீடும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வுக்குப் பிரதமவிருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வட மாகாண பிரதம கணக்காளர் ரி.இராஜேந்திரன், கொழும்பு கல்வியியற் துறை பேராசிரியர் மா.கருணாநிதி, வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

90ஆவது ஆண்டு விழா மலரான 'நெல்லிக்கனி' சஞ்சிகையை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வெளியிட்டு வைக்கவுள்ளார். முதற் பிரதியை பழைய மாணவர் சங்க லண்டன் கிளை போசகர் சி.அம்பிகாவரன் பெறவுள்ளார். (ஐ-190- 236)

# தாயும் மகனும் விபத்தில் காயம்

மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தமக்கு முன்னே சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பாடசாலை மாணவன் ஒருவனையும் அவனது தாயையும் மோதிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர்.

காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர். ஈச்சமோட்டையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கு.ஜெயராணி (வயது-42) மற்றும் அவரது மகன் கு.டனுசன் (வயது-11) ஆகிய இருவருமே காயமடைந்தனர்.

# ராஜகோபுர அடிக்கல் நடுதல்

கோப்பாய், ஜூலை 14

நாரந்தனை வடக்கு பண்டாரபுரம் ஸ்ரீ தான்தோன்றீஸ்வரம் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய பஞ்சதள இராஜ கோபுரம் அமைக்கும் பணிக்கான ஆரம்ப நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு அடிக்கல் நடும் நிகழ்வுடன் இடம்பெறும்.

மு.பவாநாதன் அடிக்கல்லை நட்டு விழாவை ஆரம்பித்து வைப்பார். (ஐ-72)

## பெயர் மாற்றம்

மீசாலை வடக்கில் வசிக்கும் பொ.ஹரிகரன் ஆகிய நான் 12.07.2011 தொடக்கம் எனது பெயரை பொ.கரிஸ் என மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பொ.கரிஸ்

## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

12.07.2011

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2418

வெற்றி எழுத்து: Y — வெற்றி எண்கள்: 8 9 9 4 8 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y | 8 | 9 | 9 | 4 | 8 | 7 | ரூபா.25,689,720/= | பரிசு 01 |
| 1 பரிசுகள் | | 8 | 9 | 9 | 4 | 8 | 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 9 | 9 | 4 | 8 | 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | | | | 9 | 4 | 8 | 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 147 |
| 4 பரிசுகள் | | | | | 4 | 8 | 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1424 |
| 5 பரிசுகள் | | | | | | 8 | 7 | ரூபா. 100/= | பரிசுகள் 14261 |
| 6 பரிசுகள் | | | | | | | 7 | ரூபா. 20/= | பரிசுகள் 141039 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | | | | | | | |
| 7 பரிசுகள் | | 8 | 9 | 9 | 4 | 8 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 16 |
| 8 பரிசுகள் | | 8 | 9 | 9 | 4 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 146 |
| 9 பரிசுகள் | | 8 | 9 | 9 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1417 |
| 10 பரிசுகள் | | 8 | 9 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 14047 |
| 11 பரிசுகள் | Y | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 56421 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 38,309,070.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 10,000,000.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
2342 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


# 21 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி
அமிர்தலிங்கம் கலக்சனா
[கைதடி மத்தி; கைதடி]

இன்று (14.07.2011) வியாழக்கிழமை
21 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும்
செல்வி. அ.கலக்சனா
பல செல்வங்களும் பெற்று
பல்லாண்டு காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

கைதடி மத்தி,
கைதடி

வாழ்த்துவோர்:
அத்தான் – பிரபாகர் (பிரபா) ஜேர்மனி,
அக்கா – துஷந்தினி (துளசி)

(5778)



பிரம்மாண்டமான ஆடித் தள்ளுபடி
மாபெரும் மலிவு விற்பனை
நல்லூர்
சரவணா ரெக்ஸ்

விதவிதமான எண்ணற்ற ஆடைத்தெரிவுகளுக்கு
இன்றே விரையுங்கள்

காலம் :
09.07.2011
தொடக்கம்
31.07.2011 வரை

நேரம்:
காலை 9 மணி
முதல் இரவு
8 மணிவரை



இடம்: சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை (கெங்காதரன் மருத்துவமனை அருகாமை)
கே.கே.எஸ்.வீதி, தட்டாதெருச் சந்தியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

குறிப்பு: ஆடித் தள்ளுபடியை முன்னிட்டு ஏழு நாள்களும் வியாபாரம் நடைபெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெஜிங் விடயத்தில் உயர் நீதிமன்ற உத்தரவை செயற்படுத்தாதமையே பிரச்சினைக்குக் காரணம்



## முன்னாள் பிரதம நீதியரசர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 14

ஹெஜிங் உடன்படிக்கை தொடர்பாக உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட உத்தரவு செயற்படுத்தப்படாமையே தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கான காரணமாகும்.

- இவ்வாறு முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை செயற்படுத்தியிருந்தால் குறித்த வங்கி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் இது குறித்து மேலும் கூறியதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியினாலும், மெதபிட்டிய என்ற நபராலும் இது தொடர்பில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன, அதிகரித்துவரும் பொருள்களின் விலையால் மக்களுக்கு இந்த ஹெஜிங் உடன்படிக்கை மூலம் நன்மை கிடைக்காது என அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் இந்த ஹெஜிங் உடன்படிக்கை சட்டவிரோதமானதும், அநீதியானதும் எனத் தெரிவித்து வங்கிக்குப் பணம் செலுத்துவதை நிறுத்துமாறு இடைக்கால உத்தரவைப் பிறப்பித்திருந்தது.

மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு லீற்றர் ஒன்றின் விலையை 20 ரூபாவால் குறைத்து 100 ரூபாவுக்கு வழங்குமாறு உத்தரவு பிறப்பித்து தான் உள்ளிட்ட குழுவினர் தீர்ப்பினை வழங்கினர்.

எனினும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை பின்பற்றாதிருப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்தது.

அத்துடன் எரிபொருளின் விலையை இரண்டு ரூபாவால் மாத்திரமே குறைப்பதற்கு அப்போதைய அமைச்சரவை நடவடிக்கை எடுத்தது.

அரசு இந்தத் தீர்மானத்தினை செயற்படுத்தாத காரணத்தினால் உயர் நீதிமன்றத்தினால் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது போனது.

அதனைத் தொடர்ந்து, மனுதாரர்கள் வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டனர். இதனால் வழக்கு விசாரணை எவ்வித முன்னேற்றமும் இன்றிக் காணப்பட்டது.

இந்தப் பணத்தினைச் செலுத்த வேண்டாமென மத்திய வங்கியின் ஆளுநரால் அப்போது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அரசின் கவனயீனம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் உத்தரவை பின்பற்றாத காரணத்தினால் இன்று மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்- என்றார். (ச)

## நாம் வளர்ப்போம்....



கொழும்பு நகர் பகுதியை அழகுபடுத்துவதற்காக வீதிச் சுற்றுவட்டங்களில் நடப்பட்டுள்ள மரக்கறிச் செடிகளிலிருந்து கொழும்பு ரோயல் கல்லூரி மாணவர்கள் குழுவொன்று அறுவடை செய்கின்றனர். (ச)

# லண்டன் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய அனுமதி

## உயர்நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, ஜூலை 14

ஹெஜிங் உடன்படிக்கை தொடர்பாக லண்டன் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்வதற்கு உயர் நீதிமன்றத்தின் அனுமதி கிடைத்துள்ளது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துளள்து.

தமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பை ஸ்டான்டட் சாட்டெட் வங்கிக்குச் சார்பாக அமையும் வகையில் லண்டன் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும், இத்தீர்ப்பு தொடர்பில் தாம் அதிருப்தி அடைவதாகவும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கூறியுள்ளது.

இதன்போது இந்த வங்கி நிபந்தனைகளை முன்வைத்ததுடன் அதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்ப்பை வெளியிட்டது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வழக்கு விசாரணை திகதி நேற்று முன்தினம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களை தமது பணிகளுக்கு பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் அவரது செயலாளருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை விசாரிப்பதற்காக திகதியை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும், பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள அவரது செயலாளர் சேனக்க டி சில்வா ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தனர்.

சரத் பொன்சேகா சார்பில் வழக்குகளில் ஆஜராக இருந்த சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி வேறு ஒரு வழக்கில் ஆஜராகியிருப்பதாக நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட வாத, பிரதிவாதங்களை கவனத்தில் எடுத்துக்கொண்ட நீதியரசர் தீபாலி விஜேசுந்தர வழக்கு விசாரணைகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

மேலும் அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதியரசர் சாட்சியாளர்களுக்கு உத்தரவிட்டார்.

அதேவேளை வெலிகடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா சுகயீனம் காரணமாக கொழும்பு தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். சுவாச கோளாறு காரணமாகவே அவருக்கு இந்த சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட சரத் பொன்சேகாவிற்கு பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் சுவாச கோளாறுக்கான சிகிச்சையும் வழங்கப்பட்டுள்ளது.

# கிரிக்கெட் சபையின் அறிக்கை சமர்ப்பிக்க தெரிவுக்குழு நியமிக்க வேண்டும் - ரணில்



கொழும்பு, ஜூலை 14

இலங்கை கிரிக்கெட் சபையின் அறிக்கைகள், கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

பல்வேறு விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், பயிற்றுநர்களை நேற்று புதன்கிழமை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

கிரிக்கெட் சபையின் கட்டமைப்பு மற்றும் தேர்வுக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் விதம் ஆகியன குறித்த சட்டமூலமொன்று வரையப்பட்டு, நாடாளுமன்றத்திற்கு தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கலாநிதி என்.எம். பெரேரா, காமினி திஸாநாயக்க, ஜே.ஆர். ஜெயவர்தன போன்றோர் கடந்த காலத்தில் கிரிக்கெட் சபையில் முக்கிய பாத்திரங்களை வகித்த போதிலும், அவர்கள் ஒருபோதும் கிரிக்கெட்டில் அரசியல் நடத்தவில்லை- என்றார். (ச)

# 1000 பாடசாலைகள் திட்டத்தில் கிழக்கில் 128 பாடசாலைகள்

மட்டக்களப்பு, ஜூலை 14

கல்வி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ள ஆயிரம் பாடசாலை செயற்றிட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் 128 பாடசாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளன என கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிஸாம் தெரிவித்தார்.

முதலாம் கட்டமாக 105 பாடசாலைகளும், இரண்டாம் கட்டத்தில் 23 பாடசாலைகளும் இந்தத்திட்டத்தில் உள்வாங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

முதலாம் கட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் 43 பாடசாலைகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 34 பாடசாலைகளும், திருகோணமலை மாவட்டத்தில் 28 பாடசாலைகளும் உள்வாங்கப்படும்.

இரண்டாம் கட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் 6 பாடசாலைகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 பாடசாலைகளும், திருகோணமலை மாவட்டத்தில் 7 பாடசாலைகளும் உள்வாங்கப்படும் - என்று மேலும் தெரிவித்தார். (ச)

# ஆயுதங்கள் மீட்கப்பட்டன

மட்டக்களப்பு,ஜூலை14

மட்டக்களப்பு, வாகரைப் பிரதேசத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்களை இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

ரி-56 ரக துப்பாக்கிகள் 35, ஆர்.பி.ஜி. -15 மற்றும் ஏனைய வகையான ஆயுதங்கள் 17 என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக வாகரை 233 ஆவது படையணியின் தளபதி தெரிவித்தார்.(ச)

# பஸ்களில் பெண்களுடன் சேஷ்டை; முறையிடத் தொலைபேசி இலக்கம்

## பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

நாட்டில் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் பயணம் செய்யும் பெண்களில் நான்கில் ஒருவர் சேஷ்டைக்கு உள்ளாகின்றனர். பஸ், ரயில்களில் சேஷ்டைக்குள்ளாகும் பயணிகள் 011-7555555 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் முறைப்பாடு செய்யலாம்.

- இவ்வாறு தனியார் போக்குவரத்துப் பிரதியமைச்சர் ரோஹன திஸாநாயக்க நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பஸ்களில் தினமும் பெரும் எண்ணிக்கையான பெண்கள் வார்த்தைகளாலும் உடல்ரீதியாகவும் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர்.

பஸ்களில் பெண்கள் சேஷ்டைக்குள்ளாகாமல் பயணம் செய்வதற்கேற்ற சிறந்த சேவைகளை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து அறிவுறுத்துவதற்காக தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதிகள், நடத்துநர்களுக்கு அடுத்த மாதம் முதல் புதிய செயற்றிட்டங்கள், பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்காலத்தில் ரயில்வே துறையினருக்கும் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது - என்றார்.

# மின்னல் தாக்கி மாணவி மரணம்

கொழும்பு, ஜூலை 14

லுணுகல வெடகேவெவ பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை மின்னல் தாக்கியதில் (வயது-13) பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மழையுடன் கூடிய காற்று வீசிக்கொண்டிருப்பதை வீட்டின் கதவோரமாக தனது மாமியுடன் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இந்த மாணவி திடீரென ஏற்பட்ட மின்னலினால் தாக்கப்பட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்ற மன்னார் சித்திவிநாயகர் மாணவர்கள்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. பாராட்டு

மன்னார், ஜூலை 14

தேசியமட்ட நாடகப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்ற மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவர்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் பாராட்டியுள்ளார்.

கூட்டுறவின் நூறாவது வருட நிறைவையொட்டி நடத்தப்பட்ட தேசிய மட்ட நாடகப் போட்டியில் மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசியப் பாடசாலை முதலாமிடத்தைப் பெற்று பாடசாலைக்கும், மன்னார் மாவட்டத்துக்கும் பெருமையைத் தேடித்தந்துள்ளது.

இதைப்போன்று மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் சாதனைகள் புரியவேண்டும். கடந்த யுத்த நிலை காரணமாக எமது மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர முடியாத நிலையில் இருந்தனர். தற்போது அதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மாணவர்கள் இதனைப் பயன்படுத்தி எமது மாவட்டத்துக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

மேலும் எமது மன்னார் மாவட்டத்துக்குப் பெருமை தேடித்தந்த மாணவ மாணவிகளையும் அவர்களை வழி நடத்திய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-601)

# கிரவலுக்கு மேல் ஊற்றப்படும் தார் ஓரிரு நாளிலேயே அகலும் நிலை

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதியானது கிரவல் இடப்பட்டு அதன் மேல் தார் ஊற்றப்பட்டு வருகின்றது.

ஆனால் இந்தத் தார் ஊற்றும் வேலைகள் பூர்த்தியாகும் முன்னரே தார்கள் அகன்று விடும் நிலை காணப்படுகின்றது.

அத்துடன் இடையிடையே தார் ஊற்றும் வேலைகள் இடம் பெறவும் இல்லை. கிளிநொச்சி குளத்தடியில் இருந்து புதுப் பாலத்தடிக்கு செல்லும் இடம் வரை தார் ஊற்றப்படவில்லை. அதைப் போன்று கட்சன் வீதிச் சந்தியிலும் சிறுபகுதிக்குத் தார் ஊற்றப்படவில்லை. வட்டக்கச்சி சந்தையடி வரை முழுமையாகத் தார் ஊற்றப்படாத நிலையில் ஊற்றப்பட்ட தார் அகன்று கிரவல் மேலெழும்பும் நிலை வீதியின் பல இடங்களிலும் தோன்றியுள்ளது.

மீண்டும் மீண்டும் இத்தார் ஊற்றும் வேலையை மேற்கொண்டால் மட்டுமே கிரவலில் தார் நிலைத்து நிற்கும். இல்லாவிடில் புனரமைப்பு முடிய முன்னரே சேதமடைதலைத் தவிர்க்க முடியாததாகி விடும்.

எனவே இந்த விடயத்தில் உரியவர்கள் விசேட கவனம் செலுத்திப் புனரமைப்பை நன்கு பேண நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பிரதேச மக்கள் கோருகின்றனர்.

(க-405)

## காலத்தின் தேவை....




பயனுள்ள பயிற்சி: வட்டக்கச்சியில் இயங்கும் 'சொப்ற் வியூ ஐரி' நிறுவனத்தில் கணினிக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் சான்றிதழ் வழங்குகிறார். (426)

# கணினிக் கற்கை நெறிக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி, ஜூலை 14

வட்டக்கச்சியில் இயங்கி வரும் சொப்ற் வியூ ஐரி நிறுவனத்தின் முதலாம் ஆண்டுப் பூர்த்தியும் கணினிக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு. முருகவேல், வட்டக்கச்சி மகாவித்தியாலய அதிபர் எம். மனுவல், நிறுவனத் தலைவர் சி.சிவபாலன் மற்றும் வட்டக்கச்சி புனித சூசையப்பர் தேவாலய வண. பிதா யூட்தாஸ் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்தக் கற்கை நிலையத்தில் கணினிக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 91 மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

(க-426)

# குடிதண்ணீரை தேடி அலையும் மக்கள்

பூநகரி, ஜூலை 14

பூநகரி, பள்ளிக்குடா சுனாமிக் குடியிருப்புப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்கள் தமக்கான குடிதண்ணீரைப் பெறுவதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இங்கு வாழ்ந்து வரும் சுமார் 140 குடும்பங்களே இவ்வாறு தண்ணீரைப் பெறுவதில் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றன. இப்பகுதி மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கென ஒரு பொதுக் கிணறு மட்டுமே உள்ளது. அதில் உள்ள நீரும் தற்போது வற்றிய நிலையில் காணப்படுகிள்றது.

இதனால் இங்குள்ளவர்கள் ஐந்து கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் சென்றுதான் குடிப்பதற்கும், ஏனைய தேவைகளுக்குமான நல்ல தண்ணீரைப் பெற வேண்டிய நிலையிலுள்ளனர். உதவியற்றவர்கள், வயோதிபர்கள் ஆகியோர் இதனால் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

இந்தப் பகுதியில் ஒரு சிறிய குளம் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது. அந்தக் குளத்தைப் புனரமைப்பதன் மூலம் ஓரளவேனும் தமக்குரிய நீர் கிடைக்கக் கூடியதாக இருக்குமெனப் பலரிடமும் பல சந்தர்ப்பங்களிலும் தாம் கோரிக்கை முன் வைத்ததாகவும் இன்று வரை அதனைப் பற்றி எவரும் கருத்தில் எடுத்து தமது மிக முக்கிய உடனடித் தேவையைத் தீர்க்க முன்வரவில்லை எனவும் இந்த மக்கள் கூறுகின்றனர்.

கடந்த எட்டாம் திகதி இப்பகுதிக்கு வருகை தந்திருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடமும் தமது குடி தண்ணீர் தேவை குறித்து எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பள்ளிக்குடா மக்களும் கடந்த கால யுத்தத்தால் ஏற்பட்ட இடப் பெயர்வு காரணமாக தமது உடைமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் நலன்புரி நிலையங்களில் இருந்த பின்னர் மீள்குடியமர்வு மூலம் மீண்டும் தமது இடத்தில் வசிக்கின்றார்கள்.

எனவே இந்த மக்களின் மிகவும் அவசியத் தேவையாகிய குடிதண்ணீரைப் பெறுவதற்கு உரியவர் கள் விரைந்து நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் அவசர வேண்டுகோளாகும்.

(க-426)

# இருளில் மூழ்குமா முழங்காவில் கிராமம்?

எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட தடைகாரணமாக முழங்காவில் பகுதி இருளில் மூழ்கும் அபாயம் தோன்றியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நாச்சிக்குடாச் சந்தியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றது.

இதனை நம்பி கடற்றொழிலில் ஈடுபடுகின்ற கரையோரக் கிராமங்களான வலைப்பாடு தொடக்கம் தேவன்பட்டி வரை ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. இது தவிர முழங்காவிலிலுள்ள விவசாயிகளும் தமது எரிபொருள் தேவைக்காக இந்த எரிபொருள் நிலையத்தையே நம்பியுள்ளனர்.

மேலும் முழங்காவில் பகுதிக்கு இன்னமும் மின்சாரவசதி வழங்கப்படவில்லை. இதனால் இங்கு வாழும் சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் மண்ணெண்ணெய் விளக்கின் உதவியினாலேயே இரவில் வெளிச்சத்தை பெற்று வருகின்றன.

பாடசாலை மாணவர்களும் இரவில் இவற்றின் உதவியுடனேயே தமது பாடங்களைப் படிக்கின்றனர். ஆனால் இந்த எரிபொருள் நிலையத்தினால் மண்ணெண்ணை விநியோகம் மேற்கொள்ளப்படாததால் இவர்கள் அனைவரும் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இது தொடர்பாகக் குறிப்பிட்ட எரிபொருள் நிலையத்தினரிடம் மக்கள் கேட்டபோது தங்களிடம் எரிபொருளைக் கொள்ளனவு செய்வதற்குப் பணமில்லையெனப் பதிலளிக்கப்பட்டது.

மேலும் கடந்த மாத இறுதியில் மண்ணெண்ணை வந்த போதிலும் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படவில்லையெனத் தெரியவருகின்றது.

ஆனால் நாச்சிக்குடாவிலுள்ள வணிகர்கள் சிலர் இதனைப் பெற்றுச் செல்வதைக்

> **எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட தடை காரணமாக முழுங்காவில் பகுதி இருளில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கடற்றொழிலாளர், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், வணிகர்கள் எனப் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் சில கிராமங்களில் குடிதண்ணீர் தண்டுப்பாடும் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. இந்த நிலையை யார் கவனிப்பார்கள்?**

காண முடிந்தது. இதற்கான காரணம் கேட்டபோது அவர்கள் முற்பணம் கட்டினார்கள் அதனால் அவர்களுக்கு மண்ணெண்ணை வழங்கினோமெனப் பதில் கூறப்பட்டது. மேலும் பொதுமக்கள் இதைப் போன்று முற்பணம் கட்டினால் மண்ணெண்ணை கிடைக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் இந்தச் செயற்பாட்டினால் மக்கள் அதிக விலை கொடுத்து தனியார் வர்த்தகர்களிடம் மண்ணெண்ணையைப் பெற வேண்டிய நிலை தோன்றியுள்ளது. இந்தப் பகுதியிலுள்ள ஏழை மக்கள் அதிக பாதிப்பை எதிர்கொள்கின்றனர். சிலர் அதிக பணம் கொடுத்து மண்ணெண்ணையை வாங்க முடியாத நிலையில் இரவில் இருளின் போர்வையில் முடங்கிக்கிடக்கின்றனர்.

மாணவர்கள் இரவு வேளையில் தமது கல்வியைத் தொடர முடியாத அவலத்தில் உள்ளனர். அதனால் இவர்களின் கல்வியில் பெரும் வீழ்ச்சி ஏற்படும் ஏது நிலை தோன்றியுள்ளது.

மேலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் தம்மிடம் நிதிவளம் இல்லாத காரணத்தால் சீரான எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்ள முடியாவிட்டால் இதனை நடத்தும் பொறுப்பைத் தனியாரிடம் வழங்குவதே நியாயமாகும். இதைத் தான் இங்குள்ள மக்களும் பேசிக்கொள்கின்றனர். மேலும் எரிபொருள் தட்டுப்பாட்டால் பூநகரியின் சில கிராமங்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

- இராகுலன் -

ஆகவே இந்த நிலை மேலும் நீடிக்குமாயின் பூநகரிப் பிரதேசம் முழுவதும் சகல விதத்திலும் பாதிப்புக்களை எதிர் கொள்ளும் என்பதில் சந்தேகமே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சியில் ரூ.325 மில்லியன் செலவில்

# 12 ஏக்கரில் மைதானம் புனரமைப்பு அடிக்கல் நடும் நிகழ்வில் மஹிந்த

கிளிநொச்சி, ஜூலை 14

325 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சியில் விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படவுள்ளது. சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த மைதானம் தேசிய பரிமாணம் மிக்க உள்ளக வெளியக அரங்கு அனைத்தையும் கொண்டு அமைக்கப்படும்.

இந்த மைதானத்தைப் புனரமைப் பதற்கான அடிக்கல் நடும் வைபவம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும். இது குறித்து வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம் தெரிவிக்கையில்:

தற்போது மைதானத்துக்கு அருகில் ஆரம்ப வேலைகள் முடிவுற்றுள்ளன. மேலதிகமாக 5 ஏக்கர் காணியைப் பெறுவதற்கு கிளிநொச்சி அரச அதிபர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

தேசிய ரீதியில் சகல வளங்களையும் கொண்டதாக இந்த விளையாட்டு மைதானம் துரித கதியில் புனரமைப்புச் செய்யப்படும்- என்றார்.

அடிக்கல் நடும் நிகழ்வில் அமைச்சர்கள், வடமாகாண உயர் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க-302-23)

# துரித மீட்சித்திட்ட காரியாலயம் மன்னாரில் திறந்து வைப்பு



மன்னார், ஜூலை 14

மன்னார் மாவட்டச் செயலக வளாகத்தினுள் சுமார் 5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வடக்கின் துரித மீட்சித்திட்ட காரியாலயம் ஒன்று கடந்த திங்கட்கிழமை காலை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன், வடக்கின் துரித மீட்சித் திட்டப் பணிப்பாளர் சிவகுமாரன் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி இதனைத் திறந்து வைத்துள்ளனர்.

மேற்படி நிகழ்வில் மன்னார் பிரதேச செயலாளரும் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் பிரதித்திட்டப் பணிப்பாளருமான திருமதி ஸ்ரான்லி டிமெல், மன்னார் உதவி அரச அதிபர் திருமதி மோகநாதன் உட்படப் பல திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (க-601)

# சிறுமியை கடத்தும் முயற்சி தோல்வி

மல்லாவி, ஜூலை 14

மல்லாவி சந்தைப் பகுதியில் 15 வயதுச் சிறுமியொருவரைக் கடத்திச் செல்ல எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் அனிஞ்சியன் குளத்தைச் சேர்ந்த இந்தச் சிறுமி பொருள்களை வாங்குவதற்காக மல்லாவிச் சந்தைக்கு வந்துள்ளார்.

சந்தைப் பகுதிச் சூழலை அண்டிய இடத்தில் இவர் வந்து கொண்டிருக்கும் போது மோட்டார்சைக்கிளில் வந்த நபரொருவர் இந்தச் சிறுமியின் கையைப் பிடித்து இழுத்ததுடன் தம்மோடு வருமாறு வற்புறுத்தியுள்ளார். ஆனால் சிறுமி அந்த நபருடன் தர்க்கத்தில் ஈடுபட்டார். இதனை அருகேயுள்ள இராணுவ முகாமிலிருந்து நீர் எடுக்க வந்த இராணுவத்தினர் கண்டுள்ளனர். இதை அவதானித்த மோட்டார் சைக்கிளில் வந்த நபர் வேகமாக ஓடித் தப்பியுள்ளார்.

உடனடியாக இராணுவத்தினர் மல்லாவி இராணுவப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸாருக்கு அறிவித்ததன் பேரில் இராணுவப் பொறுப்பதிகாரி உட்படப் படையினரும், பொலிஸாரும் தேடுதலை மேற்கொண்டனர். குற்றவாளி இதுவரை பிடிபடவில்லை. சிறுமியின் வாக்குமூலத்தை மல்லாவிப் பொலிஸார் பதிவுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இந்தப் பகுதியிலுள்ள மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிந்தது. (க-425)

# பொங்கல் விழா

பூநகரி, ஜூலை 14

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேசத்தில் செல்விபுரம் சாத்தாபிட்டி வைரவர் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயம் கடலும், வயல் நிலங்களும், பனைமரங்களும் சூழவிருந்து அருள்புரியும் அற்புதசக்தி வாய்ந்தது.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்தப் பொங்கல் விழாவில் இந்தமுறை அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திகளை நிறைவேற்றி வைத்தனர். பலர் பொங்கலிட்டு வைரவப் பெருமானுக்குப் படைத்தனர். இதைவிட வைரவர் கலையாடுதல், காளி கலையாடுதல் போன்ற பக்திபூர்வமான நிகழ்வுகளும் நடைபெற்றன. (க-406)

# வாகன இலக்கத் தகடு ஒரு தொகுதி விநியோகம்

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் விண்ணப்பித்தவர்களுக்கான வாகன இலக்கத் தகடுகளில் ஒரு தொகுதி தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இவற்றின் உரிமையாளர்கள் அலுவலக நேரத்தில் வாகனப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் புகைப்படப் பிரதி, தேசிய அடையாள அட்டை, பழைய இலக்கத் தகடுகள் (பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்) ஆகியவற்றுடன் நேரில் சமுகந்தந்து இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். இலக்கத் தகடுகளின் விவரம் வருமாறு:

GU - 9222, QD - 8305, QF - 6768, HG - 2081, QD - 0462, JW - 1357, QF - 9473, JJ - 1102, JY - 9741, QH - 6018, QT- 9884, JN - 2543, JD - 3355, QI - 9738, JB - 1538, GS - 0576, GH - 7754, PA - 7912, GA - 2837, QJ - 9085, QK - 9974, QH - 3773, QC - 3090, QK - 0919, QJ - 4572, HB - 7835, UM - 2381, MH -5307, HF - 7251, GJ - 4910, RB - 3545, GQ - 8947, HW - 9787, GC - 1816, GC - 8922, RA - 4116, JI - 5435, GJ - 3195, JP - 0120, JC - 2098, JO - 0269, RA - 0151, RS - 1563, JP - 0458, JJ - 0983, RA - 3999, HV - 3048, GW - 7644, GM - 1607, MJ - 8269, UT - 6387, TP - 1909, JH - 2679, JA - 7770, MX - 3043, MT - 9233, TA - 4869, GZ - 3043, JC - 2105, RA - 5099, TS - 8063, HH - 3968, TF - 4279, GZ - 6776, RA - 2521, RB - 2228, GX - 4339, JN - 2905, JL - 2364, UD - 3157, GW - 4128, JL - 1485, MT - 4703, MR - 9526, GD - 0647, GX - 6178, GN - 0014, RA - 8172, HG - 5464, GM - 7258.

### பரிசளிப்பு விழா...



முக்கிய விருந்தினர்கள்: மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கடந்த ஆண்டுக்கான பரிசளிப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்ட முக்கிய விருந்தினர்கள் அமர்ந்திருக்கின்றனர். (601)

# வவுனிக்குளத்திலிருந்து திறந்து விடப்படும் நீர் மன்னார்க் கடலில் அநியாயமாகக் கலக்கும் நிலை

மல்லாவி, ஜூலை 14

வவுனிக்குளத்திலிருந்து மூன்று கால்வாய்கள் ஊடாகப் பயிர்ச் செய்கைக்கெனத் திறந்து விடப்பட்டுள்ள நீர் அநியாயமான முறையில் மன்னார்க் கடலில் கலப்பதாக இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நீர் பாய்ந்து செல்லும் வாய்க்கால்களின் பராமரிப்பின்மையும், விவசாயிகளின் அக்கறையின்மையுமே இதற்கான காரணங்களாகத் தெரிவிக்கப்படுகின்றன. இவ்வாறு குளத்திலிருந்து திறந்து விடப்படும் நீரில் மூன்றிலொரு பகுதி பாலியாறு மூலமாக மன்னார்க் கடலில் கலக்கிறது. இதற்கு ஆதாரமாகத் துணுக்காயிலிருந்து ஒட்டங்குளம் செல்லும் பாதையிலுள்ள கறுத்தப் பாலத்தடியில் மாரிகாலத்தைப் போன்று நீர் பாய்ந்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை வவுனிக்குளத்தின் இரு பிரதான வாய்க்கால்களின் பின்பகுதியில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பயிர்களுக்குப் பாய்ச்சுவதற்கு நீரின்றி அங்கலாய்ப்பதனையும் காணமுடிகின்றது.

இந்த நிலையை மாற்ற வேண்டுமாயின் விவசாயிகளும், விவசாயத் திணைக்களத்தினரும் இணைந்து செயற்பட வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-425)

# ஒட்டிய கையுடன் அகற்றப்படும் கூட்டமைப்பின் சுவரொட்டிகள்

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு நகர் பகுதிகளில் ஒட்டப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் சுவரொட்டிகள் உடனுக்குடன் அகற்றப்படுகின்றன.

கரைச்சிப் பிரதேச சபைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் சிவராசா சிவச்செல்வன் என்பவரது ஆதரவாளர்களால் ஒட்டப்படும் தேர்தல் சுவரொட்டிகளே இவ்வாறு உடனுக்குடன் அகற்றப்படுகின்றன.

எனினும் இந்த இடங்களில் அரச தரப்புத் தேர்தல் சுவரொட்டிகள் அகற்றப்படாதுள்ளன. இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் முறையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தைக் குழப்பும் செயல்களில் இராணுவத்தினர் நேரடியாக ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012 ஆம் ஆண்டில் உலகம் அழியுமா?



நாம் வாழுகின்ற இந்தப் பூமி அண்ட பிரபஞ்சத்தில் மிகச் சிறியதாக இருந்தாலும் எம்மைப் பொறுத்த மட்டில் மிகவும் பெரியது. இந்தப் பூமி இல்லையெனில் நாம் இல்லை. ஆதலால் இந்தப் பூமி அழியுமா? என்ற கேள்வியை இங்கு கேட்பது சரியானதே.

கிருஷ்ணபகவானின் பத்தாவது கல்கி அவதாரத்தில் உலகம் அழியும் என இந்து மதம் கூறுகின்றது.

கிறிஸ்தவ மதத்தின் பிரமாண நூலான 'பைபிளில்' '' தீய செயல்கள் பல்கிப் பெருகியதால் கடவுள் இந்த உலகை அழித்து மீண்டும் ஆயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்வார்'' எனக் கூறுகிறது. எல்லா மத நூல்களும் கோட்பாடுகளும் உலக அழிவினை ஏற்றுக் கொண்டுள்ளன.

பிரிட்டிஷ்காரர் அமெரிக்காவில் குடியேறச்சென்றபோது அங்கு வாழ்ந்த பூர்வீகக் குடிகளான 'மாயன்' இனத்தவர்களின் நாள் காட்டியில் 21 டிசெம்பர்- 2012 ஆம் ஆண்டில் உலகம் அழியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் சூரியனில் சூறாவளி ஏற்படும் என நாசா கூறியுள்ளது.

14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓர் அறிஞர் 2013 ஆம் ஆண்டில் 3 ஆம் உலகப் போரும், 5005 ஆம் ஆண்டில் உலகம் அழியும் எனவும் குறிப்பிட்டுள்ளார். இவர் முதலாம் உலகப்போர், 2 ஆம் உலகப் போர், அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல் என்பனவற்றை முன்பே குறிப்பிட்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டில் விஞ்ஞானிகள் இணைந்து இந்தப் பூமியின் தோற்றம் பற்றி ஆராயவுள்ளனர். இதன் ஆரம்பகட்டமாக அணுவையும் அணுவையும் மோத விடவுள்ளனர். இந்தச் சோதனை பிழைத்தால் உலகம் கால்பந்து அளவுக்கு சுருங்கிவிடும். அணு உலை, அணுக்குண்டுகள் என்பன 3ஆம் உலக யுத்தத்தில் பரிமாறப்பட்டால் உலகம் அழிவது உறுதி. சீனா, இந்தியா, அமெரிக்கா, ஈரான், வட கொரியா ஆகிய பெரும்பாலான நாடுகளில் அணுவாயுதம் மட்டுமன்றி கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளும் உண்டு.

2025 ஆம் ஆண்டில் புவியை நோக்கி புவியின் 1/3 பருமன் அளவுடைய விண்கல் ஒன்று வருகின்றது.இது கடலில் விழுந்தால் சுனாமி போன்ற ஆபத்தும், நிலத்தில் விழுந்தால் புவிநடுக்கம், இழப்புகள் ஏற்படுவதும் உறுதி. மொத்தத்தில் இந்தப் பிரபஞ்சம் ஒருநாள் அழிவது உறுதியாயினும் அது 2012 இல் அழியுமா என்று கூறமுயாது.

**இ.அபர்ணன்,**
யா/ விக்கினேஸ்வரக்கல்லூரி, கரவெட்டி.

# பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரிப்புக்குக் காரணம்




## பொதுமக்கள்

மனித வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு ஜீவனாக விளங்குபவர் பெண்கள். சந்ததி விருத்திக்கு கருவியாக விளங்குபவள் பெண்கள். அவள் ஒரு குடும்பத்தில் சிறந்த தலைவியாகவும் வாழ்க்கையைச் சீரான பாதையில் ஓட்டி பரிணமிக்கிறாள். பொது மக்கள் பெண்கள் மேல் வன்முறையைத் தூண்டி அவள் மேல் பழியைப் போடுகிறார்கள். அந்த வகையில் நாட்டில், சமூகத்தில் கொலை, களவு,பாலியல் வல்லுறவு போன்ற செயல்கள் அதிகரிக்கக் காரணமாகிறார்கள்.

மேலும் அரச திணைக்களங்கள், சிறைச்சாலைகள், பொலிஸ் நிலையம், கல்லூரிகள், பெண்கள் நன்னடத்தை நிலையங்களில் பணிபுரியும்போதும் அங்குள்ள அதிகாரிகளால் பலவிதமான வன்முறைகளுக்கு இலக்காக நேரிடுகின்றமை கண்கூடு. இந்தச் சம்பவங்களைப் பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. எனவே பெண்களின் வன்முறைகளைத் தடுக்க வேண்டுமானால் அவர்கள் கராட்டி போன்ற தற்காப்புப் நடவடிக்கைகளில் பயிற்சி பெற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

**க.ஞானமுத்து,**
*கைதடி*

## அதிகாரிகள்

பெண்கள் சமுதாயத்தில் எப்போதும் மதிக்கப்பட வேண்டியவர்களும், போற்றப்படவேண்டியவர்களும் கூட.

ஆனால் இத்தகைய பெண் சமுதாயத்தில் அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்வதற்கு காரணமாக இருப்பவர்கள் அதிகாரிகள்தான்.

ஏனெனில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கு, வழங்கப்படும் தண்டனைகள் மிகக் குறைவு.

இதற்குக் காரணம் அதிகாரிகளின் அசண்டையீனப் போக்குத்தான். குற்றத்தைக் கண்டுபிடிக்கும் அதிகாரிகள் சில நேரங்களில் அவர்கள் தண்டனையை அனுபவிக்கவிடாமல் பிணைப்பணங்களைச் செலுத்துமாறு கூறிவிட்டு தப்பிக்க விடுகின்றார்கள்.

இது குற்றம் செய்பவருக்கு தூண்டுதலாக அமைந்துவிடும். தப்பிப்பதற்கு ஏதோ வழி இருக்கிறது தானே என்று மேலும் தவறுகளை செய்ய முற்படுவார்கள்.

எனவே இது தொடர்பாக அதிகாரங்களில் இருப்பவர்கள் சுட்டிக்காட்டி அதற்கான தண்டனைகளைப் பெற்றுக்கொடுக்க முன்வந்தால் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

**சஞ்சீவன்,**
*யாழ்ப்பாணம் .*

# மெது வாழ்க்கையின் இரகசியம்

★ஒன்றை மாற்றி இன்னொன்றை பிடிக்க நினைத்து ஒன்றையும் பிடிக்காமல் இறந்து போதல் தான் வாழ்க்கை.

★வாழ்க்கையில் வாழ்வதை நாம் ஒத்திப்போட்டுக் கொண்டே போகிறோம். ஜன்னல்களுக்கு வெளியே பூத்துக் குலுங்கும் ரோஜா மலர்களை நாம் ரசிப்பதில்லை. அதற்குப் பதிலாக அடிவானத்துக்கு அப்பால் இருக்கக் கூடிய நந்தவனத்தைப் பற்றியே நாம் அனைவரும் கனவு காண்கின்றோம்.

★இவ்வுலகம் ஒரு முட்செடி போன்றது. முட்செடியின்



முள்ளில் மாட்டிக்கொண்டுள்ள துணியின் ஒரு பகுதியை விடுவிப்பதற்குள் மற்றொரு பகுதி அதில் மாட்டிக் கொள்கிறது. உலகம் எனும் முட்செடியில் அகப்பட்டுக் கொள்பவர்களின் கதியும் அப்படியே!

**ஆ.வதனா,**
கரவெட்டி.

# நிரந்தர இளமைக்கான இரகசியம் இந்த எலியிடம் இருக்கிறதாம்!

என்றும் நிலைத்து நிற்கும் இளமைக்கான ஒருவழியை-காயகல்பத்தை கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் நெடுங்காலமாகவே ஆராய்ந்து வந்திருக்கிறார்கள். ஆனால் அது ஒரு மூஞ்சூறு (எலி) வடிவத்தில் வந்து சேரும் என்று அவர்கள் ஒரு போதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

இந்தப் பிராணி பார்க்க அருவருப்பாக இருக்கிறது, வழுக்கையாக புழுவைப்போன்ற வாலுடன் சுருக்கங்களுடன் காணப்படுகின்றது. வடதுருவத்தில் காணப்படும் நீர்நாய்க்குள்ளது போன்ற கோரைப் பற்களைக் கொண்டுள்ளது. ஆனால் ஆரோக்கியமிக்கதாய் உள்ளது.

கிழக்கு ஆபிரிக்காவில் காணப்படும் இந்தப் பிராணிகள் 30 வருடங்கள் வரை உயிர்வாழும். சாதாரண எலிகளை விட ஏழு மடங்கு அதிக காலம் வாழும் இவை புற்று நோய்க்கு எதிர்ப்புச் சக்தியைக்கொண்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இந்த மூஞ்சூறு எலியின் மரபணு கட்டமைப்பை முதல் தடவையாக லிவர்பூல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பகுத்தாய்ந்து கண்டுபிடித்துள்ளார்கள்.



இந்தப் பிராணி இந்தளவு ஆரோக்கியமாக வைத்திருக்கும் இரகசியத்தை கண்டறிவதே இந்த ஆய்வின் நோக்கம்.

இந்தப் பிராணிகள் நோய்களுக்கு எதிரான-குறிப்பாக புற்றுநோய்க்கு எதிராக கொண்டிருக்கும் எதிர்ப்பு சக்தியின் மட்டத்தை கண்டறிந்தால் சில மிருகங்கள் ஏன் நோய்க்கு எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருக்கவில்லை என்ற காரணத்தை எம்மால் கண்டுபிடிக்க முடியும் என்று ,இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் விஞ்ஞானிகள் குழுவின் தலைவர் டாக்டர் ஜோவாவோ மகல்ஹே கூறினார்.

இந்த மூஞ்சூறு எலிதான் வயதுபோகும் நோய்க்கு எதிர்ப்பு சக்தியை கொண்ட முதல் மாதிரி என்று நாங்கள் நிரூபிக்க முயன்று கொண்டிருக்கின்றோம் என்று கூறினார் அவர்.

ரம்யன்

# துயரங்கள்

காலப் பெரு வெளியில்
நாம் சுமந்த
கணக்கற்ற துயரங்களின்
ஓசைகள்
இன்னமும் எம் செவிகளில்
காடு மேடெல்லாம்
நாம் திரிந்தோம்
துயரங்களை நெஞ்சில்
சுமந்தோம்
உறவுகளைப் பிரிந்தோம்
உயிர்களைப் பறிகொடுத்தோம்
யுத்த ரணங்கள்
இன்னமும் ஆறவில்லை
இத்தனை பிடியிலும்
நமக்கொரு வாழ்வா?



டே.தர்மிகா
முதலாம் வட்டாரம்
அல்வைப்பிட்டி

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரிப்புக்கு காரணம் பொதுமக்களா? அதிகாரிகளா?**

பொது மக்கள்? ☐ அதிகாரிகள்? ☐

பெயர்: ..............................
முகவரி: ..............................
அடையாள அட்டை இல: ..............................
..............................

உங்கள் தீர்ப்புக்களை 28.07.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

இளவல்கள் வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் மரணத்தில் உறவினர் சந்தேகம்: நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும்

## அரியநேத்திரன் எம்.பி வலியுறுத்து

வெல்லாவெளி, ஜுலை 14

கதிர்காம பாதயாத்திரையின்போது காட்டு மிருகத்தின் தாக்குதலில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படும் பெண்ணின் மரணத்தில் உறவினர்கள் சந்தேகம் தெரிவித்துள்ள நிலையில், அது தொடர்பாக நீதியான விசாரணை நடத்தப்பட்டு உண்மை நிலைமை வெளிப் படுத்தப்படவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

தம்பலுவில் வீசி வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான கிருஷ்ணபிள்ளை சந்திரகுமாரி என்பவரே யால வள்ளியம்மை ஆற்றுப் பகுதியில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இது விலங்குகளின் தாக்குதலால் சம்பவித்த மரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அவை விலங்குகளின் தாக்குதல்களால் ஏற்பட்ட காயங்கள் இல்லையென உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண்ணின் சடலம் கிடந்த இடத்துக்கு வந்த படையினரும், வன இலாகா அதிகாரிகளும் சடலத்தை உடனடியாகக் கொண்டு சென்று எரிக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளனர்.

அது தொடர்பாக உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவே அந்த முயற்சியும் கைவிடப்பட்டு சடலம் கதிர்காமம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து திஸ்ஸமஹாராம வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

எனவே, இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் உண்மைத் தன்மைகள் வெளிக்கொணரப்படுவதன் மூலமே பாதயாத்திரை செல்லும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தமுடியும்- என்றார். (ச)



கல்முனை , இஸ்லாமபாத் கிராமத்தில் ஆயுர்வேத வைத்தியசாலை கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில், திகாமடுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் , கல்முனை மாநகர சபை முதல்வர் மஸுர் மௌலானா, மாநகர ஆணையாளர் எம்.ஏ.எம்.நியாஸ், பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர். எம். எஸ். இப்ராலெப்பை, மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஹபீபுல் இலாஹி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# லஞ்சம் வாங்க முயன்ற அதிபர் சிக்கினார்

கொழும்பு, ஜுலை 14

பண்டாரவளை கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர் ஒருவர் ஆறாயிரம் ரூபா இலஞ்சம் பெற முயன்றார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளிடம் பிடிபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டாரவளை, தொரகல, கல்பனாவத்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டின்பேரிலேயே அதிபர் கைதுசெய்யப்பட்டார் என ஆணைக்குழுவின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

முறைப்பாட்டாளர் இந்தப் பாடசாலையின் விடுகைச் சான்றிதழைப் பெறுவதற்காக அதிபரிடம் சென்ற சமயம் அதனை வழங்குவதற்கு ஆறாயிரம் ரூபாவை இலஞ்சமாகக் கொடுக்க வேண்டும் என அதிபர் கேட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

அதற்குச் சம்மதம் தெரிவித்த முறைப்பாட்டாளர் உடனடியாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்ததையடுத்து அதிபர் தனது அலுவலகத்தில் வைத்துப் பணத்தைப் பெற்றுக் கொண்டபோது அதிகாரிகளிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# பொலிஸ் வீட்டில் திருட்டு

கொழும்பு, ஜுலை 14

மஹியங்கனை கெசல்பொத்த பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டுக் கூரையைப் பிரித்து உள் நுழைந்த திருடர்கள் ஒரு லட்சத்து 80 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நகை மற்றும் ரொக்கப் பணத்தைக் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீட்டில் பொலிஸ் உத்தியோகத்தரின் மனைவி உறக்கத்தில் இருந்தவேளையிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

அப்போது பொலிஸ் உத்தியோகத்தர் பதியத்தலாவ நிலையத்தில் கடமையில் இருந்துள்ளார் என மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


# நுரையீரல் புற்றுநோய்

**புற்றுநோய் விழிப்புணர்வுத் தொடர் 14**

வடபகுதியில் மக்களிடையே புற்றுநோய் இப்போது வெகுவேகமாகப் பரவி வருகிறது. இந்த உயிர்க்கொல்லி நோயைக் குணமாக்குவதற்கான பல நவீன சிகிச்சை முறைகள் இப்போது அறிமுகமாகியுள்ளன. ஆனால் புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் பிந்திய நிலையிலேயே சிகிச்சைக்குச் செல்வதால், அதனைக் குணமாக்குவதில் வைத்தியப் பகுதியினர் பல சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது. குடாநாட்டில் புற்றுநோய்க்கு நவீன சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு வேண்டிய இருநூறு (200) மில்லியன் ரூபாவைத் திரட்டும் இலக்குடன் காலி, தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை வரை (TRAIL) அடிச்சுவடு பாதை நடை பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலப்பகுதியில் மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் பெருநோக்குடன் உதயனில் இக்கட்டுரைத் தொடர் வெளியிடப்படுகிறது.

**நுரையீரல்**

எமது உடலில் நெஞ்சறையினுள் கூம்புருவான வலது, இடது நுரையீரல்கள் காணப்படுகின்றன. வலது நுரையீரல் மூன்று மடல்களையும் இடது நுரையீரல் இரண்டு மடல்களையும் கொண்டுள்ளது. நாம் சுவாசிக்கும் போது காற்றில் உள்ள ஒட்சிசன் ஆனது மூக்கு, தொண்டைப் பகுதி, வாதனாளி, சுவாசக் குழாய்கள் ஊடாக நுரையீரலை அடைந்து ஈற்றில் சுவாசச் சிறு குழாய்களூடாக சுவாசச் சிற்றறைகளை அடைகின்றது. (படம்-1)



படம்: 1


சுவாசச் சிற்றறையில் வாயுப் பரிமாற்றம் மூலம் உடலில் இருந்து காபனீரொட்சைட் ($CO_2$) வெளியேற்றப்படுவதுடன் உடற் கலங்களின் தொழிற்பாட்டுக்கு அவசியமான ஒட்சிசன் உள்ளெடுக்கப்படுகின்றது.

**நுரையீரல் புற்றுநோய் என்றால் என்ன?**


புற, அக காரணிகளின் விளைவாக நுரையீரல் கலங்கள் கட்டுப்பாடற்று பிரிவடைந்து அவற்றின் தாய்க்கலங்களின் தோற்றத்திலும் தொழிற்பாட்டிலும் இருந்து மாறுபட்ட கலங்களாக வளர்ச்சியடைதல் நுரையீரல் புற்றுநோயாகும்.

**நுரையீரல் புற்றுநோய் கலங்கள்....**

* வேகமாக வளரக்கூடியவை.
* நுரையீரல் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியவை (படம் - 2).
* நுரையீரல் தொழிற்பாட்டை மட்டுப்படுத்தக்கூடியவை.
* ஏனைய இழையங்களுக்குள் ஊடுருவி வளரக்கூடியவை.
* ஏனைய அங்கங்களுக்கு (ஈரல், என்பு, மூளை) பரவக்கூடியனவ (படம் -3)



படம்: 2





படம்: 3

உலகளாவிய ரீதியில் நுரையீரல் புற்றுநோய் காரணமாக அதிகளவான இறப்புக்கள் ஏற்படுகின்றன. 1930 இற்கு முன்னர் சிகரெட் பாவனைக்கு வர முன்பு மிகக் குறைவாக இனங்காணப்பட்ட நுரையீரல் புற்றுநோய் இன்றைய உலகில் மிக முக்கிய உயிர் கொல்லி நோயாக மாறியுள்ளது. இலங்கையில் ஆண்களில் ஏற்படும் புற்றுநோய்களில் நுரையீரல் புற்றுநோய் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது (படம்-4).

**நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகள்**

**புகையிலை பாவித்தல்:** சிகரெட், பீடி, சுருட்டு புகைத்தல். சுமார் 85 சதவீதத்துக்கு மேலான நுரையீரல் புற்றுநோயின் உருவாக்கத்துக்குப் புகைத்தலே காரணமாக அமைகின்றது. சிகரெட் புகையில் 4000 இற்கு மேற்பட்ட இரசாயனங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் 300 இரசாயனங்கள் புற்றுநோயின் உருவாக்கத்தில் பங்கேற்கின்றது. புகைப்பிடிக்கும் பழக்கமற்றவர்கள் கூட இன்னொருவர் புகைக்கும் போது வெளியேறும் புகையை உள்வாங்குவதாலும் இப்புற்று நோய் உருவாகும். நீங்கள் பாவிக்கும் ஒவ்வொரு சிகரெட்டும் உங்களைக் கொல்லக்கூடிய துப்பாக்கி ரவைக்கு ஒப்பானது. (படம்- 5)





படம்: 4



படம்: 5

**மாசடைத்த வளி:** வாகனங்களின் புகை மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் வளியை மாசடையச் செய்யும். இவ்வாறாக மாசடைந்த வளியை நாம் சுவாசிப்பதன் மூலம் நுரையீரல் புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன (படம் - 6).



படம்: 6


**அஸ்பெஸ்ரோஸ் (Asbestos):** அஸ்பெஸ்ரோஸ் சீற் உருவாக்கல், வெட்டும் போது ஏற்படும் தூசி மற்றும் கப் பல் கட்டுதல் தொழிலில் ஈடுபடும் போது அஸ்பெஸ்ரோஸ் பாவித்தல் போன்றவை நுரையீரல் புற்றுநோயை ஏற்படுத்தும்.

**றேடோன் வாயு:** றேடோன் எனும் கதிரியக்க வாயுவானது பூமியின் சில பகுதியில் காணப்படும் பாறைக் கற்களில் உள்ள ரேடியம் (Radium) என்னும் கதிரியக்க மூலகத்தின் இயற்கையான பிரிவடைதலினால் வளியில் கலக்கின்றது. இவ்வாறான றேடோன் கலந்த வளியை நாம் சுவாசிப்பதால் நுரையீரல் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளது.

**தொழில் சார் பிரச்சினைகள்:** மேலே கூறியவாறு அஸ்பெஸ்ரோஸ் உடனான தொழில்கள் மட்டுமல்லாது அசனிக், பெற்றோலியம் சம்பந்தமான தயாரிப்புக்கள், குளோரேற் மற்றும் நிக்கல் என்பன உள்ளெடுக்கப்படல் கூட நுரையீரல் புற்றுநோய் ஏற்பட வாய்ப்பளிக்கின்றது.

**சில நுரையீரல் நோய்கள்:** நுரையீரலில் மீண்டும் மீண்டும் ஏற்படும் தொற்று, அஸ்மா போன்ற பல காலமாகத் தொடரும் நோய்களும் அதனால் நுரையீரலில் ஏற்படும் மாற்றங்களும் நுரையீரல் புற்றுநோயை ஏற்படுத்த வாய்ப்பளிக்கும்.

**பரம்பரை அலகுகளின் தன்மை:** குறிப்பாகச் சிறுவர்கள் மற்றும் பெண்களில் ஏற்படும் நுரையீரல் புற்றுநோயானது அவர்களின் பரம்பரை அலகுகளில் உள்ள இலகுவில் புற்றுநோயை ஏற்படுத்தும் தன்மை காரணமாக உருவாகலாம். இவ்வாறாக ஏற்படும் நுரையீரல் புற்றுநோயின் காரணமாக சாதாரண நுரையீரலானது முழுமையாக மாற்றமடைந்து அதன் தொழிற்பாடு கள் பூரணமாகப் பாதிப்புற்று ஈற்றில் இறப்பை ஏற்படுத்தும் (படம் -7).



படம்: 7

**புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆலய வரலாறு

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்மன் வரலாற்றுச் சிறப்புக்களை நோக்குமிடத்து கலிங்கை சிங்கை ஆரியன் (1215-1240) யாழ்ப்பாண்த்து அரசனாக இருக்கையில் அவனுடைய சிறிய இராசதானியான நல்லூரைப் பாதுகாக்கும் நோக்குடன் வீரமாகாளி அம்பாள் ஆலயம் ஸ்தாபிக்கப் பட்டது.

யாழ்ப்பாண மன்னர்களின் போர்த் தெய்வமாகவும் வீரமாகாளி அம்மன் விளங்கியதால் அந்தக் காலத் தில் இந்த ஆலயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இவர்கள் வீரத்தை வேண்டி நவராத்திரி விழாவின்போது தங்கள் படைக் கலங்களைக் கொலுவின் மீது வைத்து வழிபட்டு அம்பாளின் அருட்கடாட்சம் பெற்று வெற் றிகளைக் குவித்து வந்தனர்.

இதற்கு சான்றாகச் சில வருடங்களின் முன்னர் சங்கிலிய மன்னன் பயன்படுத்திய பட்டாளத்து வாள் மானம்பூ உற்சவத்தின்போது கன்னி வாழையை வெட்டப் பயன்படுத்தினர். இத்தகைய வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்ட இந்த ஆலயம் தற்போது பரம்பரை பரம்பரையாகச் சைவக் குருமார்களால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையிலே முதன்முதலில் மஹிசாசுர சம்ஹாரம் நடைபெற்ற அம்மன் ஆலயம் என்ற சிறப்பும் இந்த ஆலயத்துக்கு உண்டு. வடக்கு வாயில் நோக்கி அமைந்துள்ள வீரமாகாளி அம்மன் ஆலயமானது யாழ். நகரில் இருந்து பருத்தித்துறை வீதியை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது.

ஆலயத்துக்கு அழகு சேர்க்கும் வகையில் இரு மருங்கிலும் அழகிய மணிக்கோபுரங்களும் சப்த தளங்களைக் கொண்ட இராஜகோபுரமும் அமைந்து காணப்படுகின்றன. ஆலயத்துக்குள் புகுந்ததும் அடியார்களின் கண்ணைக் கவரும் வண்ணம் கொடித் தம்பம் காட்சியளிக்கின்றது.

ஆதிமூலம் என்னும் கர்ப்பக் கிரகத்தினுள் எழுந்தருளியுள்ள கிலாவிக்கிரகம் கருணாம்பிகை வடிவ முள்ளது. அதாவது அம் மூல விக்கிரகமானது மகிடாசுரமர்த்தினி எனவும் அழைக்கப்படுகின்றாள். தேவ சபையில் எட்டுக் கையுடன் காளியம்பாள் சிங்கத்தின் மீது அமர்ந்து காட்சியளிக்கிறாள். மஹோற்சவ காலத் தின்போது எழுந்தருளி விக்கிரகமாக நான்கு கையுடன் கூடிய வீரமாகாளி தரிசனம் தருகிறாள். பரிவார மூர்த்திகளாக விநாயகர், நாகதம்பிரான், கஜவல்லி, மகாவல்லி சமேத சுப்பிரமணியர், சனீஸ்வரன், வைரவப் பெருமான ஆகியோர் காட்சி தருகின்றனர்.

அம்பாளின் ஆலயத்தில் மிகச் சிறப்பான சித்திர வேலைப்பாடுகளையுடைய வாகனங்கள் பல காட் சியளிக்கிக்கின்றன. இந்த ஆலயத் தேரானது வரலாற்று சிறப்பினைக் கொண்டது. அதாவது யாழ்ப் பாணத்தில் தமிழ் சிற்பாச்சாரியார்களால் முதன் முதலில் உருவாக்கப்பட்ட தனித்துவச் சிறப்பினைக் கொண்டு விளங்குகிறது. இந்த ஆலயமானது அன்று தொடக்கம் இன்றுவரை சைவக்குருமார் பரம்பரை யினரால் பரிபாலிக்கப்பட்டும் நித்திய பூசைகள் நடத்தப்பட்டும் வருகின்றன.

## வாழ்த்துச் செய்தி



வரலாற்றுப்புகழ் பெற்ற வண்ணார்பண்ணை வீரமகா காளியம்மன் தேர்த்திருவிழா இன்று சிறப்புற நடைபெறவிருக் கிறது. கடந்த 23 நாள்களாக திருவிழாக்கள் சிறந்த பண்பாட் டுப் பின்னணியில் வெகுவிமரிசையாக இடம்பெற்றுவந்தன. இந்தத் திருத்தலம் பல அடியார்களினதும், திருப்பணிகளுக்கு உதவும் திருவுள்ளம் கொண்டவர்களினதும் நற்செயற்பாடு களால் பல நிலையில் புதுப்பொலிவு பெற்று விளங்குகின்றது. இராஜகோபுரம் தொடக்கம் மற்றும் பல கட்டுமானப்பணிகள் சிறப்புற நடந்தேறி அம்பாளின் திருத்தலம் அழகுற காட்சி தந்து அம்பாளின் அருள்பாலிக்கின்றது.

நீண்டகால யுத்தத்தாலும் பல்வேறு இடர்களாலும் துன்புற்று இருக்கும் தமிழ் மக் களுக்கு தேரேறி வரும் அம்பாளின் கருணைகிட்டி இவர்களின் துன்பங்களை நீங்கி மகிழ்ச்சிகரமான வாழ்வு கிடைக்க வேண்டும். அம்பாளின் அருளும், ஆசியும் யாவருக்கும் கிட்டட்டும்.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர்.

அம்பாள் வெதுப்பகம்
252,254, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஜெனன்
பனை மரக்காலை
140, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

ராணி மரக்காலை
இல. 85, வீரமாகாளியம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: சி. திருச்செல்வம்

பாப்பா வெல்டிங் வேக்ஸ் சொப்
நவீன தொழில் நுட்பக் கருவி மூலம் சில்வர் வேலைகளும் மற்றும் கேற், கிறில் வேலைகளும், வெல்டிங் வேலைகளும் ஓட்டோக்களுக்கான சகல வேலைகளும் சிறந்த முறையில் குறைந்த செலவில் செய்து கொடுக்க எம்மை நாடுங்கள்.
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

TRAVELS & TOURS
A-9 COLOMBO TO JAFFNA COLOMBO
ESWARRAN TRANSPORT SERVICES
0777 674 119 077 3865439, 077 6136911

அம்பாள்
மரக்காலை
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

கிருஸ்ணா நகை மாளிகை
அசல் 22 கரட் தங்க நகைகள்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: கிருஸ்ணா அடகு கடை,
370,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

வஜிதா மோட்டார் சைக்கிள்
திருத்தகமும் சேவிஸ் சென்ரரும்
300/1, நாவலர் வீதி, ரயில்வேச் சந்தி யாழ்ப்பாணம்
தொ.இல. 0778097741, 0215672219
உரிமையாளர்: M.வசந்தன்


கஜமுகன் ஹாட்வெயர்
147,149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

City Link Mobile & Computer System
370, Point Pedro Road, Anaipanthi, Jaffna.
Mobiles
Subwooters
Best price in Jaffna.
Computers
Printers/ Scanner
T.P.: 0778424015, 0779919555 Mobile & Computers Acussovies

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை
# ந ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம்
# த்திருவிழாச் சிறப்புமலர் - 14.07.2011

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



சரித்திரப் பெருமை வாய்ந்த யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ வீரமா காளி அம்பாள் ஆலயத்தில் இன்று ரதோற்சவம். காவல் தெய் வமாக விளங்குகின்ற அன்னை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் அழ கிய சித்திரத் தேரிலே ஆரோகணித்து அடியார்களுக்கு அருள் புரிய அலங்கார பூஜிதையாக அருள்காட்சி நல்கும் அற்புதத் திருநாள் இன்றாகும்.

மஹோற்சவத்திலே தேர்த்திருவிழா இறைவனின் பஞ்ச கிருத் தியமான ஐந்தொழிலில் அழித்தலைக் குறிப்பதாகும். ஆகவே, வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் நாட்டிலே துன்பங் களையும் துயரங்களையும் இல்லாதொழித்து எல்லோரும் மகிழ்ச் சியோடி ணைந்த மங்களகரமான இனிய நல்வாழ்க்கை வாழத் திருவருள் புரிய வேண்டு மென்று நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து எல்லாம்வல்ல தாய் ஸ்ரீ விரமா காளி அம் மனையும் உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குவதில் பெருமிதமுறுகிறோம்.

இன்று அம்பிகை தேரேறும் நல்லநாள் முதலாக எல்லோரும் இன்புற்றிருக்க வழி பிறக்க வேண்டுமென்று வாழ்த்தி மகிழ்ந்து ஆசி நல்குகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஆதீன குருமுதல்வர்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்,
யாழ்ப்பாணம்.

## ஆலய பிரதம குருவின் அருளாசிகள்



''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்று நம் முன்னோர்கள் நினைத்ததால் தானோ வண்ணை நல்லூர்தனில் இறைவன் உறையும் இடமும் ஆன்மாக்கள் ஒருமுகப்படும் ஸ்தல முமாகிய ஆலயங்கள் நிறைந்திருக்கின்றன. எங்களுக்கெல்லாம் காவல் தெய்வமாக விளங்குகின்ற அன்னை வீரமாகாளி அம்பாள் சிங்காசனம் மீதிருந்து மகிடாசுரவர்த்தனியாக அருள்புரிகின்றாள்.

இந்த ஆண்டு மஹோற்சவத்தில் மஹோற்சவ குருவாகிய சிவ ஸ்ரீ பாலமனோன் குருக்களுக்கும், ஆதீன கர்த்தாக்களில் ஒருவரா கிய சிவஸ்ரீ.நா.சிவதர்சக் குருக்கள் அவர்களுக்கும் முதலில் எனது நல்லாசிகளையும், அவர்கள் இளவயதினராக இருந்தாலும், குருத் துவத்தில் சிறந்து விளங்கி இன்றைய இளைய சமுதாயத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டுமென வாழ்த்துகின்றேன். அன்னை பராசக்தி இதரபவனி வரும் இந்த நன்னா ளில் அனைவரும் வணங்கிப் பயன்பெறுவதுடன் அன்னைக்கென நாளை நடைபெற இருக் கும் தீர்த்த மண்டபத்தில் தீர்த்தமாடும் காட்சியையும் கண்டுகளித்து அருளாசிகள் பெற அம்பி கையைப் பிரார்த்திக்கின்றேன்.

ஆலய பிரதம குருவும் ஆதீன கர்த்தாவுமாகிய
சிவஸ்ரீ.செல்வராசாக் குருக்கள் (காந்தி ஐயா).

## வாழ்த்துச் செய்தி



தமிழ் வேந்தர் காலத்து திருத்தலங்களுள் முதன்மையான சக்தி தலமாக நல்லூர் வீரமாகாளி ஆம்மன் ஆலயம் விளங்குகிறது. காவல் தெய்வமாகவும் களத்துக்குப் போகும் வீரர்கள் வழிபாடு செய்யும் தெய்வமாகவும் அக்காலத்து திருத்தலம் சிறப்புப் பெற் றுள்ளது.

சங்கிலி மாமன்னன் சரித்திரத்தோடு மிக நெருங்கிய தொடர் புடைய இந்தத் திருக்கோயில் சைவத் தமிழர்களின் பெரும் சொத்தாகக் கருதப்படுகிறது. அருள் நிறைந்த அம்பாளின் கீர்த்தி அறிந்து பல அடியார்கள் திருக்கோயில் நாடி வருகிறார்கள். மரபு வழிப் பூசகர்கள் நெறிமுறை தவறாது நல்ல வண்ணம் காத்து வருகின்றார்கள். ஆண்டு தோறும் திருப்பணி வேலைகள் நடைபெற்று ஆலயம் புதுப்பொலிவுபெற்றுள்ளது. திருக் கோயிலின் தேர்த்திருவிழா குறித்து வாழ்த்து வதில் ஆனந் தமடைகின்றேன். வீரமாகாளி எம் மண்ணுக்கு விடிவையும் நிம்மதியையும் தர பிரார்த்திக்கி றேன்.

ஆறு. திருமுருகன்
தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஆறுமுகம் சிற்பாலயம்
காளி அம்பாள் வீதி,
திருநெல்வேலி.



YOGI ' S BEAUTY
No.14, Ebenizer place Dehiwala North,
Tel: 0777164923 yogisbeauty@yahoo.com
75, Amman Road, Nallur, Jaffna. T.P.: 0212222796, 0213210077






## ஆலய பிரதம குருவின் ஆசியுரை




சாமகானம் பாடி சிவனையே மகிழ்வித்த சிவபக்தன் இரா வணன் ஆண்ட இலங்காபுரியின் வடபால் அமைந்த சைவ மும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாம் யாழ்ப் பாண நன்னகரின் ஆலயங்களும், சைவசிரோன்மணிகளும் நிறைந்து வாழும் வண்ணை மாநகரில் சிம்மாசனத்தில் வீற் றிருந்து வீரமாகாளி அம்பாள் அருளாட்சி புரிகின்றாள்.

அழகிய சித்திரத்தேரில் அம்பிகை ஆரோகணித்து வரும் அற்புதக் காட்சியை அடியார்கள் அனைவரும் கண்டுகளித்து அருளாசி பெறவேண்டுகின்றேன். இந்த ஆலயப் பிரதமகுரு வில் ஒருவரான செல்வராசாக் குருக்களின் வழிகாட்டலுடன் இந்த ஆண்டு மஹோற்சவத்தில் அன்னையின் சித்திரத்தேர் தரித்து நிற்கும் தரிப்பிட கலஷ அபிஷேகமும் ஆலயத் தொண்டர்களுக்கான சபைக்கட்டடத் திறப்பு விழாவும் இனிதே நடந்தேறியமை அன்னையின் அருளாசியே என்றால் மிகையாகாது.

நாளைய தினம் ஆலயத்தில் தீர்த்தம் சிறப்புற நடைபெற அன்னையின் அருளாசி வேண்டி நிற்கின்றேன். 'நான்' என்ற மமதையும், 'எனது' என்ற அகந்தையும் இல்லா தொழிக்கும் சம்ஹார (அழித்தல்) உற்சவமான இரதோற்சவத்தில் அடியார்கள் அனை வரும் கலந்து ரதோற்சவ காட்சியைக் கண்டுகளித்து, தரிசித்து அருள்பெற வீரமாகாளி அம் பாளை உளமார வேண்டி அவளது அருள்கிடைக்க ஆசி கூறுவதில் பெருமகிழ் வடைகிறேன்.

ஆலய பிரதம குருவும், ஆதீனகர்த்தாவுமான
சிவஸ்ரீ.நா.சிவதர்சக் குருக்கள்.

## மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச் செய்தி



அண்டசராசரங்களின் நாயகியாகவும், வேண்டுவோர்க்கு வேண்டுவன வரமாக அளிக்கும் அகிலாண்ட கோடியாகிய அன்னை பராசக்தி வீற்றிருந்து அருளாட்சி புரியும் வரலாற் றுப் பிரசித்திபெற்ற ஆரிய மன்னர்கள் பூஜித்த ஆலயமான வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் இந்த வருட மஹோற்சவத்தில் அடியேனும் அம்பாளைப் பூஜித்துக் கொடி யேற்றியமை அம்பாளின் அருளேயன்றி வேறொன்றுமில்லை.

மஹோற்சவம் என்கின்ற மாபெரும் ஆலயத்திருவிழா படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் குறித்து நிற்கின்றது. அதிலும் இன்றைய தினம் நடைபெறும் தேர்த்திருவிழாவில் ஜெகந்நாயகி தேரில் ஆரோகணித்து 'அறி யாமை' என்கின்ற இருளை அகற்றி ஞான ஒளியை மக்களுக்கு அளிக்கும் படியாக அதா வது அழித்தல் தொழிலினை மேற்கொள்கின்றாள்.

அன்று சங்கிலி மன்னனின் காவல் தெய்வமாக மிளிர்ந்த வீரமாகாளி அம்பாள் எங்களை யெல்லாம் துன்பத்தினின்றும் காத்தருளி அடியார்கள் யாவரும் தேர்த்திருவிழாவைக் கண்டுகளித்து எல்லா நலன்களும் பெற்று நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல வண்ணை வீரமாகாளி அம்பாளை வணங்கி ஆசி கூறி அமைகின்றேன்.

மஹேற்சவ பிரதம குரு,
'கவஜா ரோகன விபூஷணம்' சிவஸ்ரீ.பா.பாலமனோன் குருக்கள்.

## காட்சி தருவாய் எங்களுக்கே!

வண்ணை வீரமாகாளியே வருவாய் சித்திரத் தேரினிலே!
கண்ணை இமை காப்பதுபோற் காத்தருளும் அம்பிகையே!
மண்ணும் விண்ணும் எங்கும் எதிலும் உன் அரசாட்சியே
கண்ணைப் பறிக்கும் அழகோடு காட்சி தருவாய் எங்களுக்கே!

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.

## வரலாற்று நாயகியின் வான்புகழ் கோயில்



சீர்பூத்த யாழ்ப்பாண நன்நகரில்
பேர் பூத்த சைவத்திருத்தலங்கள் சிலவற்றில்
எழில்பூத்து இயற்கை வளம்பூத்து
ஒளிபூத்து ஒப்பரிய புகழ்பூத்து
அன்னையவள் அருள்பூத்து நிற்பது
வண்ணை நல்லூர் வான்புகழ் வீரமாகாளிகோயில்
அன்று சங்கிலிய மாமன்னன் தாழ்பணிந்து
தான் தாங்கி வந்த வீர வாள்தனை சாத்திவைத்து
அன்னையவள் அருள்பெற்றதிந்தக் கோயில்
அண்மைக் காலத்து அடியவர் திருத்தொண்டால்
துடிப்புமிகு இளைஞர்களின் துடிப்பதனால்
காவியம் படைத்த கோயில் ஓவியக் கோயிலாச்சு
புதுமைசேர் தேர்முட்டி புனித நீர்த்தடாகம்
பொலிவுறு மண்டபம் பொன்னொளிர் கோபுரம்
வனப்புற வைரவர் வந்தமர்ந்திட கோயில்
நாள்தோறும் அன்னம் நல்கிடும் பாங்கும்
அழகுறத் தொண்டர்க்கு அமைந்ததோர் காரியாலயம்
இத்தனை எழிலையும் இன்புறக் கண்ட
தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே!
நல்லைக் கந்தனார் நலம்திகழ் கோயில்
கயிலாச நாதனார் கவின் நிறைகோயில்
சட்டநாதர் எனச் சாற்றிடும் கோயில்
பெருமாள் புகழைப் பேசிடும் கோயில்
இத்தனை கோயில் நாற்புறம் சூழ
அன்னை நடுவனாய் அரசோச்சுகின்றாள்
வாழ்க அந்தணர், வாழ்த்திய அடியவர்
தானமும் தவமும் செய்திடும் சான்றோர்
அன்னையின் அருளால் அனைவரும் வாழி.

ஆக்கம்: வீரகடகவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14 ஜூலை 2011 வியாழக்கிழமை

# தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்டமைக்கு அதிகாரிகளின் அசிரத்தையே காரணம் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூலை 14

தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதி செய்யபட்டமைக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளின் அசிரத்தையே காரணம். அவர்கள் அக்கறை எடுத்திருந்தால் அதனைத் தவிர்த்திருக்கலாம் என பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெற்றோலியப் பொருள்கள் இறக்குமதி செய்து அவற்றை விநியோகம் செய்யும்வரை கூட்டுத்தாபனத் தலைவரும், கூட்டுத்தாபனத்தின் மொத்தக் களஞ்சியசாலைத் தலைவருமே பொறுப்பேற்கவேண்டும். இவர்கள் இருவரின் தலைமையிலும் இப்போது நடவடிக்கைக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இத்தகைய விபரீதங்கள் நடந்தால் அவர்கள் இருவருமே பொறுப்பேற்க வேண்டும்.

தரம்குறைந்த பெற்றோலைப் பாவித்ததால் வாகனங்கள் பழுதடைந்துள்ளன என ஏராளமான முறைப்பாடுகள் கூட்டுத்தாபனத்துக்கு கிடைத்துள்ளன. இவையாவும் இப்போது குழுவொன்றால் ஆராயப்படுகிறது.

அதற்கேற்ப பாதிக்கப்பட்ட வாகனங்கள், ஓட்டோக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளது. மேலும் நாட்டுக்குத் தேவையான எரிபொருள்களைக் கையிருப்பில் வைத்துக்கொள்வதற்காக மொத்தக்கொள்வனவுக் குழுவொன்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹரிஜயவர்தன தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

வாராந்தம் கையிருப்பைச் சோதித்து அதுபற்றிய விவரத்தை ஒவ்வொரு வியாழக்கிழமையும் சமர்ப்பிக்க வேண்டுமென இக் குழுவுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் மொத்தக் களஞ்சியசாலையின் தலைவரான மேஜர் ஜெனரல் டபிள்யூ.டீ.சொய்சாவும் இக் குழுவில் அங்கம் வகிக்கிறார். இறக்குமதி செய்யப்படும் பெற்றோலியப் பொருள்களின் தரம், அளவு போன்ற விரிவான அறிக்கையை இக்குழு எமக்கு கிரமமாக சமர்ப்பிக்கவேண்டும்.

எதிர்வரும் காலங்களில் பெற்றோலியப் பொருள்களை இறக்குமதி செய்து அவற்றை விநியோகம் செய்யும் வகையிலான பூரண பொறுப்பை இந்தக் குழுவே ஏற்கவேண்டும் - என்றார். (ச-5)

# தரம் 7 மாணவருக்கு தகைமைப் பரீட்சை

கொழும்பு, ஜூலை 14

நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் கல்விபயிலும் தரம் 7 மாணவர்களுக்கு தகைமைப் பரீட்சை ஒன்றை நடத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மாணவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இந்தப்பரீட்சை நடத்தப்படவுள்ளது என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# பொலிஸ் தொப்பிகள் இறக்குமதி

கொழும்பு, ஜூலை 14

பொலிஸ் தொப்பிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் 19 ஆயிரம் தொப்பிகளை இறக்குமதி செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன என பொலிஸ் தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு 400, பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு 700, பொலிஸ் கான்டபிள்களுக்கு 1,000 வெள்ளை தொப்பிகள், மேலும் 7,500 வழக்கமான தொப்பிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் பொலிஸ் சீருடைக்கான இடுப்புப்பட்டிகள் 20 ஆயிரமும், பெரிய பொத்தான்கள் 25 ஆயிரமும் கொள்வனவு செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தெற்காசிய கடல்சார் பாதுகாப்பு மாநாடு கொழும்பில் ஆரம்பம்

தெற்காசிய கடல்சார் பாதுகாப்பு மாநாடு இலங்கையில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெறும் இந்த மாநாட்டில் பங்களாதேஷ், மாலைதீவு,இலங்கை, ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய ஐந்து நாடுகளின் கடற்படை அதிகாரிகள் பங்கேற்கின்றனர். கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இந்த மாநாடு நாளை வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புற்றெனிஸ், இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திசநாயக்க ஆகியோர் இந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்தனர். தெற்காசிய கடல்சார் பாதுகாப்பு மாநாடு என்று அறிவிக்கப்பட்டுள்ளபோதும், தெற்காசியாவின் இரு பிரதான கடற்படைகளைக் கொண்டுள்ள இந்தியாவும் பாகிஸ்தானும் இதில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)


## காணி விற்பனைக்கு உண்டு

தெல்லிப்பழை வீதியில் உள்ள சிறுவிளானில் மெயின்றோட் அருகில் 34 பரப்புக் காணி வெட்டுக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: மத்தேசு அருளப்பு

தொ.பே.இல.: 0779037518, 0779459186

பெரியவிளான், ஆத்தியோலை.

## விற்பனைக்கு

றக்கா வீதியில் அமைந்துள்ள 2½ பரப்புடனான 2/1 இலக்கமுடைய இரு வழிப்பாதையுடைய காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

0779955754, 0750405806


## கேள்வி அறிவித்தல்

### கால்நடை வைத்திய அலுவலகம், நல்லூர்

### கட்டடத்தொகுதியை இடித்து அகற்றுவதற்கான கேள்வி கோரல்

தலைவர், திணைக்கள கொள்ளல் குழு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வடமாகாணம் அவர்களால் மேற்படி கால்நடை வைத்திய அலுவலக கட்டடத் தொகுதியை இடித்து அகற்றுதல் தொடர்பாக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பகிரங்க கேள்வி கோரப்படுகின்றன.

1.அக்கறை கொண்டுள்ள கேள்விதாரர்கள் விலைக்கேள்வி ஆவணங்களை எழுத்து மூலமான கோரிக்கை வாயிலாக உதவிப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 500= மீளளிக்கப்படாத தொகையை காசாகச் செலுத்தி 15.07.2011 தொடக்கம் 21.07.2011 ஆம் திகதி வரை வேலை நாள்களில் மு.ப.9 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரையான காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

2. இந்தக் கட்டடமானது பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையத்துக்கு அருகில்) எனும் விலாசத்தில் அமைந்துள்ளது. எனவே கேள்விதாரர்கள் இக்கட்டடத்தை 15.07.2011 தொடக்கம் 21.07.2011 வரையான காலப் பகுதியில் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 3 மணி வரை நல்லூர் கால்நடை வைத்தியரின் அனுமதியுடன் பார்வையிடலாம்.

3. சகல கேள்விதாரர்களும் மீளளிக்கத்தக்க ரூபா 10,000 பெறுமதிக்கு கேள்விப் பிணைப்பொறுப்பு ஒன்றினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பிணைப் பொறுப்பானது "மாகாணப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் - வடமாகாணம்" எனும் பெயருக்கு அரச வங்கியில் பெற்றிருத்தல் வேண்டும். பிணைப்பொறுப்பு 21.07.2011ஆம் திகதியிலிருந்து 60 நாள்களுக்கு வலுவில் இருத்தல் வேண்டும்.

4. விலைக்கேள்விகள் 22.07.2011 ஆம் திகதி அன்று (வெள்ளிக்கிழமை) பி.ப 2மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்கள கொள்ளல் குழு, கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வடமாகாணம் 155 ஆம் கட்டை ஏ-9 வீதி, கிளிநொச்சி என்ற முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்திய விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் மேற்குறிப்பிட்ட முகவரியில் 22.07.2011 ஆம் திகதி பி.ப 2 மணிக்குத் திறக்கப்படும். திறக்கப்படும் போது கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.

5.விலைக்கேள்வி ஆவணங்கள் மூலப்பிரதி மற்றும் இணைப்பிரதி ஆகிய தனித்தனி உறைகளில் இட்டு உறையின் இடப்புற மேற்புறத்தில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

6. கட்டடத்தை இடித்து அகற்றும் வேலை கீழ் வருவனவற்றினைக் கொண்டிருக்கும்.

1.கூரை ஓடுகள், மரங்களை அகற்றுதல்
2.மின் இணைப்பு பொருள்களை அகற்றுதல்
3.சுவர், தூண், சிமெந்துக்கல் என்பவற்றை நில மட்டத்துக்கு ஒப்புரவாக்கல்.
4. கட்டடத்தை இடித்து அழிக்கும் போதும் வெளியகற்றும் போதும் ஏற்படும் குழிகள், பள்ளங்கள் அனைத்தும் நிரப்புதல்.

7. பொருள்களுக்கான கேள்வி மேற்படி வேலைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

8. பாவனைக்குதவாத இடிபாடுகள் அனைத்தும் கால்நடை வைத்திய அலுவலக வளவில் இருந்து அகற்றப்படுவதுடன் பாவனைக்கு உதவக்கூடிய பொருள்கள் ஒழுங்காக அவ்வளாகத்தினுள் அடுக்கி வைக்கப்பட வேண்டும்.

9.இடித்தழிக்கும் நடவடிக்கைகள் மாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் மேற்பார்வை செய்யப்படும்.

10. வேலைகள் நடைபெறும் போது அயலிலுள்ள கட்டடங்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தலைவர்,
திணைக்கள பெறுகை சபை,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வடமாகாணம்.

(சி/1741, 20,25)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 23.03.1944
மறைவு: 28.06.1999

திதி: பூரணை
14.07.2011

**செல்வி பரமேஸ்வரி செல்லத்துரை**

அன்புக்கும் பண்புக்கும் பாசத்துக்கும் உறைவிடமாய்
உள்ளத்தால் உயர்வாகி வாழ்வுக்கு வழிகாட்டி
இதயத்தில் வீற்றிருக்கும் எங்கள் அன்புத் தெய்வமே
ஆண்டுகள் பன்னிரண்டு ஓடி மறைந்தாலும் ஆறாது
- எங்கள் துயர்......

'தாயகம்' கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

உங்கள் நினைவுடன்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சவரிமுத்து பஸ்ரியாம்பிள்ளை



இளவாலை, கல்லூரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து பஸ்ரியாம்பிள்ளை கடந்த (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து- மேரிமாகிறேற் தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற மேரி புஸ்பராணியின் அன்புக் கணவரும், சேவியர் (உரிமையாளர், பிள்ளையார் வெதுப்பகம், சுன்னாகம்), விக்ரர் (ஜேர்மனி), அன்ரன்(உரிமையாளர், நிறோ வெதுப்பகம்- இளவாலை), மேரி யோசேப்பின்(வவுனியா), லூமின்(கனடா), பிரான்சிஸ்கா(கனடா), றெஜினா(டென்மார்க்), தர்சினி(Care International, Vavuniya), மனுவெலா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மினோஜன்(இத்தாலி), பாலினி (பிரான்ஸ்), சுஜீவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்தனின்(பிரான்ஸ்) மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (14.07.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.30 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கற் திருப்பலியைத் தொடர்ந்து நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
இளவாலை.

(சி/1753)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் மத்தியில் மூலிகை உணவின் பயனை உணரச் செய்த நவக்கிரி அரச மூலிகைத் தோட்ட நிர்வாகத்தினர்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நவக்கிரி அசர மூலிகைத் தோட்டம் மற்றும் அதன் செயற்பாடுகள் உள்ளூர் மக்கள் மத்தியில் மூலிகை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. உள்ளூரில் இயல்பு நிலையில் கிடைக்கும் தாவரங்கள் இயற்கைப் பொருள்கள் எந்த வகையில் உடல்நலத்துக்கும் உள நலத்துக்கும் ஊட்டமளித்து இயற்கையோடு இயைந்து வாழ வழிப்படுத்துகின்றது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளது.

மூலிகைத் தோட்டத்தில் வடபகுதியின் காலநிலையில் இயல்பாக வளரும் தாவரங்களும் ஏனைய ஈரவலய, இடைவெப்பவலயங்களில் வளரும் தாவரங்களும் உரிய காலநிலை சூழலில் வளர்வதற்கு ஏற்ற செயற்கை சூழல் உருவாக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன.

இந்த வகையில் வளரும் தாவரங்கள் மற்றும் இயல்புகள், அவற்றின் பயன் தொடர்பாக கிராமிய மட்ட சுதேச வைத்திய மருத்துவ முகாம் நடத்தி மக்களுக்கு மூலிகைகள் தொடர்பான செயல்முறை விளக்கம் அளிக்கப்படுகிறது. மக்கள் மத்தியில் மூலிகைகளைப் பராமரிக்க வேண்டும், தமது உணவில் அவற்றை சேர்த்துக்கொள்ளவழிப் படுத்தி வருகின்றது.

அரச மூலிகைத்தோட்ட நிர்வாகத்தினால் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைத்த நடமாடும் மூலிகை இலைக் கஞ்சி விற்பனை நிலையத்தின் செயற்பாடுகள் ஆக்கபூர்வமான விளைவுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.




நடமாடும் விற்பனை நிலையம் மூலம் வல்லாரை, பொன்னாங்காணி மற்றும் மூலிகை கீரைவகைகள் தீட்டல் பச்சை அரிசி, தேங்காய் பால் மற்றும் இயற்கைச் சுவையூட்டிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மூலிகை இலைக் கஞ்சி ஒரு கிண்ணம் ரூபா 20 வீதம் விற்பனை செய்யப்படுகின்றது. இதனை மக்கள் விருப்பத்தோடு வாங்கி அருந்துவதையும் அதே போன்று தாமும் வீடுகளில் தயாரித்து பயன்படுத்தும் பழக்கத்தையும் உண்டாக்கியுள்ளது. இந்த நடமாடும் விற்பனை நிலைய வண்டி சுதேச வைத்திய திணைக்களத்தினால் மூலிகைத் தோட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடக்குமாகாண சுதேச வைத்திய திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி சியாமா துரைரத்தினம் கருத்துத் தெரிவிக்கையில் "அரச மூலிகைத் தோட்டம் ஊடாக பல்வேறு செயற்திட்ட முன்னெடுப்புக்கள் மேற்கொள்வதற்கு திட்ட முன் மொழிவுகள் உள்ளன.

ஆனால் அவற்றை உரிய முறையில் முன்னெடுப்பதற்கும் அரச மூலிகைத் தோட்டத்தை நூற்றுக்கு நூறு வீதம் பயன் உறுதியுடன் மேம்படுத்துவதற்கும் உரிய நிதிவளம் இல்லாமல் இருப்பது பெரும் குறைபாடாக உள்ளது. இதற்கான நிதி வளத்தைத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் உறவுகள் மற்றும் உள்ளூரில் நிதிவளம் படைத்தோர் உதவ முன்வரவேண்டும் எனக் கூறினார்.

இந்த கோரிக்கை உரியமுறையில் பயன்விளைவிக்கும் இடத்து குறுகிய காலத்தில் மக்களுக்கு உடனடியாகப் பயன் தரும் வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்படலாம்.

இறைவனால் உயிரினங்களின் நல்வாழ்வுக்காகப் படைக்கப்பட்ட மூலிகைகள் மற்றும் சுதேசவைத்திய முறைகள் புத்தூக்கத்துடன் மீண்டும் வளரத் தலைப் பட்டிருப்பது மக்களின் வரவேற்பை பெற்றுள்ளது.

மக்களுக்குச் சுதேச வைத்திய முறையில் உள்ள நம்பிக்கையை சுதேச வைத்தியர்கள் காப்பாற்றிக் கொள்ள முன்வராமல் சுதேச வைத்தியத்தை கற்றுவிட்டு ஆங்கில மருந்துகளை மட்டும் பயன்படுத்தி மக்களுக்கு வைத்தியம் செய்யும் துர்ப்பாக்கியமான பாரம்பரியம் முற்றாக மாற்றி அமைக்கப்படவேண்டும். இந்த வகையில் மக்கள் ஏமாற்றப்படுகின்றார்கள் என்ற உண்மை நிலையைச் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் கண்டுகொள்ளவேண்டும். சுதேச வைத்தியர்கள் சுதேச வைத்திய பாரம்பரிய முறைகளில் வைத்தியம் செய்வதற்கு வழிப்படுத்தவேண்டும்.

சுதேச வைத்தியர்கள் மற்றும் சுதேச வைத்திய முறையில்கற்றுத் தேர்ந்தவர்கள் சுதேச வைத்திய முறைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கின்ற நிலை உருவாகவேண்டும். அப்போது தான் மக்கள் மனக் குழப்பமின்றி நம்பிக்கையுடன் தமக்கு விருப்பமான துறையூடாக தமது வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அரச மூலிகைத் தோட்டத்தின் பணி முன்னெடுப்புக்கள் மேலும் வளர வாழ்த்துவோம்.

**ஞான ஆதவன்**

(முற்றும்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
**அ.மரியகொறற்றி [கிளிஸ்ரா]**

அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால்
கல்முனை திருஇருதயநாதர் மண்டபத்தில் 26.06.2011 இல்
சாமஸ்ரீ தேசமானிய விருது பெற்றதை
வாழ்த்துகிறோம்.

தாரமாய் இல்லத்தை வளர்த்திட - உதவினாய்
தாயாய்ப் பிள்ளைகளை வளர்த்திட - உதவினாய்
...
பிள்ளைகள் நாம் உன்னை வாழ்த்துகின்றோம்.

பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

அனிஸ்ரா (பிரான்ஸ்),
மதனி (யூனியன் அஸ்சுரன்ஸ்),
அகில்ரன், அனுசா,
அலெக்சியா, டொனி.

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயிலும் வரையான
முழுக்கட்டணம் 5000/- By.ந.விக்னேஸ்வரன்
ஆச்சாரி, 426 (302), கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே.இல: 0776751649

## மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகம் நடத்தும் எதிர்கால தொழில் வாய்ப்புக்கான மாபெரும் கருத்தரங்கும், தலைமைத்துவ பயிற்சியும்

We Serve

வேலை வாய்ப்பைத் தேடி...
அது கிடைக்காது கவலையுடன் இருக்கிறீர்களா...?
என்ன செய்யலாம்...?
விடை தருகிறார்கள்...

★லயன் ரவீந்திரா [முன்னாள் தலைமை முகாமையாளர், கொமர்ஷல் வங்கி]
★ திரு.ம.விஜிந்தன் [மனிதவள முகாமையாளர், வட மாகாணம், யூனியன் அஸ்யூரன்ஸ் PLC)
★ திரு. C.N. மதிவதனன் (முகாமையாளர், யூனியன் அஸ்யூரன்ஸ் PLC, வடமாகாணம்]
★ காலம் : 16.07.2011 சனிக்கிழமை மு.ப - 10 மணி
★ இடம் : T.C.T. மண்டபம், நாவலர் வீதி,ஆனைப்பந்தி [தியாகி அறக்கொடை நிலையம்]
அனுமதி : முற்றிலும் இலவசம் (முந்தும் 150 பேருக்கு)
விரைந்து வாருங்கள்
அறிந்து கொள்ளுங்கள்
அரியதொரு வேலைவாய்ப்பை.

(சி/1742) தலைவர்.

## பதவி வெற்றிடம்

இலங்கையில் முன்னணி நிறுவனமான
**Brantel Lanka (pvt)Ltd** நிறுவனத்தின்
யாழ்.மாவட்டத்தில் பணியாற்ற கீழ்வரும் பதவி நிலை வெற்றிடங்கள் உள்ளன.

**1. Sales Executives** : ஆண்
விற்பனைப் பிரதிநிதிகள்
தகைமை: 1. க.பொ.த.உயர்தரம்
2. மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம்
3. 30 வயதுக்குட்பட்டோர்.

**2. Customer Related Officer** : பெண்
தகைமை : 1. க.பொ.த.உயர்தரம்
2. ஆங்கிலம், சிங்களம் பேசத் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
3. 25 வயதுக்குட்பட்டோர்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:
**E-Tel Show Room**
328, Hospital Road, Jaffna.
நாள் : நாளை (15.07.2011) வெள்ளிக்கிழமை
நேரம் : மு.ப. 10 மணி - 12 மணிவரை.
(சி/1738)

## காணவில்லை



**நவரத்தினராஜா நந்தகுமார்**

9/2, வெள்ளாந்தெரு, கொட்டடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட *நவரத்தினராஜா நந்தகுமார்*, வயது 36, இவர் 08.07.2011 அன்று பி.ப. 4.30 மணியளவில் கொழும்பில் வைத்துக் காணாமற்போயுள்ளார். இவர் $1\frac{1}{2}$ மாதங்களுக்கு முன் தடுப்பு முகாமில் இருந்து விடுதலையானவர். மேற்படி நபரைக் கண்டவர்கள் கீழ்க் காணும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:
தாமோதரம்பிள்ளை நவரத்தினராஜா
(தந்தை)
தொ.பே.இல: [illegible] (…770)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?


**மேடம்:**
கடும் பேச்சுக்களை தவிர்க்க வேண்டிய நாள். திட்டமிட்ட வேலைகளில் திடீரென மாற்றம் செய்யலாம். சிலரிடம் பணம் கடன் வாங்கலாம். நண்பர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். பணிபுரிவோர், வேறு வேலைகள் காரணமாக திடீர் விடுப்பு எடுக்கலாம். உடல் உபாதைகளைச் சந்திக்கலாம்.


**இடபம்:**
வியக்க வைக்கும் சம்பவங்கள் நடக்கலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். எதிர்பாராத உதவிகள் கிடைக்க வாய்ப்பு உண்டு. வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவீர்கள். மாலை நேரத்தில் பயணத் தடைகளை எதிர்கொள்ளலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் வேலைகளைச் செய்ய நேரிடலாம். மறதியால் அவதியுண்டு.


**மிதுனம்:**
நல்ல எண்ணங்கள், சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள். பணப்பற்றாக்குறை தீரும். உங்களின் பிள்ளைகளை, குடும்பத்தினரைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். உங்களை புகழ்ந்து பேசி சிலர் காரியம் சாதிக்கலாம். பிரியமான உறவினர்களின் சந்திப்பு நிகழும். சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லலாம்.


**கடகம்:**
வசதியான வாழ்விற்கு தேவையானவற்றை செய்யும் நாள். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும். இருந்தாலும், மற்றொரு வகையில் வரவு வரும். வழக்கமான சில வேலைகளை ஒத்திவைத்து விட்டு புதிய வேலைகளில் ஈடுபடுவீர்கள். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சவால்களை முறியடித்து சாதிக்கும் நாள்.


**சிங்கம்:**
மற்றவர்களின் விமர்சனங்களைப் பற்றி கவலைப் படாமல் நீங்கள் நினைத்ததை செய்வீர்கள். மாற்று மத நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். காலை நேரத்தில் முக்கிய வேலை ஒன்றுக்காக அலைய நேரிடலாம். மாலை நேரத்தில் நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆள்படலாம்.


**கன்னி:**
நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். அயலார் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். நெருங்கிய நண்பர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். உறவினர் ஒருவருக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடும் சூழ்நிலை உருவாகலாம்.


**துலாம்:**
குடும்ப உறுப்பினர்கள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்களை நம்பி ஒப்படைப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். தொழில் ரீதியான நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். சில வேலைகளை தவறாகச் செய்து விட்டு மீண்டும் செய்யலாம். மன அமைதி பாதிக்கும்.


**விருச்சிகம்:**
நண்பர்கள், உறவினர்கள் விவகாரங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வீர்கள். வீட்டை சீரமைப்பது, பொருள்களை மாற்றியமைப்பது போன்ற வேலைகளைச் செய்வீர்கள். உறவினர் ஒருவரை அவர்களின் வீட்டிற்கே தேடிச் சென்று சந்திப்பீர்கள். சில பொருள்களை கடனுக்கு வாங்கலாம். சோர்வு,சோம்பல் ஆள்கொள்ளும்.


**தனுசு:**
உங்களுடன் நீண்ட நாள்களாக இருந்த ஒருவரை பிரிய நேரிடலாம். உடல் நலத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு உற்சாகத்தைக் குறைக்கலாம். முன்பின் தெரியாத சிலரை நம்பி வேலைகளை ஒப்படைத்து விட்டு பயம் கொள்ளலாம். மருத்துவ சிகிச்சை தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். சிலரின் விமர்சனங்களைச் சந்திக்கலாம்.


**மகரம்:**
புத்தாடை, ஆபரணங்கள் வாங்கலாம். நண்பர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். பெண்கள் குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட வேண்டும். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். ஒருவரிடம் கைமாத்தாக கொடுத்த பணம் திரும்பி வரும். உங்களை விட கீழ் நிலையில் உள்ள சிலருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்.


**கும்பம்:**
குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். பொல்லாப்புகளை சந்திக்காமல் இருக்க மற்றவர்களின் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். உறவினர்கள் உங்களின் திறமைகளைப் பற்றி பெருமையாகப் பேசுவர். நேற்று செய்த சில வேலைகளால் இன்று அவதிகளுக்கு ஆள்படலாம். உதிரி வருமானங்களைப் பெறலாம்.


**மீனம்:**
முழு உற்சாகத்தோடு எந்த வேலையையும் செய்ய முடியாமல் சோம்பல் ஆள்கொள்ளும். மாமன், மைத்துனர்களின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். கனவுகளால் குழப்பம் உண்டாகலாம். நீண்ட நாட்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். மாலை நேரத்தில் நல்ல செய்தி கேட்கலாம்.

# சிங்களவ
# முட்டாளாக்
# எத்தனிக்கு
# மஹிந்த

**கொழும்பைத் தளமாகக் கொண்ட சண்டே லீடர் ஆங்கில ஊடகத்தில் குசல பெரேரா எழுதியுள்ள அரசியல் பத்தியின் தமிழாக்கம்.**

எல்லோரையும் எல்லா நேரத்திலும் ஒருவர் முட்டாளாக்க முடியாது. இங்கு எல்லோரும் என்பது சிங்களவர்களாகவும், 'ஒருவர்' என்பது ராஜபக்ஷவாகவும் இருக்காதுவிடின், எல்லோரையும் எல்லா நேரத்திலும் ஒருவர் முட்டாளாக்கிவிட முடியாது.

இது மஹிந்த சிந்தனையின் தத்துவார்த்தமாகக் காணப்படுகின்றது.

மஹிந்த சிந்தனையின் விளைவாக ராஜபக்ஷ தென்னிலங்கை சிங்களவர்களை மீண்டும் முட்டாளாக்க முயற்சிக்கிறார். ஆனால், இலங்கையின் அண்டை நாடுகளை மஹிந்த ராஜபக்ஷவால் முட்டாளாக்கி விட முடியாது.

ஏனெனில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு மீது பழிசுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் தொடர்பான இராஜதந்திர நகர்வுகளுக்கான ஆதரவுகளைத் திரட்டிக் கொள்வதற்காக 'பொய்யான' வாக்குறுதிகளுடன் மஹிந்த ராஜபக்ஷ டில்லிக்கு எத்தனை தடவைகள் சென்றுள்ளார்கள் என்பது இந்த அயல் நாடுகளுக்கு நன்கு தெரியும்.

### புலம்பெயர்ந்தோரின் அழுத்தம்

அதாவது, இலங்கையில் வாழும் தமது தமிழ் உறவுகளுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்குவதற்கு முதல், அங்கே இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பான சரியான பதிலை அளிக்க வேண்டும் என புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் அழுத்தம் கொடுத்து வரும் இந்த நிலையில் மஹிந்த தனக்கான ஆதரவை பெற்றுக் கொள்வதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையில் தற்போது ஆட்சியிலுள்ள மஹிந்த ராஜபக்ஷ அரசு தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வொன்றை வழங்குவதைத் தவிர்ப்பதில் தொடர்ந்தும் ஒரே விதமான அணுகு முறையையே கடைப்பிடித்து வருகின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மஹிந்த அரசு விட்டுக்கொடுப்பைக் கடைப்பிடித்து அவர்களுக்கு அரசியல் தீர்வொன்று வழங்குவதன் மூலம் அதன் மீது பழி சுமத்தப்பட்டுள்ள யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான-விசாரணைகளின் போது பல அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை மஹிந்த அரசு விளங்கிக் கொள்ளத் தவறிவிட்டது.

கற்றுக் கொண்ட பாடங்களுக்கான இணக்கப்பாட்டு ஆணைக்குழு (Lessons Learnt and Reconciliation Commission - LLRC) ஒன்றை இலங்கை ஜனாதிபதி உருவாக்கியிருந்தார். அத்துடன் நிற்காமல், தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்று (Parliamentary Select Committee - PSC ) தேவையா? ராஜபக்ஷக்களுக்குப் பெரும் அழுத்தங்களைக் கொடுத்துவரும் அனைத்துலக நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் இத்தெரிவுக் குழுவை அங்கீரிக்குமா? எந்தவொரு முடிவுமின்றி இடம்பெறும் பிறிதொரு பேச்சுவார்த்தைக்கு இந்திய அரசு இணக்கம் தெரிவிக்குமா? குறைந்தது அதிபர் மஹிந்தவின் பிறப்பிடத்தில் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ள திட்டத்துக்காகவாவது நாடாளுமன்றத் தெரிவுக் குழு அனுமதி வழங்குமா?

### ராஜபக்ஷவின் சுயரூபம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அரச தரப்பால் அச்சுறுத்தப்பட்டதுடன், அளவெட்டியில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போது அங்கு உள்நுழைந்த இராணுவ சீருடை தரித்தவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்ட வேளையில், இலங்கையின் பிரதான இரு எதிர்க்கட்சிகளாலும் ராஜபக்ஷ ஒரு ஏமாற்றுப் பேர்வழி என்று அழைக்கப்பட்டார்.

> **தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மஹிந்த அரசு விட்டுக் கொடுப்பைக் கடைப்பிடித்து அவர்களுக்கு அரசியல் தீர்வொன்று வழங்குவதன் மூலம் அதன் மீது பழி சுமத்தப்பட்டுள்ள யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணகளின் போது பல அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை மஹிந்த அரசு விளங்கிக் கொள்ளத் தவறிவிட்டது.**

இலங்கையின் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கான அங்கீகாரத்தை தென்னிலங்கையிலுள்ள பிரதான எதிர்க்கட்சி வழங்கியுள்ள நிலையில், பொழுதுபோக்குவதற்குக் கூடப் பயன்படாத இவ்வாறான கொண்டாட்டங்களை மஹிந்த அரசு மேற்கொள்வதற்கான காரணம் என்ன? இவ்வாறான எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் முயற்சிகளில் ராஜபக்ஷ ஈடுபடுவதற்கான மிகப் பலமான காரணம் ஒன்று உள்ளது.

### ஆக்கபூர்வமான அபிவிருத்தி இலங்கையில் இல்லை

பிரிட்டன் காலனித்துவத்திலிருந்து 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதில் இருந்து இலங்கை ஆக்க பூர்வமான பொருளாதார அபிவிருத்தித் திட்டம் எதையும் கொண்டிருக்கவில்லை எனபதே அதற்கான காரணமாகும்.

கப்ரல் என்னதான் கூறினாலும், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தில் வாழ்வோரைத் தவிர ஏனையோர் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதில் மிகச் சிரமப்படுகின்றனர் என்பதே உண்மை நிலையாகும். நாட்டுப் புறங்களில் வாழும் சிங்கள இளைஞர்களும் இதில் அடங்குகின்றனர்.

மருத்துவம், சட்டம் மற்றும் கணக்கியல் சார் துறைகளை மேம்படுத்தி அவற்றை நவீனமயப்படுத்தி அத்துறைசார் தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை இலங்கை அரசு அடையாளம் கண்டுள்ளது என்று கொழும்பில் இடம்பெற்ற இலங்கையின் 12 ஆவது பொருளாதார உச்சி மாநாட்டில் கருத்துரைத்த போதே இலங்கையின் திறைசேரிச் செயலர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

ஆனால் உண்மையில் இவ்வாறான பாண்டித்தியம் பெற்றவர்கள் கூறுகின்ற பொருளாதார வளர்ச்சி தொடர்பான விடயத்தில் பாரபட்சம் காண்பிக்கப் படுவதுடன், ஊழல் மோசடியும் காணப்படுகின்றது. இவ்வாறான் ஊழல் மோசடிகள் மற்றும் பாரபட்சங்கள் மேல்மாகாணத்திலும் இடம்பெற்றுள்ளன என்பது நிரூபணமாகியுள்ளது.


2009-2010 காலப் பகுதியில், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் வாழும் மக்களின் குடும்ப வருமானம் முறையே ரூபா 51,070 மற்றும் 48,870 ஆகக் காணப்பட்டதாக குடிசன மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஆனால் களுத்துறை மாவட்டத்தின் குடும்ப வருமானம் மாதம் ஒன்றுக்கு ரூபா 35,780 ஆகக் காணப்பட்டது. கொழும்புக்கும் களுத்துறைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரையும் ...க்க ...க்கும் ...ந்த...!

**மஹிந்த சிந்தனையின் விளைவாக ராஜபக்ஷ தென்னிலங்கை சிங்களவர்களை மீண்டும் முட்டாளாக்க முயற்சிக்கின்றார். ஆனால் இலங்கையின் அண்டை நாடுகளை மஹிந்த ராஜபக்ஷவால் முட்டாளாக்கி விட முடியாது.**



இடையிலான மாத வருமான வித்தியாசம் ரூபா 15,000 ஆகக் காணப்படுவதுடன், மாத்தறை - ரூ. 30,980, கேகாலை- ரூ. 29342, அம்பாறை - ரூ. 24721, மொனராகலை - ரூ. 22,161 ஆகவும் மாதம் ஒன்றுக்கான குடும்ப வருமானம் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமப் புறங்களின் பொருளாதாரம் மிகவும் நலிவுற்றே காணப்படுகின்றது. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு வாழும் கிராமப் புறத்து மக்களின் பொருளாதார வளர்ச்சியானது மேல் மாகாணப் பொருளாதாரத்துடன் ஒப்பிடும் போது மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

மேல் மாகாணத்தில் பெரும்பாலானவர்கள் மாதாந்தச் சம்பளத்தைப் பெறும் தொழில்களில் ஈடுபடுவதே இதற்கான காரணம் என குடிசன மதிப்பீட்டு ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஒரு நாட்டு மக்களிடையே பாரபட்சம்**

இவ்வாறு முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கிடையில் கூட சில பாரபட்சங்கள் காண்பிக்கப்படுகின்றன. இவ்வாறு தனது நாட்டு மக்களுக்கிடையில் பாரபட்சத்தைக் காட்டுகின்ற இலங்கையில், அதன் அரசு எப்போதும் அம்பாந் தோட்டை கப்பல் துறைமுகத் திட்டம், மாத்தளை விமான நிலையத் திட்டம், அனைத்துலக துடுப்பந்தாட்ட அரங்கத் திட்டம் போன்றவையே அதிகம் பேசப்படுகின்றன.

இந்தத் திட்டங்களில் பல லஞ்ச ஊழல்களும் இடம்பெற்றுள்ளன. அதாவது எந்தத் திட்டமாயிருந்தாலும் அந்தத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியை மோசடி செய்வதே இலங்கை அரசின் வழக்கம் என்பதை மஹிந்த அரசு நிரூபித்துள்ளது.

பொருளாதாரத் தடைகள் அதிகரித்துவரும் இந்த நிலையில் மக்களை சமாதானப்படுத்துவது என்பது மிகச் சுலபமான காரியம் அல்ல. பேருந்துக் கட்டணங்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எரிபொருள் விலை அதிகரித்துள்ளதால், மின்சாரம் தொடக்கம் போக்குவரத்துவரை எல்லா விலைகளும் அதிகரித்துள்ளதால், நுகர்வோனின் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது மாதாந்தச் சம்பள அதிகரிப்பு தொடர்பான நீதியான நியாயமானதொரு பதிலை அரசு வழங்க வேண்டும் எனக் கோரி வீதிகளில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

அத்துடன், மஹிந்த அரசானது தனது மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்து டன் தன்னால் எதனையும் சாதிக்க முடியும் என எண்ணி அமுல்படுத்தவிருந்த தனியார் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களின் ஆர்ப்பாட்டப் பேரணிகளுடன் முடிவுக்கு வந்துள்ளது.

**அரசியல் நிலைப்பாட்டுக்கு எதிரான சவால்**

சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களின் அரச எதிர்ப்பு ஆர்பாட்டங்கள் அரசின் அரசியல் நிலைப்பாட்டுக்கு எதிராக எழுந்த சவாலாகும். சிங்கள மனோநிலையை மேலும் வலுப் படுத்துகின்ற ராஜபக்ஷ அரசின் ஒரு முயற்சியாகவே நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைந்துள்ளது.

தமது யுத்த கதாநாயகர்களைத் திருப்திப் படுத்துகின்ற செயற்பாடுகளில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. இலங்கை இராணுவத்தினரால் வெற்றி கொள்ளப்பட்ட இந்த நாட்டில் அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதா என்பதை அடிப்படையாகக் கொண்டே இந்த விவாதம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 13 ஆவது திருத்தச் சட்டமும் அரசியல் மற்றும் இராணுவ தியாகத் தோறகடிக்கப்பட்டுள்ளது.

(நன்றி: புதினப்பலகை)

## மதம் வேறு.... ஆன்மிகம் வேறு



சமயம், ஆன்மிகம் என்னும் இரண்டு சொல்லையும் இன்றைய உலகில் மதம் என்கின்ற ஒற்றைப் பொருளிலேயே பயன்படுத்துகின்றோம். ஆனால் இது தவறானதாகும்.

மதவாதிக்கு மதம், சமயம் முக்கியம், அதன் கட்டமைப்பு, சடங்குகள், அடையாளங்கள், வேத புத்தகங்கள் ஆகியவை மிக முக்கியம். சுயசிந்தனை மதவாதிக்கு பகையானதாகும். ஆனால் ஆன்மிகவாதி மதம் கடந்தும் இருக்க முடியும். விதவிதமான உடம்புகளுக்குள் ஒரே ஆத்மா விளங்குவது போல் விதவிதமான மதங்களுக்குள் ஒரே கடவுள் இயங்குகிறார் என்று உணர்தலே ஆன்மிகம்.

மதம் கடவுளின் உடல், ஆன்மிகம் கடவுளின் ஆன்மா, மதங்களில் பேதம் பிரதானமானது. ஆன்மிகத்தில் பேதமற்ற அபேதம் உயிர்நாடியானது. இரண்டு மதவாதிகளால் ஒரே இடத்தில் இறைவழிபாடு செய்யவே முடியாது. நூறு ஆன்மிகவாதிகள் சண்டையின்றி ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் சேர்ந்து வாழ முடியும். இறையருளைச் சேர்ந்து அனுபவிக்க முடியும். எல்லாவற்றிலும் ஒருமையைக் காண்பவனே ஆன்மிகவாதி. வேறு வேறாகச் சிந்திப்பவன் மதவாதி.

இந்து மதத்தின் மிகச் சிறந்த மகான் ஒருவரைப் பற்றிக் கேள்விப்பட்டால் அல்லது படித்தால்'' ஆஹா....எமது மதத்தில் தான் இப்படிப்பட்ட மகான்கள் உருவாக முடியும். எமது மதத்தின் தனிச்சிறப்பே அது தான்'' என்று மதவாதி பெருமைப்படுகிறான். ''எல்லா மதங்களிலும் பக்குவம் அடைந்தவர்கள் ஒரே மாதிரியாகவே இருக்கின்றனர். பக்குவம் தான் கொண்டாடப்பட வேண்டுமே ஒழிய... அவன் சார்ந்த மதம் அல்ல.

பக்குவம் அடையும் பக்குவம் உடையவர்கள் எந்த மதத்திலும் இருந்தாலும் பக்குவமாகி விடுவார்கள். பக்குவமானதுக்கு மதத்தை விட மகான்களின் தரமே காரணம்'' என்று கூறுபவன் ஆன்மிகவாதி.

ஓர் ஆச்சரியமான நிகழ்வு ஒன்றை இங்கு உதாரணமாகக் கூறலாம். ஷேக் ஃபரீத் என்பவர் ஓர் இஸ்லாமியஞானி. அவரிடம் யேசுநாதர் பற்றி கேள்வி கேட்ட போது அவர் கூறிய பதில் சுவாரசியமானது.

இஸ்லாத்தில் பற்றுடைய இன்னொரு ஞானி மன்சூர் அவர் சுதந்திரமான மத எல்லைகடந்த சூஃபி. ஆனால் குரான் இஸ்லாம் நெறியில் உறுதியுடையவர். மன்சூர் அவர்களை வதைத்துத் துன்புறுத்தியபோது மகிழ்ச்சியாகவே இருந்தார். கை, கால்களை வெட்டிய போதும் கலங்காமல் அல்லாவஹ் பற்றிய நினைவிலேயே ஆனந்தமாய் இருந்தார்.

சிலுவையில் அறைந்து சித்திரவதை செய்யப்பட்டபோதும் யேசுபிரான் ஏற்றுக் கொண்டார். உடலுக்கு நேர்ந்த உபாதைகள், துயரங்கள் குறித்து வருத்தம் தெரிவிக்கவில்லை. தம்மைத் துன்புறுத்தியவர்கள் மீது வெறுப்போ, பகையோ கொள்ளவில்லை. அதற்கு மாறாக அவர்கள் பொருட்டு இறைவனிடம் மன்றாடினார்.

யேசுவின் வாழ்வும் மன்சூர் வாழ்வும் ஒரே தன்மையாக இருந்தது. எதேச்சையான ஒன்றல்ல. மகான்களின் மனப்பக்குவம் ஒன்று போலவே இருக்கும் என்பதன் வெளிப்பாடே அதுவாகும். இதை ஷேக்ஃபரீத் விளக்கினார். எப்படி? ''உடல் துன்புற்ற போதும் இருவரும் மகிழ்ச்சியாகவே இருந்தனர்...எப்படி?'' என்று சிலர் கேட்டனர்.

உடனே, ஃபரீத் தம்பக்கத்தில் இருந்த இளநீரை எடுத்து கேள்வி கேட்டவரிடம் கொடுத்து''உள்ளே உள்ள தேங்காய் பருப்பு சேதமடையாமல் உடைத்து எடுக்க முடியுமா?'' என்றார் ''தேங்காய் இளசாக இருப்பதால் அது சாத்தியமில்லை. பருப்பும் ஓடும் ஒட்டியபடியே இருக்கும். அதுவே முற்றலாக இருந்தால் ஓடும் பருப்பும் ஒட்டி இருக்காது. சிரமம் இன்றி பருப்பைச் சேதப்படுத்தாமல் எடுக்க முடியும்'' என்றார் அந்த நபர்.

ஃபரீத்சிரித்துக் கொண்டே ''உங்கள் கேள்விக்கான விடையும் நீங்கள் கூறியது தான். மனிதன் உடல் என்கிற ஓட்டுடன் ஒட்டி இருக்கும் வரையில் உடல் உபாதைகளால் துன்புறுகிறான். முற்றிய, பக்குவம் எய்திய ஞானி உடலில் இருந்து பிரிந்து நிற்கிறான். யேசுவும் மன்சூரும் அப்படிப்பட்டவர்'' என்றார். இந்து மதத்தில் பகவான் ரமணரும் தான்வேறு உடல்வேறு என்று உணர்ந்தவர். இந்துவானாலும் கிறிஸ்தவனானாலும் இஸ்லாமியர் ஆனாலும் ஞானிகளின் அனுபவம் ஒன்றுதான். அதுதான் ஆன்மிகம். மதம் மாறும். ஆன்மிகம் மாறாது.

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெளியீடான
கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு



P.M. புன்னியாமீன், மஸீதா புன்னியாமீன்
பரீட்சை இலக்கம்: 9

# தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:........................ **வினாத்தாள்-11** நேரம்: 1 மணி 15 நிமிடங்கள்

✱ **பின்வரும் பந்தியை வாசித்து பின் இல 1 - 10 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.**

உணவு, உடை, உறையுள் என்பன மனிதனின் அத்தியாவசியத் தேவைகளாகும். ஆனால், உடையைத் தவிர ஏனைய இரண்டும் ஏனைய அங்கிகளுக்கு அவசியமானதாகும். எந்தவொரு விலங்கும் தனக்கு உகந்த விதத்தில் தனது இருப்பிடத்தை அமைத்துக் கொள்ளும். ஆனால் அது நிரந்தரமான இருப்பிடமாக அமைவதில்லை. எனினும், கூடுகளை நிர்மாணித்து வாழ்விடங்களை அமைத்துக்கொள்வதில் பறவையினங்கள் மனிதர்களை வியப்புக்குள்ளாக்குகின்றன. பறவைகள் பொதுவாக மரக்கிளைகளிலே வாழ்ந்தாலும், முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்ற காலப் பகுதியிலே கூடுகளை அமைத்துக்கொள்வதில் அக்கறை செலுத்துகின்றன. சிறு தடிகள், தும்பு, பஞ்சு, இறகுகள் போன்றவற்றைக் கொண்டு விநோதமான முறையிலே பறவைகள் தம் கூடுகளை அமைத்துக் கொள்கின்றன. தமது முட்டைகளைப் பாதுகாக்கவும், குஞ்சுகளை மழை வெயிலிலிருந்தும், எதிரிகளிடமிருந்தும் பாதுகாக்கவும் பறவைகளுக்குக் கூடுகள் உதவுகின்றன.

01. விலங்குகளின் அத்தியாவசியத் தேவைகள் எவை?
..........................................................................

02. அத்தியாவசியத் தேவைகள் என்பதன் கருத்து யாது?
..........................................................................

03. பறவைகளுக்குக் கூடுகள் எதற்குப் பயன்படுகின்றன என்பதைக்குறிப்பிடுக?
..........................................................................

04. கூடு கட்ட உதவும் பொருள்கள் இரண்டு எழுதுக.
..........................................................................

05. மரக்கிளையில் தொங்கக்கூடிய புதுமையான கூடுகளை அமைக்கும் பறவையினம் யாது?
..........................................................................

06. நிலத்தை தோண்டி முட்டையிடும் ஒரு உயிரினத்தைக் குறிப்பிடுக?
..........................................................................

07. கூடு கட்டாமல் வேறொரு பறவையின் கூட்டில் முட்டையிடும் பறவை எது?
..........................................................................

08. பறவைகளின் முட்டைகளை இரையாகக் கொள்ளும் விலங்கினம் ஒன்றைக் குறிப்பிடுக.
..........................................................................

09. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.
1) உறையுள் ..............................
2) அங்கி ..............................
3) நிர்மாணித்து ..............................
4) விநோதம் ..............................

10. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களைப் பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக.
1) கவனம் ..............................
2) பகைவன் ..............................
3) விரும்பிய ..............................
4) பட்சிகள் ..............................

11. பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.
1) நிரந்தரமான ..............................
2) அவசியம் ..............................

12. பின்வரும் சொற்களுக்கான ஆங்கிலச் சொல்லை அடைப்புக்களில் உள்ள சொற்களிலிருந்து தெரிவுசெய்து கோடிடுக.
1) மிருகம் (Enimal, Animal, Animel) 2) கூடு (Next, Net, Nest)
3) பறவைகள் (Bird, Birds, Berds) 4) முட்டை (Agg, Egg, Age)

✱ பின்வரும் கூற்றுகள் சரியாயின் (✓) எனவும், பிழை ஆயின் (✕) எனவும் அடையாளமிடுக.

13. குடிதண்ணீரைச் சுத்திகரிப்பதற்காக அந்நீரில் குளோரின் கலக்கப்படுகின்றது. (...........)
14. காந்தம் ஒன்றைச் சூடாக்கும்போது அதன் காந்தத் தன்மை அதிகரிக்கும். (...........)
15. ஆறுகளில் உருண்டை வடிவான கற்கள் இருப்பது மண்ணரிப்புக்கு மிகச் சிறந்த உதாரணமாகும். (...........)
16. காற்றானது எப்போதும் ஒரே திசையிலேயே வீசும். (...........)
17. அணில் ஒரு அனைத்துமுண்ணி விலங்காகும். (...........)
18. பிஸ்கட் உணவுகளைப் பழுதுபடாமல் பாதுகாக்க குளிரூட்டியில் வைக்க வேண்டும். (...........)
19. எல்லா வகையான நோய்களுக்கும் தடுப்பூசி மருந்து அடிக்கப்படும். (...........)

20. பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள விடயங்களைச் சரியாக விளக்கும் வகையில் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க்கோடிடுக.
மகாவலி கங்கை 1) (உலகிலே, இலங்கையிலே) மிக நீளமான நதியாகும். அது 2) (அட்டன், கண்டி) பீடபூமியிலே உற்பத்தியாகி 3) (புத்தளம், திருகோணமலை) கடலில் விழுகின்றது. மகாவலி கங்கையை 4) (மதில்கள், அணைகள்) கட்டித் தடைசெய்து 5) (மின்சாரம், விவசாயம்) உற்பத்தி செய்யப்படுகிறது. இலங்கையிலுள்ள நீர்த்தேக்கங்களிலே 6) (கொத்மலை, விக்டோரியா) மிக விசாலமானதாகும். நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் 7) (குறைந்தால், உயர்ந்தால்) மின் உற்பத்தி குறைவடையும்.

21. பின்வரும் உயிரினங்களை கீழே உள்ள தலைப்பில் உள்ளவாறு வேறுபடுத்தி எழுதுக.
கறையான், நத்தை, காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, மண்புழு, நெல்ஈ, தேனீ, செண்பகத்தி, மயிர்கொட்டி, குருமினியன்வண்டு.

**தாவரங்களுக்கு நன்மை புரிபவை/ தாவரங்களுக்கு தீமை புரிபவை**

✱ பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

22. இலங்கையின் சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள இடம்.
..........................................................................

23. இலங்கையில் நாடாளுமன்றம் அமைந்துள்ள இடம்.
..........................................................................


24. இலங்கையை கடைசியாக கைப்பற்றியிருந்த அந்நிய நாட்டவர்.
..........................................................................

25. வீதிச் சமிக்ஞை விளக்குத் தொகுதியில் வாகனங்களை நிறுத்த உதவும் நிறம்.
..........................................................................

26. காந்தத்தால் கவரப்படும் உலோகம்.
..........................................................................

27. குழந்தைகளை உறங்கவைக்க பாடப்படும் பாட்டு.
..........................................................................

28. மாதவன் வீட்டிலே இரண்டு நீர்த் தொட்டிகள் உள்ளன. ஒரு தொட்டி 1,000 லீற்றர் நீரையும், மற்றைய தொட்டி 500 லீற்றர் நீரையும் கொள்ளக்கூடியன. A தொட்டியிலிருந்து மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 லீற்றர் வீதமும், B தொட்டியிலிருந்து 3 மணித்தியாலத்துக்கு ஒரு முறை 200 மில்லிலீற்றர் வீதமும் நீர் கசிகின்றது.




1) மு.ப 9.00 மணிக்கு A தொட்டியில் முற்றாக நீர் நிரம்பியிருந்தது எனின், பி.ப 6.00 மணியாகும்போது அத்தொட்டியில் இருக்கக்கூடிய நீரின் அளவு யாது?
..........................................................................

2) A தொட்டியில் மு.ப. 8.00 மணிக்கு நிரப்பப்பட்ட நீரானது அடுத்த நாள் மு.ப 8.00 மணியாகும்போது எவ்வளவால் குறைந்திருக்கும்.
..........................................................................

3) ஒரு குழாய் மூலம் நீர் பாய்ச்சப்படும்போது A தொட்டி நிரம்பிய பின்னரே B தொட்டிக்கு நீர் செல்லும் A தொட்டி நிரம்புவதற்கு 4 மணித்தியாலம் எடுக்கும் எனின் B தொட்டி நிரப்புவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?
..........................................................................

4) அவ்வாறு நிரப்பப்படும் பொழுது B தொட்டி நிரம்பும்போது A தொட்டி எவ்வளவு நீர் குறைந்திருக்கும்.
..........................................................................

✱ பின்வரும் கணிதச் செய்கைகளுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

29. 4, 7, 5, 3 எனும் இலக்கங்களாலான மிகப்பெரிய எண்ணுக்கும் 3, 8, 4, 5 எனும் இலக்கங்களாலான மிகச்சிறிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?
..........................................................................

30. கடையொன்றிலிருந்து பருப்பு மூட்டையில் 15 கிலோகிராம் 750 கிராம் பருப்பு இருந்தது. அன்றைய தினம் ஒருவருக்கு 500 கிராம் வீதம் 12 பேருக்கு பருப்பு விற்கப்பட்டது. எனின், எஞ்சியுள்ள பருப்பின் நிறை எவ்வளவு?
..........................................................................

31. 1மீற்றர் சட்டைத்துணியின் விலை 250 ரூபாவாகும். 1 மீற்றர் 50 சென்ரி மீற்றர் சட்டைத்துணி வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?
..........................................................................

32. சுவர்க்கடிகாரம் ஒன்று ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் 10 நிமிடங்கள் குறைவாகக் காட்டும். காலை 6.00 மணிககு அது சரியான நேரத்தைக் காட்டியது எனின், பகல் 12.00 மணிக்கு அது காட்டும் நேரம் என்ன?
..........................................................................

(21 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையிலுள்ள பெண்களின் நலனில் அக்கறை தேவை

யாழ்.சிறைச்சாலையில் உள்ள பெண் கைதிகளில் 75 வீதமானோரின் சில தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தம்மை அறியாமலேயே குற்றச்செயல்களில் ஈடுபட்டு தற்போது சிறைத்தண்டனை பெற்று வருகின்றனர் என கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

அவர்களில் 25 வீதமான பெண் கைதிகளின் உறவினர்கள் சிறைச்சாலைக்குச் சென்று அவர்களைப் பார்வையிடுவதில்லை என்று அந்தப் பெண் கைதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள அனைத்துப் பெண் கைதிகளுக்கும் குற்றச் செயல்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் அவ்வாறான குற்றச் செயல்களிலிருந்து விலகிக்கொள்வது தொடர்பாகவும் கருத்தமர்வுகள் நடத்தப்படுகின்றன. எனவே அந்தக் கைதிகளை அவர்களது உறவினர்கள் சென்று பார்வையிட்டு நலம் விசாரித்தல் வேண்டும் எனவும் சமூகத்தில் அதன் அவசியம் தற்போது உணரப்பட்டுள்ளது எனவும் தேவை நாடும் மகளிர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டு நீதிமன்ற உத்தரவின்படி யாழ். சிறைச்சாலையில் தண்டனை பெற்று வரும் பெண் கைதிகளுக்கு அவர்கள் சிறைச்சாலையிலிருந்து விடுதலையான பின்னர் திரும்பவும் அவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது தொடர்பான கருத்தரங்கு ஒன்று யாழ். சிறைச் சாலையில் கடந்த வாரம் இடம்பெற்றது.

இது தவிர வாரத்தில் ஒரு நாள் யாழ். சிறைச்சாலைக்குச் சென்று பெண் கைதிகளுக்கு மன ஆற்றுப்படுத்தல்களையும் தேவை நாடும் மகளிர் அமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஆற்றுப்படுத்தல் அந்தக் கைதிகளுக்கு மிகவும் தேவையான ஒன்றாக விளங்குகிறது.

சில தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காகவும் வருமானத்தைப் பெறுவதற்காகவும் சில வேலைகளில்- செயற்பாடுகளில் பெண்களும் ஈடுபட்டு வருகின்றனர்- ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். பெரு வருமானத்துக்காக பிறரால் நிர்வகிக்கப்படும் இவர்கள் பிறரது கோரிக்கைகளுக்கு அமைவாகவும் தமது சில தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் இவ்வாறான குற்றச்செயல் களில் ஈடுபடுகின்றனர்.

பணமோசடி, திருட்டு, கைத்தொலைபேசி கொடுக்கல் வாங்கல் பிரச்சினை, சீட்டிழுப்புகள் நீதிமன்றத் தண்டணையின் படி பிறருக்காக பிணை நிற்கின்றமை பின்னர் பிணை எடுக்கப்படாமல் போகின்றமை, பிணைக்குக் காரணமானவர் நாட்டைவிட்டு வெளியே சென்றிருத்தல் எனப் பல காரணங்களால் இவர்கள் சிறைச்சாலையில் தண்டனை பெற்றுவருகின்றனர்.

குற்றச் செயல்களைச் செய்யும் போது-செய்ய தூண்டப்படும் போது பின்விளைவுகள் பற்றி சிந்திக்காத பலர், அறிந்து கொள்ளாத சிலர் என இவர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடும் போது கைது செய்யப்பட்டு விடுகிறார்கள். நீதிமன்ற தீர்ப்பின்படி சிறைச்சாலையில் அடைக்கப்படும் போது இவர்களில் பலர் தமது அறியாமையால் செயற்பட்டதற்காக எண்ணியெண்ணி மனம் வருந்துகின்றனர்.

இவர்களில் 25 வீதமானவர்களின் உறவினர்கள் அவர்களைச் சென்று பார்ப்பதனை தமக்கு ஒரு கௌரவக்குறைவாக நினைக்கின்றனர். அயலவர்கள் வித்தியாசமான நோக்கில் தம்மை பார்ப்பதாக அந்தக் கைதிகளின் உறவுகள் நினைக்கின்றன. இவர்கள் இவ்வாறு பல காரணங்களைக் கூறி பெண் கைதிகளைப் பார்க்கச் செல்லாதிருக்கும் அதே வேளை, சிறைச்சாலையில் இருக்கும் உறவினர்களால் சென்று பார்க்கப்படாத பெண் கைதிகளின் நிலை பரிதாபத்துக்குரியதாகக் காணப்படுகிறது. அவர்கள் மாற்றுடைகள் இன்றியும் மற்றும் சில உதவிகள் இன்றியும் பெரும் இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர். அது மட்டுமன்றி அவர்கள் மனநிலை பாதிக்கப்படுகின்ற- மனநிலை பாதிக்கப்பட்ட நிலைக்குச் சென்றுவிடுகின்றனர். அவர்களது அந்த நிலையைத் தடுக்கும் நோக்கில் தேவைநாடும் மகளிர் அமைப்பு தனது செயற்பாட்டினை அங்கு மேற்கொள்கிறது.

இதன் மூலம் பெண் கைதிகள் சிறந்த மனோ நிலையில் இருப்பதனை உறுதி செய்வதோடு அந்த 25 வீதமான பெண் கைதிகளின் உறவினர் வீடுகளுக்கும் சென்று யதார்த்தத்தை, விளைவுகளை எடுத்துக் கூறி அந்தக்கைதிகளைச் சென்று பார்க்கும்படி விளக்கமளித்து அனுப்புகின்றனர்.

பெண் கைதிகள் அனைவருக்கும் சிறைச்சாலையில் இருக்கும் காலப்பகுதியில் அலங்கார கைப்பணி வேலைப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பெண் கைதிகளில் சிலர் உறவினர்களால் பிணை எடுக்கப்படாததால் நீதிமன்றால் விதிக்கப்பட்ட அபராதத் தொகையை செலுத்த முடியாமையாலும் தொடர்ந்து சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறாக அறிந்தோ அறியாமலோ குற்றம் இழைத்தவர்கள் அதனால் எவ்வாறான விளைவுகள் உருவாகும் என்பதை அறியாதவர்களாக, அறிந்தும் புரிந்துகொள்ளாதவர்களாக தொடர்ந்து செயற்படுகின்றனர். இவற்றை எதிர்காலத்தில் முற்றாகத் தடைசெய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எனவே இது பற்றி அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை தற்காலத்தில் அதிகரித்துள்ளது. ஆனால் சிலர் எல்லாம் தெரிந்து கொண்டும் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதையும் மறுக்க முடியாது. இவர்கள் சமுகத்தால் இனங்காணப்பட வேண்டும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருத்தலாகாது.


கைதிகளின் பிரச்சினைகள், அவர்கள் குற்றம் இழைத்ததற்கான காரணங்கள் என்பனவற்றை மூடி மறைக்காது வெளிக்கொணரப்படல் வேண்டும் அப்போது தான் ஏனையவர்களுக்கு இது பற்றி தெளிவு ஏற்படும் குற்றங்கள் எவ்வாறெல்லாம்-எந்த எந்த வடிவங்களிலெல்லாம் மக்கள் மனதை மாற்றுகிறது, தவறான வழிக்கு இட்டுச் செல்கிறது என்பதைத் தெட்டத்தெளிவாக அனைவருக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும் அதனூடாக அனைவரையும் இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுவதிலிருந்து விலகியிருக்க பெரிதும் உதவுகிறது.

குற்றச் செயல்களை முடிந்தளவு தவிர்த்துக் கொள்ளல் வேண்டும் அதனையும் மீறி இடம்பெறும் குற்றச் செயல்களை அதற்கு வழங்கப்பட்ட தண்டனைகளை வெளிக்கொணர்ந்து மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். இதன் மூலமாக எதிர்காலத்தில் குற்றச் செயல்கள் நடைபெறுவதை- குற்றச் செயல்களில் ஈடுபடுத்தப்படுவதை முற்றாகத் தடுத்து நிறுத்தல் வேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைத்தல் வேண் டும். அப்போது தான் நாம் ஒவ்வொருவரும் சிறப்பான வாழ்க்கையை நிர்வகிக்க முடியும்.அந்த வகையில் இதற்கான முன்னோடியாகத் தேவைநாடும் மகளிர் அமைப்பு யாழ்.சிறைச்சாலையிலுள்ள 27 பெண் கைதிகளுக்கும் உளவள ஆற்றுப்படுத்தல் கருத்தமர்வை நடத்துகிறது. தனிநபராக தீர்க்க முடியாத பிரச்சினைகள், கணவன் மனைவி இடையேயான பிரச்சினைகள் பிள்ளைகள் தொடர்பான பிரச்சினைகள் என்பவற்றுக்கு இந்த அமைப்பு உளவள ஆற்றுப்படுத்தல்களை வழங்கிவருகிறது. *

நிரோஜன்

(20 ஆம் பக்கத்தொடர்ச்சி)

33. 3 கிலோகிராம் அரிசியின் விலை 96 ரூபாவாகும் 5 கிலோகிராம் அரிசியின் விலை என்ன? ..............................

34.

அருகிலுள்ள கட்டத்தில் ஒவ்வொரு சதுரமும் 1 சென்ரி மீற்றர் நீளமுடையது எனக் கொண்டு நிழற்றப் பட்ட உருவின் சுற்றளவைக் காண்க.

..............................


35. பின்வரும் சிங்களச் சொற்களால் விளக்கப்படும் கருத்தைத் தமிழில் எழுதுக.
1) அஷ்வயா ..............................
2) பொ(த்)த ..............................

36. பின்வரும் தமிழ்ச் சொற்களின் சிங்கள வடிவத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
1) மழை ..............................
2) பாதை ..............................
3) பூ ..............................
4) நீர் ..............................

37. பின்வரும் கருவிகளைப் பெயரிட்டு அவற்றின் பயன்களையும் எழுதுக.

1)

பெயர் ..............................
பயன் ..............................

2)

பெயர் ..............................
பயன் ..............................


38 பின்வரும் வீதிக் குறியீடுகளை இனங்கண்டு எழுதுக.

1)

..............................

2)

..............................

3)

..............................

39. பின்வரும் இணைமொழிகளுள் இரண்டு சொற்களும் எதிர்க் கருத்துக் களைக் குறிக்கும் படியான இணைமொழிகள் மூன்றைத் தெரிந்து எழுதுக.

ஏற்ற இறக்கம், மாடிமனை, துன்பதுயரம், காசுபணம், கண்ணுங் கருத்தும், மேடுபள்ளம், அருமை பெருமை, இலாபநட்டம்.

..............................
..............................
..............................

40. ''அன்றைய தினம் மழை நேரத்தில் நான் வீடு வந்து சேர்ந்தவிதம்...'' எனும் தலைப்பில் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஒரு வாக்கியத்தில் ஐந்து சொற்களுக்குக் குறையாதவாறு ஆறு வாக்கியங்கள் எழுதுக.

1) ..............................
..............................
2) ..............................
..............................
3) ..............................
..............................
4) ..............................
..............................
5) ..............................
..............................
6) ..............................
..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலி அட்டகிரி கந்தசுவாமி கோயில் தேர் சிறப்பு மலர்

## 14.07.2011



## தேரில் வருகிறான் அட்டகிரிக் கந்தன்



இயற்கை எழில்மிக்க பழம் பெரும்பதி நவாலி. பண்டிதர்கள், பாவலர்கள், புலவர்கள், கலைஞர்கள் உதித்த திருவூர் பெரும்பதியில் அருள்கொடுக்கும் அட்டகிரி முருகன் ஆலயம் அற்புதம் நிறைந்த திருக்கோயில் ஆகும்.

கந்தபுராணப் பாரம்பரியம் காத்த திருத்தலங்களுள் அட்டகிரிக்குத் தனித்துவம் உண்டு. புராணப் படிப்புப் பாரம்பரியத்தை வளர்த்தெடுத்த இந்தக் கோயில் இன்று பெருவளர்ச்சி கண்டுள்ளது. முற்காலத்தில் மதமாற்றச் சூழ்நிலையில் நவாலி மக்களை பாரம்பரிய நெறியில் நின்று வழுவாது காத்த கோயில்.

இந்தத் திருக்கோயிலின் தேர்த்திருவிழா குறித்து வாழ்த்துவதில் ஆனந்தம் அடைகின்றேன். இந்த ஆலயத்தின் திருத்தேரைப் பொதுமக்களின் உதவியோடு உருவாக்குவதற்கு அரும்பாடுபட்டவர் அமரர் சிவப்பிரகாசப்பிள்ளை ஆசிரியர் ஆவார்.

இன்று பல்வேறு திருப்பணிகள் நிறைவு பெற்றவகையில் இந்த ஆலயம் எழுச்சி பெறுவது கண்டு மனமகிழ்ச்சி அடைகின்றேன். அட்டகிரியானின் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.

ஆறு.திருமுருகன்
தலைவர்,
துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## நல்லை ஆதீன குரு முதல்வரின் ஆசிச் செய்தி



இன்று நவாலி அட்டகிரிக் கந்தசுவாமி கோயிலில் தேர்த்திருவிழா. முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகப் பெருமான் இன்று சித்திரத் தேரினிலே சிங்காரப் பவனி வருகின்ற கண்கொள்ளாக் காட்சியை நவாலி அட்டகிரியிலே கண் குளிரக் காணலாம்.

கலியுக வரதனான கந்தப் பெருமான் ஸ்ரீ வள்ளி தேவ சேனாபதியாகக் கைதொழும் அடியார்களின் குறை தீர்க்கும் குமரனாக இன்று அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிப்பதற்காக தேரில் புறப்படுகின்றான்.

முருகன் என்னும் அழகன் குமரனாக அடியார் படுதுயராயின வெல்லாம் நிலந்தரஞ் செய்ய வருகின்றான். நவாலிப்பதி வாழும் மக்கள் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்தவர்களாவர். ஆகவே, நவாலி அட்டகிரியான் எல்லோர்க்கும் அருள்புரிந்து அனைவரும் நல்வாழ்வு வாழ வகை செய்ய வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருள் ஆசிகள் நல்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். நவாலிப் பதியுறையும் அட்டகிரி வேலன் அருள் அனைவர்க்கும் கிட்ட நாம் ஆசிகள் வழங்கி வாழ்த்துகின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஆதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.

## நவாலியூர் முருகன் நல்லருள் வையகமெங்கும் பரவட்டும்!



கலியுக வரதனான முருகப் பெருமான் இன்று அடியார்கருளும் ஆறுமுகப் பெருமானாக நவாலி அட்டகிரியிலே தேரேறி வருகின்றான். அழகன் முருகன் ஸ்ரீ வள்ளி தேவசேனாபதியாக அழகிய சித்திர தேர் மீது ஆரோகணித்து அருட்காட்சி நல்கும் பேரழகு காண்பதற்குப் பூர்வ ஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த தமிழ் கடவுளான ஸ்ரீ முருகன் அநியாயங்களையும் துன்பங்களையும் அறவே அழித்தொழிக்க இன்று தேரிலே புறப்படுகின்றான். அந்த நவாலிப் பதியுறையும் கந்தன் நல்லடியார்கள் அனைவருக்கும் அருளை அள்ளிச் சொரிந்து புள்ளி மயில் வாகனனாகக் காட்சி தர வேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசிகள் நல்கி வாழ்த்துகின்றேன்.

''நவாலியூர் முருகன் நல்லருள் வையகமெங்கும் பரவட்டும்''

நல்லை ஆதீன சமய பிரசாரகர்
சிவநெறிக் கலாநிதி இராசையா சிறிதரன்.

### பச்சை மயில் வாகனனே
### இச்சை இன்றி வாழும் அடியவர்களின்
### இடர் தனைக் களைந்திடு மயில் வாகனனே!

அட்டகிரிப் பதி யதனில் உறையுமெங்கள்
பச்சை மயில் வாகனனே!
பிச்சை கேட்டுத் தினம் நின்
பாதம் பணிகின்றோம் ஐயா
ஆறுமுகனே!
அட்டகிரிக் கந்தன் என்ற நாமத்தை
உம்மகத்தே கொண்டு இலங்கும்
உமையின் திருக்குமரனே!
ஆற்றொணாத் துயரில் அமிழ்ந்திருக்கும்
நின் அடியவர்களின் இடர்களைந்து
இகபரம் அளியும் ஐயா
சிங்கார வடிவேலனே!
சீர் குலைந்து அவலவாழ்வு வாழும்
நிலையை சீக்கிரம் களைந்திடு
கணநாதன் தம்பியே!
கண்கொண்டு பாரும் ஐயா!
சற்குணா!

எஸ்.பவானி

தேர் சிறப்புற வாழ்த்துவோர்:

TA Mobile & Computer System

Canon acer BenQ EPSON APC TOSHIBA



Intel Dual Core 3.0 Processor.
Intel DG 41WW Mother Board.
2GB DDR - 03 Ram.
500 GB Hard Disk.
DVD Writter.
ATX Tower Casing.
19" Dell/Asus Lcd moniter
Keyboard.
Mouse.
3 Year Warranty
38,500/=

Intel Dual Core 3.0 Processor.
Intel DG 41WW Mother Board.
2GB DDR - 03 Ram.
500 GB Hard Disk.
DVD Writter.
ATX Tower Casing.
View Sonic LED Moniter.
Keyboard.
Mouse.
3 Year Warranty
40,250/=

Intel Core I3 - 2100 Processor.
Intel DH 61WV Mother Board.
2GB DDR - 03 Ram.
500 GB Hard Disk.
DVD Writter.
ATX Tower Casing.
19" Dell LED Moniter/ ASUS/LG
Keyboard.
Mouse.
3 Year Warranty
48,650/-

Intel Core I3 - 540 Processor.
Biostar H55 Mother Board.
2GB DDR - 03 Ram.
500 GB Hard Disk.
DVD Writter.
ATX Tower Casing.
View Sonic LED Moniter.
Keyboard.
Mouse.
3 Year Warranty
49,800/-

Intel Core I5-2400 Processor.
Intel DH 61wv Mother Board.
2GB DDR - 03 Ram.
500 GB Hard Disk.
DVD Writter.
ATX Tower Casing.
19" LCD Moniter.
Keyboard.
Mouse.
3 Year Warranty
58,300/=

Intel Core I5-2400 Processor.
Intel DH 61WV Mother Board.
2GB DDR - 03 Ram.
500 GB Hard Disk.
DVD Writter.
ATX Tower Casing.
19" View Sonic LED Moniter.
Keyboard.
Mouse.
3 Year Warranty
59,950/-

Intel Core i 7-2600Processor.
Intel DH 61WV Mother Board.
2GB DDR - 03 Ram.
500 GB Hard Disk.
DVD Writter.
ATX Tower Casing.
19" Dell LCD Moniter.
Keyboard.
Mouse.
3 Year Warranty
71,000/-

Intel Core i 7-2600 Processor.
Intel 67Bl Mother Board.
2GB DDR - 03 Ram.
500 GB Hard Disk.
DVD Writter.
ATX Tower Casing.
View Sonic LED Moniter.
Keyboard.
Mouse.
3 Year Warranty
74,900/-




நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு கணனிக்கும் COMPUTER TABLE இலவசம்.
இந்தச் சலுகை 7நாட்களுக்கு மட்டுமே........

அரசஅலுவலகங்கள். தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக் கழிவுகள் உண்டு.

TA MOBILE & COMPUTER SYSTEM.
NO-03, AALADI JUNCTION, MANIPAY.
Ph- 021-2255213, 077 2622373

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுத்தால் மட்டுமே பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி

## ஹிலாரி கிளின்டன் தெரிவிப்பு

வாஷிங்டன், ஜூலை 14

தீவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் கடும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே அந்த நாட்டுக்கு இராணுவ ரீதியான உதவிகள் வழங்கப்படும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்தார்.

ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளின் உயர் அதிகாரிகளுடன் வாஷிங்டனில் ஹிலாரி செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது அவர் இதுகுறித்து மேலும் கூறியவை வருமாறு:-

தீவிரவாதிகளுக்கு எதிராக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று பாகிஸ்தானுக்கு அமெரிக்கா பல தடவைகள் அறிவுறுத்தியுள்ளது.

இதற்காக சில திட்டங்களையும் தெரிவித்துள்ளோம். அத்திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என பாகிஸ்தானை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

பாகிஸ்தானுக்கும், அமெரிக்காவுக்குமிடையே நல்லுறவு இருந்து வருகிறது. அது தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றே இரு நாடுகளும் விரும்புகின்றன. ஆனால், தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை.

இதனால்தான் பாகிஸ்தானுக்கு அளிப்பதாக உறுதியளித்த இராணுவ ரீதியான உதவிகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் ரூ.3,600 கோடி மதிப்பிலான இராணுவ உதவி நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

அதே சமயத்தில் பாகிஸ்தானுக்கு கட்டமைப்பு, வளர்ச்சி ஆகிய பணிகளுக்குத் தேவையான உதவிகளை அமெரிக்கா தொடர்ந்து அளித்து வருகிறது. தீவிரவாதிகளைக் கையாள்வது அந்நாட்டுக்குப் பெரிய பிரச்சினையாக உள்ளது.

பாகிஸ்தானை தீவிரவாதிகள் தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறார்கள். இதனால் அந்த நாட்டு மக்கள் அச்ச நிலையிலேயே உள்ளனர்.

தீவிரவாதிகள் எந்த சமயத்திலும் தாக்குதல் நடத்தும் நிலை பாகிஸ்தானில் உள்ளது. இதனால் அந்நாடு வளர்ச்சி, கட்டமைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்த முடியவில்லை - இப்படி அவர் குறிப்பிட்டார்.

ஹிலாரி கிளிண்டனின் இந்தக் கருத்தை அமெரிக்க இராணுவமும் ஆமோதித்துள்ளது.

இதுதொடர்பாக இராணுவத் தலைமையகமான பென்டகன் செய்தித்தொடர்பாளர் கர்னல் தவே லபான் கூறியவை வருமாறு:-

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளிக்கும் உதவி மூன்றில் ஒரு பகுதியாக குறைக்கப்பட்டு விட்டது. தீவிரவாதிகளுக்கு எதிராகப் பாகிஸ்தான் போர் தொடுத்து ஒடுக்கினால் மட்டுமே இராணுவ ரீதியான உதவியை அந்நாடு பெற முடியும் என தவே லபான் தெரிவித்தார்.

# அமெரிக்க ஏவுகணைத் தாக்குதல்கள்; பாகிஸ்தானில் 45 தீவிரவாதிகள் பலி

பாகிஸ்தானில் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்திலுள்ள வடக்கு வசிரிஸ்தானில் கடந்த 12 மணிநேரத்தில் நடந்த ஏவுகணைத் தாக்குதல்களில் 45 தீவிரவாதிகள் பலியானார்கள். திங்கட்கிழமை இரவு தொடங்கி செவ்வாய்க்கிழமை காலை வரை பல தடவைகள் ஏவுகணைத் தாக்குதல்களை அமெரிக்க இராணுவம் நடத்தியது. இவற்றில் மொத்தம் 45 தீவிரவாதிகள் பலியானார்கள்.

திங்கட்கிழமை இரவு வடக்கு வசிரிஸ்தானிலுள்ள தீவிரவாதிகள் வளாகத்தொன்றின் மீதும் ஒரு வாகனத்தின் மீதும் 9 ஏவுகணைகள் வீசப்பட்டன. இவற்றில் மொத்தம் 25 பேர் பலியானார்கள்.

அதன்பின்னர் தெற்கு வசிரிஸ்தான் பகுதியில் மீண்டும் ஏவுகணைத் தாக்குதல் நடந்தது. இதில் ஒரு வாகனத்தில் பயணம் செய்த 5 தீவிரவாதிகள் பலியானார்கள்.

செவ்வாய்க்கிழமை காலை மீண்டும் ஏவுகணைத் தாக்குதல் நடந்தது. வடக்கு வசிரிஸ்தானிலுள்ள ஒரு வளாகத்துக்குள் நுழைந்த வாகனத்தின் மீது 2 ஏவுகணைகள் வீசப்பட்டன. இவற்றில் 15 தீவிரவாதிகள் பலியானார்கள்.

கடந்த ஜூன் மாதம் முதல் நடந்த ஏவுகணைத் தாக்குதலில் மொத்தம் 90 தீவிரவாதிகள் பலியாகியுள்ளார்கள்.

# உலகிலேயே அதிக எடை கொண்ட குழந்தை அமெரிக்காவில் பிறப்பு

வாஷிங்டன், ஜூலை 14



அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு தம்பதியினருக்கு பிறந்த குழந்தை உலகிலேயே அதிக எடை கொண்ட குழந்தை (7.3 கிலோ) என்ற சாதனையைப் படைத்துள்ளது.

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தைச் சேர்ந்த தம்பதிகள் ஜானத்ஜான்சன், மிட்செலி பிரளென். மனைவி மிட்செலி பிரளென் (வயது - 38), டெக்ஸாஸ் மாகாணத்தில் லாங்கிவிவ் வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக்கிழமையன்று சிசேரியன் (சத்திரசிகிச்சை) மூலம் ஆண் குழந்தையைப் பெற்றார்.

அப்போது பிறந்த குழந்தையைப் பார்த்த டாக்டர்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. பிறந்த குழந்தை சாதாரண எடையைக் காட்டிலும் இருமடங்கு அதிகமாக இருந்தது. அந்தக் குழந்தை 7.3 கிலோ எடை (16 பவுண்டு) இருந்தது. இதன்மூலம் உலகிலேயே அதிக எடை கொண்ட குழந்தை என பெயர் பெற்றுள்ளது.

தற்போது இக்குழந்தை நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்ததைத் தொடர்ந்து டாக்டர்கள் குழந்தையின் இரத்தத்திலுள்ள சர்க்கரை அளவு, இருதயம், சிறுநீரகம் ஆகியவை உள்ளிட்ட உறுப்புகளின் செயல்பாட்டை தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து கண்காணித்து வருகின்றனர்.

# ஆயிரம் பிரான்ஸ் படையினர் ஆப்கனில் இருந்து நாடு திரும்புவர்


காபூல், ஜூலை 14

ஆப்கானிஸ்தானில் நிறுத்தப்பட்டுள்ள பிரான்ஸ் இராணுவச் சிப்பாய்கள் 4 ஆயிரம் பேர்களில் ஆயிரம் பேர் அடுத்த ஆண்டு இறுதியில் நாடு திரும்புவார்கள் என்று பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோசி அறிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் நாட்டுக்குச் சென்றிருக்கும் சர்கோசி இதை நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

போரை நிறுத்தவேண்டியது அவசியமாகும். காலவரையறையின்றி எங்கள் துருப்புகளை அங்கு நிறுத்தி வைத்திருக்க முடியாது. 2012ஆம் ஆண்டு இறுதிவாக்கில் ஆயிரம் சிப்பாய்களை திரும்பப்பெறுவோம் இவ்வாறு சர்கோசி கூறினார்.



ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சர்வதேச அணுசக்தி அமைப்பின் தலைவர் யூகியாஅமானோ(வலது), ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அலி அக்பர் சலே (இடது) ஆகியோர் சந்தித்துப் பேசுகின்றனர்.

# 2020இல் சந்திரனுக்கு மனிதனை அனுப்ப சீனா திட்டம்

பீஜிங், ஜூலை 14

2020ஆம் ஆண்டில் சந்திரனுக்கு மனிதனை அனுப்பி நேரடி ஆய்வை மேற்கொள்ள சீனா முடிவு செய்துள்ளது. விண்வெளி ஆராய்ச்சி, தொழில்நுட்பம் ஆகியவற்றில் அமெரிக்காவைவிட சீனா பின் தங்கியுள்ளது. எனவே, அந்தத் துறையில் அமெரிக்கா அளவுக்கு முன்னேற மிகவும் ஆர்வமாக உள்ளது.

அதற்கு முன்னோட்டமாக சந்திரனில் ஆய்வு மேற்கொள்வதில் தீவிரமாக உள்ளது. முதற்கட்டமாக சீனா தனக்கென்று விண்வெளியில் தனியாக ஓர் ஆய்வுமையத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது.

அதற்கான பொருட்கள், கருவிகள் ஆகியவற்றை ரொக்கெட் மூலம் கொண்டு செல்லும் பணி இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ளது.

# 11 வயதில் கடத்தப்பட்டு 18 ஆண்டு சிறையில் வைக்கப்பட்ட பெண்

வாஷிங்டன், ஜூலை 14

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்திலுள்ள தெற்கு லேக் தாகூ பகுதியைச் சேர்ந்தவர் ஜேசீ துகார்டு. இவர் 11 வயதாக இருந்த போது, அதாவது கடந்த 1991ஆம் ஆண்டு ஜூன் 10ஆம் திகதி தனது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தார்.

அப்போது அவரருகே ஒரு கார் வந்து நின்றது. அதில் பிலிப் காரிடோ என்ற காமுகன் இருந்தார். அவர் ஜேசீ துகார்டை முரட்டுத்தனமாகக் காருக்குள் இழுத்துக் கடத்தினார். அவரை ஒரு புறநகரில் ஊருக்கு ஒதுக்குப் புறமுள்ள தனது வீட்டின் பின்புறமிருந்த அறையில் அடைத்து வைத்தார்.

பின்னர், அவரை 18 ஆண்டுகள் சிறை வைத்து பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டார். இதற்கு அவரது மனைவி நான்சியும் உதவியாகவிருந்தார். ஜேசீ துகார்டு அந்த தனிமைச் சிறையில் இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தார். இருந்தும் அவர் ஜேசீயையும், அவரது குழந்தைகளையும் வெளியே விடவில்லை. அடைத்து வைத்திருந்தார். இந்த விவரம் எப்படியோ வெளியில் தெரிந்துவிட்டது. இதைத் தொடர்ந்து ஜேசீயும் குழந்தைகளும் 2009ஆம் ஆண்டு பொலிஸாரால் விடுவிக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து பிலிப்து கார்டும், அவரது மனைவி நான்சியும் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பிலிப்புக்கு 431 ஆண்டு சிறைத்தண்டனையும், அவரது மனைவி நான்சிக்கு 36 ஆண்டு சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டன.

11 வயதில் கடத்தப்பட்டு 18 ஆண்டுகள் சிறைவைத்து பாலியல் வன்புணர்வு கொடுமை குறித்து ஜேசீ துகார்டு ஒரு தனியார் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்தார். அத்துடன், தனது சுயசரிதையை புத்தகமாக எழுதியுள்ளார். அதில் இந்த விவரம் வெளியாகியுள்ளது.

# ஒரே நாளில் பிலிப்பைன்ஸில் நான்கு தடவைகள் பூகம்பம்

மணிலா, ஜூலை 14

ஒரே நாளில் பிலிப்பைன்ஸில் நான்கு தடவைகள் பூகம்பங்கள் ஏற்பட்டன.

பிலிப்பைன்ஸின் மத்தியில் நெக்ரோஸ் ஆக்சி டென்டல் மாகாணம் உள்ளது. அங்குள்ள காயுவாயான் நகரிலிருந்து 85 கி.மீற்றர் தூரத்தில் செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.47 மணியளவில் பூகம்பம் ஏற்பட்டது.

அப்போது அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த மக்கள் அலறியடித்தபடி எழுந்தனர். தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி ஓட்டம் பிடித்தனர். பரபரப்பு அடங்கியவுடன் சிறிது நேரம் கழித்து மீண்டும் வீடுகளுக்குத் திரும்பினர்.

அதைத்தொடர்ந்து 5 மணியளவில் மீண்டும் அடுத்தடுத்து 2 தடவைகள் பூகம்பங்கள் ஏற்பட்டன. பாத்திரங்கள் உருண்டோடின. வீடுகளும், கட்டடங்கள் குலுங்கின.

இதனால் மக்கள் பீதி அடைந்தனர். ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்ற அச்சத்தில் மீண்டும் வீடுகளை விட்டு ஓட்டம் பிடித்தனர். இந்தப் பூகம்பங்கள் ரிச்டர் அளவுகோலில் 5.5 மற்றும் 5.7 புள்ளி களாகப் பதிவாகின என வானியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த பரபரப்பு அடங்கிய சிறிது நேரத்தில் அதாவது 6.49 மணிக்கு மீண்டும் பூமி குலுங்கியது. இதனால் மக்கள் பீதியில் உறைந்தனர். வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கினர்.

கடைசியாக ஏற்பட்ட பூகம்பம் ரிச்டர் அளவுகோலில் 6.2 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலையில் அதிகாலை 4.47 மணிக்குத் தொடங்கிய பூகம்பம் 6.49 மணி வரை அதாவது 2 மணி நேரத்தில் அடுத்தடுத்து 4 தடவைகள் ஏற்பட்டன. இந்த பூகம்பங்களால் ஏற்பட்ட சேத விவரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

தொடர்ந்து பூகம்பம் ஏற்பட்டதால் அடுத்து என்ன நடக்கும் என்ற அச்சத்தில் பொதுமக்கள் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த் திருவிழா சிறப்பு மலர் 14.07.2011

## சீலன் அலுமினியம் பிற்றிங்

DOHA, DUBAI இல்
10வருட அனுபவம் உள்ளவர்.

Seelan Alumiyam Fitting
No:54, K.K.S. Road, Kokuvil Junction. Tel: 021 4902561, 0778050918, 0778011 9220

## சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
## SIVAKANESAN TEXTILES

நவநாகரிக நவீனமய ஆடைகள், புத்தம் புதிய சாறி வகைகள், திருமண முகூர்த்தப் பட்டுப் புடவைகள், நங்கையருக்கு ஏற்ற ஜவுளிகள் அனைத்துக்கும் அதிசிறந்த இடம்.

41, Grand Bazaar, Jaffna, Srilanka.

Tel No : 2222063

## ஹீரோ, கென்டன் காட்சியறை

HERO CYCLES
KENTON

சிறியோர் முதல் பெரியோர் வரையானஅனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்களை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரிஜினல் ஹீரோ
லேடீஸ் சைக்கிள்களும்
ஆண்கள் சைக்கிள்களும்
பெற்றுக்கொள்ளலாம்.

ஹீரோ, கென்டன் விநியோகத்தர்கள்
**ஸ்ரார் ரேடர்ஸ்**
இல.258. 260. மானிப்பாய் வீதி.
ஐந்துசந்தி. யாழ்ப்பாணம். தொ.பே.: 021 4921672

(49)

"நயினை நாகபூஷணி தாயே தேரேறி வந்து காத்தருளும்"

## Vaani Tex வாணி ரெக்ஸ்

**Specialist in Wedding Sarees & Shalwar Kameez**

81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே 021 2225578

தேரேறி வந்து எம் துயர் போக்கிடம்மா
நயினை நாகபூஷணித் தாயே

## பெஸ்ட் இன்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
## Best In's Textiles

ஆண்கள்,
பெண்கள்,
சிறுவர்களுக்கான
நவீனரக
ஆடைத்
தெரிவுகளை
உங்கள் எண்ணம்
போல்
ஒரே கூரையின்
கீழ் பெற்றுக்
கொள்ளலாம்

8V, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

59/2, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

உ
நமோ நாராயணன் துணை

## S.T. PARAMESWARAN & CO (PVT) LTD

STP CARGO

## TRANSPORT SERVIES
Colombo - Jaffna - Colombo

**Head office**
**182, Central Road,**
**Colombo - 12**
**Tel : 0112347210**

Branch Office:
79, Stanley Road,
Jaffna.
Tel : 021 222 7316



துன்பம் எல்லாம் தீர எம் மக்களுக்கு அருள் புரிவாய் தாயே

Songke
Electrical Switches

ACL CABLES
Domestic & Industrial Wiring

TUNGSRAM BULB

## NEWTONE ELECTRICAL
IMPORTERS & DISTRIBUTORS OF ELECTRICAL ITEMS

Autorised Agents for Tungsram Bulbs, ACL Cables ORANGE Switches

442, HOSPITAL ROAD, JAFFNA.
Phone : 021 222 2037, Fax : 021 222 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இராணுவத்தின் மனித உரிமை மீறல்கள் இறுவட்டுக்கள் விநியோகிக்கும் பணியில் வைகோ

சென்னை, ஜூலை.14

இலங்கை ராணுவத்தின் மனித உரிமை மீறல்களை பதிவு செய்துள்ள இறுவட்டுகளை மக்களிடம் சேர்ப்பிக்குமாறு கல்லூரி மாணவர்களுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ வேண்டுகோள் விடுத்தார்.



இலங்கையில் நடந்த போரில் ராணுவத்தால் தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட நிகழ்வுகளை பதிவு செய்து தயாரிக்கப்பட்ட இறுவட்டுகளை கல்லூரி மாணவர்களிடம் வைகோ நேரில் வழங்கி வருகிறார்.

அந்தவகையில் சென்னை - தாம்பரத்தில் உள்ள சென்னை கிறிஸ்தவக் கல்லூரி வாசலில் நேற்று முன்தினம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களிடம் இறுவட்டுகளை வழங்கினார்.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில்:

ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்த லட்சக் கணக்கான இறுவட்டுகள் தமிழகம் முழுவதும் விநியோகம் செய்யப்படுகின்றன. இந்த இறுவட்டுகளைப் பார்த்து விட்டு சாப்பிட முடியாது; தூங்க முடியாது; கண்ணீர் விட்டு அழாமல் இருக்க முடியாது.

சின்னஞ்சிறு பிஞ்சு குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டது; பெண்கள் கொடூரமாக பாலியல்வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டமை; தமிழ் இளைஞர்கள் கொடூரமாகப் படுகொலை செய்கின்ற கோரக் காட்சிகள் போன்ற விடயங்களை மேற்படி இறுவட்டில் காணமுடிகின்றது.

எமது தொப்புள் கொடி உறவுகள் இப்படி கொல்லப்பட்டார்களே என்பதை மாணவர் சமுதாயம் அறிந்து கொள்ள காணொளியை ஒவ்வொரு கல்லூரி வாயிலிலும் நேரில் சந்தித்துக் கொடுத்துள்ளேன்.

மாணவர் சமுதாயத்தினருக்கு நான் கேட்பதெல்லாம் இந்த இறுவட்டுக்களை உங்கள் சக்திகேற்ப பிரதி எடுத்து மற்றவர்களுக்கு வழங்குங்கள். ஒவ்வொருவரும் இதை செய்தால் கோடிக்கணக்கான மக்களிடம் இந்தத் தகவலைக் கொண்டு செல்ல முடியும்.

எனவே நிச்சயமாக இந்த படுகொலைகளைச் செய்தவன் தப்பிக்க முடியாது. குழந்தைகளையும், பெண்களையும், இளைஞர்களையும் படுகொலை செய்தவன் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்படுவது உறுதி. கொலைகார ராஜபக்ஷ கூட்டம் தண்டிக்கப்படுவது உறுதி.

இந்த பிரச்சினைக்கு ஒரே தீர்வு சுதந்திர தமிழ் ஈழ தேசம் தான். பொது மக்கள் வாக்கெடுப்பின் மூலமாக தெற்கு சூடான் உருவானது போல தமிழ் ஈழம் உருவாக வேண்டும் என்பதை உலகநாடுகள் முன்வைக்க வேண்டும்-என்றார் வைகோ.

# இந்தியத் தூதருக்கு சவூதியின் உயரிய விருது

சவூதி அரேபிய நாட்டுக்கான இந்தியத் தூதர் ஒருவருக்கு அந்தநாட்டின் உயரிய கௌரவ விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்திய- சவூதி அரேபிய நாடுகளிடையே நல்லுறவு ஏற்படுத்தும் முயற்சியில் தீவிரம் காட்டி வந்த அந்தநாட்டுக்கான இந்திய தூதர் தல்மிஸ் அகமதுவுக்கு, சவூதி மன்னரின் உயரிய விருதும், சான்றிதழும் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

தலைநகர் ரியாத்தில் இடம் பெற்ற நிகழ்வில், சவூதி மன்னர் அப்துல்லாவின் கையெழுத்திடப்பட்ட சான்றிதழ் மற்றும் கேடயமும் , அந்தநாட்டு வெளியுறவு அமைச்சரும் சவூதி இளவரசருமான அல்-பைசால் வழங்கிக் கௌரவித்தார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சவூதி மன்னர் அப்துல்லா பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது இந்திய- சவூதி இடையே இருதரப்பிலும் பரஸ்பரம் நல்லுறவு வலுப்பெறும் வகையில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. பின்னர் கடந்த ஆண்டு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் சவூதிக்குச் சென்றார்.

அப்போதும் இரு நாடுகளிடையே உறவு வலுப்பெறும் வகையிலான பேச்சுக்கள் நடந்தன. இதன் பின்னணியில் இந்தியத் தூதர் தல்மிஸ் அகமது சிறப்பாக செயற்பட்டதன் காரணமாக இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

**அமைச்சரவை மாற்றம்**

# மக்களுக்கு அளித்த உறுதிமொழியை பிரதமர் நிறைவேற்றத் தவறிவிட்டார்

## சாடுகிறது பா.ஜ.க.

புதுடில்லி, ஜூலை 14

அமைச்சரவை மாற்றம் பயனற்ற நடவடிக்கையாக அமைந்துள்ளது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியை சூழ்ந்துள்ள இருளை அமைச்சரவை மாற்றம் அகற்றவில்லை. மக்களுக்கு அளித்த உறுதிமொழியை நிறைவேற்ற பிரதமர் மீண்டும் தவறிவிட்டார்.

இவ்வாறு பாரதிய ஜனதா கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து, பாரதிய ஜனதாவின் செய்தித் தொடர்பாளர் ராஜீவ் பிரதாப் ரூடி டில்லியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு இடையே பரபரப்பாகப் பேசப்பட்ட மத்திய அமைச்சரவை மாற்றம் பெரிதாக எதையும் சாதித்து விடவில்லை. இந்த அமைச்சரவை மாற்றம் பயனற்றதாகவும் அது ஏமாற்றம் அளிப்பதாகவும் உள்ளது.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் போது, அமைச் சரவை அங்கீகாரம் பெற்ற 5 அமைச்சர்கள் நீக்கப்பட்டுள்ளனர். 13 புதியவர்களுக்கு இடம் கிடைத்துள்ளது.

எனினும், எதிர்க்கட்சிகளால் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகிய ப.சிதம்பரம், கபில்சிபல் ஆகியோர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை.

உள்துறை, நிதி, பாதுகாப்புத்துறை, வெளியுறவு போன்ற முக்கிய துறைகளில் மாற்றம் இல்லை. சட்டம், ஊர்வளர்ச்சி, நிறுவன விவகாரம், சுற்றுச்சூழல் போன்றவற்றுக்கு புது அமைச்சர் பொறுப்பேற்றுள்ளனர்.

ஊழல் முறையீடுகள், விலைவாசி உயர்வு, மோசமான செயற்பாடு போன்ற பிரச்சினைகளில் மத்திய அரசு சிக்கியுள்ள நிலையில், அமைச்சரவை மாற்றம் பெரிய அளவில் இருக்கும் என பாரதிய ஜனதா உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்ப்பார்த்தன. ஆனால் அது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. அமைச்சரவை மாற்றம் தேவையற்றது. செயற்படாத அரசு என்பதை இது மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது என ராஜீவ் பிரதாப் ரூடி தெரிவித்துள்ளார். (வ)



டில்லியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற அமைச்சரவை பதவியேற்பு விழாவில், புதிதாகப் பதவியேற்ற மத்திய அமைச்சர்களுடன் ஜனாதிபதி பிரதிபா பாட்டீல், பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# பீகாரில் புத்த ஆலயம்: பூட்டானுக்கு நிலம் ஒதுக்கீடு

பீகாரில் , புத்த தேவாலயம் கட்டுவதற்காக பூட்டான் அரசுக்கு அந்த மாநில அரசு 2 ஏக்கர் நிலம் 30 ஆண்டு குத்தகைக்குக் கொடுக்க முடிவு செய்துள்ளது.

பீகார் மாநிலம் நாலாந்தா மாவட்டத்தில் உள்ள மௌஜா ராஜகிர் என்ற இடத்தில் பூட்டான் புத்த தேவாலயம் கட்டுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தது. இந்தநிலையில், கடந்த திங்கட்கிழமை பீகார் அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் நிதீஷ் குமார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பூட்டான் அரசின் விருப்பத்தின்படி ராஜ்கிர் என்னும் இடத்தில் 2 ஏக்கர் நிலம் புத்த தேவாலயம் கட்டுவதற்காக ஒதுக்கி 30 ஆண்டுகள் குத்தகைக்குக் கொடுக்க முடிவு செய்யப்பட்டது. மேலும் மறு குத்தகையை புதுப்பிக்க 10 ரூபா மட்டும் பூட்டான் அரசிடம் இருந்து வசூலிக்கவும், குத்தகை வரியாக ஒரு ரூபா மட்டும் வசூலிக்கவும், இந்த 2 ஏக்கர் நிலத்தில பூட்டான் அரசு புத்த தேவாலயம் அமைக்கலாம் எனவும் முடிவு செய்யப்பட்டதாக பீகார் அரசின் முதன்மை மற்றும் அமைச்சரவை செயலாளர் ரவிகாந்த் தெரிவித்தார்.

இதற்கிடையே இந்தாண்டு கடைசியில் முதல்வர் நிதீஷ் குமார் பூட்டான் செல்ல இருக்கிறார். அப்போது பீகார் அரசின் சுற்றுலாத்துறையை மேம்படுத்த தூதரக அளவிலான பேச்சு நடத்துவார் எனவும் ரவி காந்த் கூறினார்.

# கலாநிதிமாறனுக்கு அழைப்பாணை

சென்னை, ஜூலை.14

பண மோசடி மற்றும் கொலை மிரட்டல் விடுத்தமை ஆகிய முறையீடுகள் குறித்து விசாரணைக்கு வருமாறு சன் தொலைக்காட்சி பணிப்பாளர் கலாநிதி மாறனுக்கு கே.கே.நகர் பொலிஸார் அழைப்பாணை அனுப்பியுள்ளனர்.



சேலத்தைச் சேர்ந்த விநியோகஸ்தர் செல்வராஜ் என்பவர் தீராத விளையாட்டுப்பிள்ளை பட விநியோகம் தொடர்பாக கொடுத்த பண மோசடி மற்றும் கொலை மிரட்டல் வழக்கில் சன் பிக்சர்ஸ் தலைமை செயல் அதிகாரி ஹன்ஸ்ராஜ் சக்சேனா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில் தற்போது கலாநிதி மாறனையும் பொலிஸார் விசாரிக்கவுள்ளனர். இதற்காக விசாரணைக்கு வருமாறு கூறி கலாநிதி மாறனுக்கு பொலிஸ் தரப்பில் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை பொலிஸில் ஆஜராக அவகாசம் அளிக்குமாறு சன் வலையமைப்பு நிறுவனத் தலைவர் கலாநிதி மாறன் கேட்டுக் கொண்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அமைச்சரவையில் தி.மு.கவுக்காக வெற்றிடமாக 2 இடங்கள் - பிரதமர்

டில்லி, ஜூலை 14

தேர்தலுக்கு முன், மத்திய அமைச்சரவை மாற்றியமைக்கப்படுவது இதுவே இறுதியாக இருக்கும். எனினும், கூட்டணித் தர்மத்தின்படி தி.மு.க.வுக்காக 2 அமைச்சரவை இடங்கள் வெற்றிடமாக வைக்கப்பட்டுள்ளன என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.



மத்திய அமைச்சரவை நேற்றுமுன்தினம் மாற்றி அமைக்கப்பட்டது. அதன்பின் செய்தியாளர்களுக்கு பிரதமர் அளித்த பேட்டியின்போதே இவ்வாறு கூறினார்.

பேட்டியின்போது அவர் மேலும் கூறுகையில்:

நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இடம்பெறும் வகையில் அமைச்சரவை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. என்னைப் பொறுத் தவரை 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக நடந்த அமைச்சரவை மாற்றம் இதுவாகவே இருக்கும். எனினும், கூட்டணித் தர்மத்தின்படி தி.மு.க. வுக்காக 2 இடங்கள் வெற்றிடமாக வைக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய முடிவு குறித்து விரைவில் பதில் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

பல்வேறு விடயங்களை ஆராய்ந்து, துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு சில பிரச்சினைகளைச் சந்தித்து வருவது உண்மைதான். ஆனால், அவற்றில் இருந்து நிச்சயமாக மீண்டு வருவோம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடக்கின் வசந்தம்

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு





மகிந்த சிந்தனையின் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் பின்வரும் வேலைத்திட்டங்கள் 13.07.2011 அன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பஸில் ராஜபக்ஷ மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

**1. மாநகரசபை வீதிகள்:-**

முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகால செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாநகரசபையின் 35 km நீளமான 42 வீதிகள் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் திட்ட செயற்பாட்டு பிரிவின் கண்காணிப்பின் கீழ் 710 மில்லியன் ரூபா செலவில் காப்பெற் வீதிகளாக புனர்நிர்மாணம் செய்யப்படும்.

| வீதியின் பெயர் | |
|---|---|
| வேம்படி வீதி | கோயில் வீதி |
| முன்பக்க வீதி | 3ஆம் குறுக்குத்தெரு |
| வைத்தியசாலை வீதி | மகாத்மா காந்தி வீதி |
| 2ஆம் குறுக்குத்தெரு | 6ஆம் குறுக்குத்தெரு |
| கடற்கரை வீதி | புனித ஜேம்ஸ் வித்தியாலய வீதி |
| வட்ட வீதி | நீர்த்தாங்கி வீதி |
| 4ஆம் குறுக்குத்தெரு | நீர்த்தாங்கி 1ஆம் குறுக்குத்தெரு |
| பண்ணை செஸ்ட் கிளினிக் வீதி | புனித பற்றிக்ஸ் வீதி |
| பங்சல் வீதி | புனித செபஸ்ரியான் வீதி |
| நாவலர் வீதி | கார்மேல்மாதா வீதி |
| சிவன் கோயில் பண்ணை வீதி | பூங்கா வீதி |
| மத்திய மேற்கு வீதி | பிரதான தேவாலய வீதி |
| பாசையூர் 4ஆம் குறுக்குத்தெரு | டேவிட் வீதி |
| அபூபக்கர் வீதி | கன்னியாஸ்திரி மடம் வீதி |
| வித்தியாலய வீதி | மாட்டீன் வீதி 1ஆம் குறுக்குத்தெரு |
| முஸ்லிம் வித்தியாலயம் வீதி | மாட்டீன் வீதி |
| சீனிவாசகம் வீதி | பதிப்பக வீதி |
| கன்னாதிட்டி வீதி | குரூசோ வீதி |
| மத்தியூஸ் வீதி | ஆனந்தன் வடலி வீதி |
| கஸ்தூரியார் வீதி | மணிக்கூட்டு கோபுர வீதி |
| கில்னர் வித்தியாலய வீதி | ராஜசிங்கம் வீதி |







**2. உள்ளூராட்சி திணைக்களம்**

வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பின்வரும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

| இல | உள்ளூராட்சி மன்றங்களின் பெயர் | வேலையின் விவரம் | திட்ட அமைவிடம் | பாதீட்டு மதிப்பீடு (மில்லியன்) |
|---|---|---|---|---|
| 01 | நல்லூர் பிரதேச சபை | அரியாலை தென் கிழக்கு மணிப்புரி வீதி புனரமைப்பு | அரியாலை | 8.09 |
| 02 | வலி கிழக்கு பிரதேச சபை | கோப்பாய் கிழுவானை வீதி புனரமைப்பு | கோப்பாய் | 9.90 |
| 03 | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை | குளனை வீதி புனரமைப்பு | துன்னாலை | 6.19 |

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை நிதியின் கீழ் புனரமைக்கப்பட்ட கரவெட்டி மரக்கறிச்சந்தை அமைச்சர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

**3. நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை**

இருபாலை, கரணவாய் ஆகிய இடங்களில் நிலத்தடி நீர்குழாய்கள் அமைத்தல் வேலை ஆரம்பிக்கப்பட்டதுடன் மணியந்தோட்டத்திலும் ஊரணியிலும் நீர் விநியோகித்தல் திட்டமும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

**4. இலங்கை மின்சார சபை**

மணியந்தோட்டத்தில் மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

**5. வீதி அபிவிருத்தி அதிகார சபை**

தெல்லிப்பளை-வல்லை -அராலி வீதி அபிவிருத்தி வேலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்கும் பெரும் வருவாயைப் பயன்படுத்தி வலிகாமம் வடக்கை மேம்படுத்தத் திட்டம்

## பிரதேச சபை வேட்பாளர் சுகிர்தன் கூறுகிறார்



யாழ்ப்பாணம்,ஜூலை14

பிரதேச, நகரசபைகளை ஆளும் கட்சி கைப்பற்றினால் தான் அந்தப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்யலாம் என்று கூறுவது உண்மைக்குப் புறம்பான கூற்றாகும். பிரதேச சபைகள் பல்வேறு வழிகளிலும் வருமானத்தை ஈட்டுவதுடன் உதவிகளையும் பெறுவதினால் நல்லதோர் உறுப்பினர்களைக் கொண்ட சபை அமையுமாக இருந்தால் அந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதில் கஷ்டங்கள் இருக்கமாட்டா.

மேற்கண்டவாறு வலி. வடக்குப் பிரதேச சபையின் வேட்பாளரும் காங்கேசன்துறை தமிழரசுக் கட்சிக்கிளைச் செயலாளருமான சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

வலி. வடக்கில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு எந்தவகையான அடிப்படை வசதிகளும் செய்யப்படவில்லை. குறிப்பாக சேந்தாங்குளம் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உரிய குடிதண்ணீர் வசதியோ, மலசல கூட வசதியோ அற்ற நிலைமையே காணப்படுகிறது.


இதேபோன்று கட்டுவன் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு தண்ணீர் ஒருசில நாள்கள் வலி. வடக்கு பிரதேச சபையால் வழங்கிய போதிலும் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்த மக்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்கான பாலர் பாடசாலைகளோ, பாடசாலைகளோ கூட நிர்மாணிக்கப்படவில்லை. இதனால் பிள்ளைகள் பாடசாலை செல்லமுடியாத நிலை காணப்படுவதுடன், ஒரு சில பிள்ளைகள் நீண்ட தூரம் சென்று கல்வி கற்கும் நிலைமையும் காணப்படுகின்றது.

மாவைக்கலட்டியில் மீளக்குடியேறிய மக்களின் பிள்ளைகள் முகாமில் இருந்தவேளையில் சென்ற பாடசாலைகளுக்கு உரிய போக்குவரத்து வசதிகள் அற்ற நிலையிலும் பெரும் சிரமத்தின் மத்தியிலும் பாடசாலை செல்கிறார்கள். இத்தனைக்கு மோசமான முறையில் நன்கு திட்டமிடப்படாமலும் மீள் குடியமர்வு இடம்பெற்றுள்ளது.

மக்களுடைய அன்றாடத் தேவைகளில் ஒன்றான மின்சாரம் கூட வழங்க நடவடிக்கையெடுக்கப்படாத நிலை காணப்படுகின்றது. மீள்குடியமர்வு நடைபெற்ற ஒரு சில பகுதிகளில் கூட மின் இணைப்புக்கள் அயலில் இருந்தும் அதனை அம்மக்களுக்கு உரிய முறையில் வழங்க நடவடிக்கையெடுக்கப்படவில்லை.

ஒரு சில அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் மக்களை திருட்டு மின்சாரம் பெற ஊக்குவித்துள்ளார்கள். மின்சார சபையோ அன்றி பொலிஸாரோ இறங்கி திருட்டு மின்சாரம்பெறுவதைபிடித்தால் பல ஆயிரம் ரூபாவை தண் டனையாக மக்கள் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டு, மக்கள் மேலும் கஷ்டத்துக்கு உள்ளாகும் நிலையே ஏற்பட்டுள்ளது.




இவைகள் எல்லாம் மக்களுடைய அபிவிருத்தி செயற்திட்டங்கள், உதவிகள் என்று கூறமுடியாது. பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் மீள் குடியமர்வு செய்யப்பட்டு வாடி வதங்கி வரும் மக்களுக்கு பிரதேச சபையின் நிதியினை நல்ல முறையில் பயன்படுத்தி வேலை செய்ய வேண்டியது அத்தியாவசியமாகும்.

பிரதேச சபைகள் இன்று தமக்கு ஒதுக்கப்பட்ட மலசல கூட நன்கொடைகள், அரச மானிய நன்கொடைகள் என்பவற்றையெல்லாம் உரிய முறையில் மக்களுடைய தேவைகளுக்குப் பயன்படுத்தாமல் வைப்பிலேயே வைத்துள்ளார்கள்.

இத்தகைய நிதிகளை உரிய முறையில் பெற்று அதனை மக்களுடைய அடிப்படை வாழ்வாதார வசதிகளை உயர்த்தும் முறையில் பயன்படுத்த வேண்டும்.

மீளக்குடியமரக் காத்திருக்கும் மக்களுடைய குடியேற்றங்களைக் கூட எதிர்காலத்தில் நல்லமுறையில் திட்டமிட்டு குடியேற்ற பிரதேச சபை தனது செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்றும் மயிலிட்டி, காங்கேசன்துறை, தையிட்டி, பலாலி போன்ற பல கரையோரப் பகுதிகளில் மீள்குடியமர்வு இன்னமும் இடம்பெறவில்லை. இந்த மக்களை மீள்குடியேற்றும் வகையில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவும், மீன்பிடிக்கான உதவிகளைச் செய்யவும் நடவடிக்கைகளை உரிய தரப்புக்களுடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளவேண்டும். வலி. வடக்குப் பிரதேச சபை உட்பட ஏனைய பிரதேச சபைகளும் ஆளும் கட்சியை எதிர்பார்த்திருக்க வேண்டிய தேவை இல்லை. இவைகள் ஏனைய அரச நிறுவனங்களைப் போலல்லாது வருமானம் ஈட்டும் ஒரு நிறுவனம் ஆகும்.

ஆதனவரி, சந்தைக் குத்தகைகள், கடைகளின் வாடகைகள், ஆண்டு அனுமதிப்பத்திரம், விளம்பரப் பலகைகளுக்கான நிதிகள், நீதி மன்றத்தினால் விதிக்கப்படும் தண்டனை வருமானங்கள்-

காணி உரிமை மாற்றம், காணி முத்திரைக்கட்டணம், விசேட மாகாண நிதி, மத்திய அரசினால் வருடாந்தம் அனைத்து பிரதேச சபைகளுக்கும் அரசால் ஒதுக்கப்படும் நிதி, நாடாளுமன்ற உறுபினர்களின் பன்முகப்படுத்தல் வரவு செலவு திட்ட நிதி என்று பல்வேறு வகைகளிலும் நிதியைப் பெறும் நிறுவனம் பிரதேச சபை.

இதனைவிட அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் நன்கொடைகள் கிடைக்கும் மூலங்களாகும். இதனை சிறந்த முறையில் நன்கு திட்டமிட்டு உரிய தேவைகளை உணர்ந்து செயற்படுத்தினால் எமது பகுதியை நாம் அபிவிருத்தி செய்துகொள்ள முடியும்.

மக்களுடைய தேவைகளுக் காகப் பல உதவிகளையும் பிரதேச சபையினால் மேற் கொள்ள முடியும். மலசல கூடங்களுக்கான நிதி உதவி, போஷாக்கு குறைந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உதவிகள், சன் சமூக நிலையங்கள், நூல் நிலையங்களுக்கான நன்கொடைகள், முன்பள்ளிப் பாடசாலைகளுக்கான உதவிகள் ஏனைய உதவிகளையும் செய்யலாம்.

கடந்த பலவருடங்களாக பிரதேச சபைகள் குறிப்பாக வடக்கு, கிழக்கில் மக்கள் பிரதி நிதிகளைக் கொண்டு இயங்கவில்லை. நாம் வலி. வடக்கு பிரதேச சபையின் வேட்பாளர்களாகத் தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் எமது பகுதியில் மாலைச் சந்தைகள் அமைக்கப்பட்டு, மக்களுக்கும் விவசாயிகளுக்கும் கடற்றொழிலாளர்களுக்கும் வருமான அதிகரிப்புக்கு ஊக்குவிக்கப்படும்.

மக்கள் அதிகம் பயன்படுத்தும் முக்கிய வீதிகளுக்கு மின்குமிழ்கள் பொருத்தப்படும். ஆயுள்வேத வைத்தியசாலைகள், பிரதேச ரீதியாக செயற்பட நடவடிக்கை மேற்கொள்வதுடன் மூலிகைத் தோட்டங்களும் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பொதுச்சுகாதார வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடற்கரைப் பகுதிகளில் கற்பாறைகள் அகற்றப்பட்டு கடற்றொழிலாளர்கள் தொழிலுக்கு சென்று வர வசதிகள் செய்யப்படுவது டன், கடற்கரைப் பகுதிகள் இனம் காணப்பட்டுத்துப்புரவு செய்யப்பட்டு பொழுது போக்கு வசதிகள் உட்பட ஏனைய வசதிகளும் செய்யப்படும்.

எமது பகுதியில் காணப்படும் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானம் சிறந்த தொரு மைதானமாக மாற்றப்படுவதுடன், காங்கேசன்துறை பகுதியிலும் பொது விளையாட்டு மைதானம் அமைக்கப்படும்.

எமது பகுதியில் இன்று யாழ். மாவட்டத்தில் சிறந்த விளையாட்டு வீர, வீராங்கனைகள் காணப்படுவதனால் விளையாட்டுத் துறைக்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும்.

நீண்ட காலமாக இடப்பெயர்வு, புறக்கணிப்பு போன்ற காரணிகளினால் திருத்தப்படாது காணப் படும் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகள் அனைத்தும் முன்னுரிமையின் அடிப்படையில் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தரமான முன்பள்ளிகள் பின்தங்கிய வலி.வடக்கு பிர தேச சபைக்கு உட்பட்ட கிராமங்களில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார்.

செவ்வி: நேசன்

# சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு முழுமையான பங்களிப்பு வழங்குவேன்



## கூட்டமைப்பின் வேட்பாளர் கிருஷ்ணராஜா

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கியுள்ள தர்மலிங்கம் கிருஷ்ணராசா 42 வருடங்கள் கிராம அலுவலராக சேவையாற்றி ஓய்வு பெற்றவர்.

அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வி இது-

இது வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதுக்காக அரசியல் வேறுபாடுகளைக் களைந்து சேவையாற்றுவதே எனது பிரதான நோக்காகும். கல்வியில் அதிக ஆர்வம் காட்டியபோதும் பொதுமக்களுக்கு என்னாலான உதவிகளை வழங்க வேண்டும் என்ற மன நிலையைக் கொண்டிருந்தேன். அதன் காரணமாக கிராம மட்டத்தில் பல்வேறு அமைப்புக்களின் முக்கிய பதவிகளை வகித்திருக்கிறேன். சன சமூக நிலையங்கள், விவசாய அமைப்புக்கள், கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசம் ஆகியவற்றின் தலைவர், செயலாளர் பதவிகளை ஏற்று மக்களுக்கு சேவையாற்றியிருக்கிறேன். மாணவனாக இருந்தபோதே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் ஆவரங்கால் கிளையின் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டேன்.

இவ்வாறு இளம்வயது தொடக்கம் தமிழரசுக் கட்சியுடன் எனக்கு தொடர்புகள் இருந்தன. கோப்பாய் கோமகன் என அழைக்கப்படும் அமரர் வன்னியசிங்கத்தின் வழிகாட்டலில் அவரது பாசறையில் வளர்ந்தவன் நான். தமிழரசுக் கட்சியின் கொள்கை, கோட்பாடுகள் யதார்த்தமானவை. நடைமுறைச்சாத்தியமானவை .அவை என்னை அதிகம் ஈர்த்துக்கொண்டன.

தீர்க்கதரிசனவாதி எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் வழிகாட்டல்கள், அவரது கருத்துக்கள் என்றும் நிதர்சனமானவை. தமிழரசுக் கட்சியின் புனிதமான நிலைப்பாடு தான் தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வுக்கு அடிப்படையாக அமையும் என்பது என்னாலும் புரிந்து கொள்ள முடிந்தது. தமிழ் பேசும் மக்களின் நலனுக்காக பாடுபட்டு வரும் தமிழரசுக் கட்சியின் [illegible] இறங்கியதனைப் பெரும் பாக்கியமாக [illegible]க்கிறேன்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பதே எனது நோக்கமாகும். அதற்காக அரசியல் வேறுபாடுகளைக் கடந்து ஒன்றிணைந்து உழைக்கத் தயாராக இருக்கிறேன். அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் நிதி ஒதுக்கீடுகள் அபிவிருத்திக்குப் போதுமானதாக இல்லை. புலம்பெயர் நாடுகளிலுள்ள கோப்பாய் வாழ் மக்களிடமிருந்து நிதியுதவிகளைப் பெற்று எமது பகுதியின் அபிவிருத்திக்குப் பங்களிக்க முடியும். அதற்காகப் பிரதேச சபையின் நிதி வளத்தை அதிகரிக்க வேண்டும். இதற்கு புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள எமது பகுதி மக்களை நிதியுதவி வழங்கச் செய்ய முடியும். எமது பகுதியின் விவசாயத்துறை, சிறுகைத்தொழில் துறைகள் மேம்படுத்தவேண்டிய தேவையுள்ளது. அத்துடன் உட்கட்டமைப்பு வசதிகளையும் சீர்படுத்தவேண்டும். அதற்காக அரசியல் வேறுபாடுகளைச் களைந்து நேரகாலம் பார்க்காமல் மக்களுக்கு சேவையாற்றியுள்ளேன். மக்களுக்கும் பெரியபொறுப்பு உள்ளது. தேர்தல் திகதியன்று அனைவரும் வாக்களிக்க வேண்டும். அந்த வாக்குகள் தமிழரசுக்கட்சிக்கே கிடைக்க வேண்டும். தமிழரசுக்கட்சி கைப்பற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் ஒவ்வொன்றும் பேரினவாத அரசுக்குத் தெளிவான செய்தியை வெளிப்படுத்தும்.

(ஜ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண தடகளப் போட்டியில் வென்ற யாழ்.இந்து மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் பங்குபற்றி பதக்கங்களை பெற்றுக் கொண்ட யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கல்லூரி அதிபர். கணேசராஜா தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். இந்துக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் எஸ்.ராகவன் கலந்து கொண்டு வீரர்களுக்கு பதக்கங்களையும் பணப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் க.சுவாமிநாதன், பயிற்றுனர் செ.ரமணன் ஆகியோரும் இதில் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற 15,17 வயதுப் பிரிவு சதுரங்கப் போட்டியில் 2ஆம் இடத்தையும் 19 வயது பிரிவு கூடைப்பந்தாட்டப் போட்டியில் 3 ஆம் இடத்தையும் பெற்ற யாழ். இந்துக்கல்லூரி அணி வீரர்களும் இதில் கௌரவிக்கப்பட்டனர். சிறப்பு நிகழ்வாக தேசிய மட்டத்தில் இடம்பெற்ற கணித வினாடிவினாப் போட்டியில் முதலிடத்தைப் பெற்ற இரகுநாதன் ஆதிரையனும் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார்.(ம-23)

# கொட்டடி நமசிவாயம் பதக்கம் வென்றது





யாழ்ப்பாணம்,ஜூலை 14

அண்மையில் நடைபெற்ற வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவர்கள் மூன்று பதக்கங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இந்த வெற்றிகள் மூலம் பதக்கங்களைப் பெற்ற மாணவர்கள்இருவரும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

17 வயதின் கீழ் பிரிவில் இடம்பெற்ற 100மீற்றர் ஓட்டப் போட்டியில் செல்வன் ஜெயேந்திரன் அபிமன் முதலாமிடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தையும், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

அத்துடன் 15 வயதின் கீழ் பிரிவில் நீளம்பாய்தல் போட்டியில் செல்வன் சுதாகரன் தமிழரசன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளார் .

இந்த வெற்றிகள் இந்தப் பாடசாலையின் வரலாற்றுச் சாதனை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

# 11 பதக்கங்களை வென்று யாழ். இந்து மாணவர் சாதனை



யாழ்ப்பாணம், ஜூலை 14

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற தடகளப் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி 8 தங்கப்பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம், 2 வெண்கலப்பதக்கங்கள் அடங்கலாக மொத்தம் 11 பதக்கங்களை பெற்றுள்ளது. இதில் ஆர்.செந்தூரன் 15வயது பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தல் நிகழ்வில் தங்கப் பதக்கம் வென்றார்.

வி.யஸ்மினன் 19 வயது பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தலில் தங்கப் பதக்கத்தையும் முப்பாய்சலில் வெள்ளிப் பதக்கத்தையும் 19 வயது பிரிவு ஆண்களுக்கான 4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்திலும் 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்திலும் தங்கப்பதக்கத்தையும் பெற்றார்.

வடமாகாண தடகளப் போட்டியில் 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான சிறந்த மைதான நிகழ்வுக்கான வீரராகச் செந்தூரன் தெரிவு செய்யப்பட்டார்.

19 வயது பிரிவு உட்பட்ட ஆண்கள் பிரிவில் சிறந்த சுவட்டு நிகழ்வுவீரனாக ஐ.சிவேந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.

19 வயதுபிரிவு உட்பட்ட ஆண்கள் பிரிவில் சிறந்த மைதானவீரனாக வி.யஸ்மினன் தெரிவு செய்யப்பட்டார்.

2011 ஆம் ஆண்டு மாகாண மட்ட போட்டியில் ஆண்களுக்கான சிறந்த மெய்வன்மை வீரராக வி.யஸ்மினன் தெரிவு செய்யப்பட்டார். (ம-23)

# உடுவில் மகளிருக்கு 5 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டியில் 5 பதக்கங்களை உடுவில் மகளிர் கல்லூரி பெற்றுள்ளது.

நான்கு தங்கப்பதக்கங்கள், ஒரு வெள்ளிப்பதக்கம் உட்பட 5 பதக்கங்கள் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளதாக அதிபர் திருமதி சிராணி மில்ஸ் தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டுக்கான போட்டிகள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இதில் 19 ,வயதுக்குட்பட்ட அஞ்சல் போட்டியில் (4X400) 4.43.08 என்ற செக்கன் நேரத்தில் ஓடி சாதனை படைத்ததுடன் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இந்தப் போட்டியில் கே.கஸ்தூரி சி.கிருத்திகா, மி.கமலினி, அ.மேர்சி ஆகியோரே பதக்கம் பெற்றனர். உயரம் பாய்தலில் கமலினி மில்ஸ் 1.36 உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

(ம-302)

E-tel நவீன காட்சியறை திறப்பு விழா

இதுவரை காலமாக
**ராம் சுப்பசிற்றி, யாழ்ப்பாணம்**
என்னும் இடத்தில் தற்காலிகமாக இயங்கிவந்த நமது காட்சியறை
தற்பொழுது
**328, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**
என்னும் இடத்தில் இன்று (14.07.2011) வியாழக்கிழமை முதல் இயங்க உள்ளது என்பதை நமது வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்

14-7-2011 முதல் 13-8-2011 வரை நமது காட்சியறையில் கொள்வனவு செய்பவர்களுக்கு 5% விலை கழிவு

E-tel




BRANTEL LANKA (PVT) LTD
06, ஆர். ஏ. டி மெல மாவத்தை கொழும்பு 04.
Web : www.brantel.lk
328, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 2228418

யாழ்குடாநாட்டிலுள்ள விற்பனை முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்

கோலாகலத் திறப்பு விழா

வடமராட்சி மக்களின் நீண்ட நாளைய
எதிர்பார்ப்பு இன்று நிறைவேறுகின்றது

மிக்சர், பொம்பே சுவீற் வகைகளின் மாளிகை
50 வருட அனுபவம் மிக்க உற்பத்தியாளர்கள்
அமல் கிறாம் ஸ்ரோர்ஸ் கொழும்பின்
கிளை

**136, பிரதான வீதி, நெல்லியடியில்**

**AMAL GRAM SHOP**

**TRADIONAL GRAM PEOPLE IN SRILANKA**


**இன்று (14.07.2011) வியாழக்கிழமை**
**காலை 7.30-9.30 சுபவேளையில்**
**கோலாகலமாக**
**ஆரம்பிக்கப்படவுள்ளது**
**அனைவரையும் அன்புடன்**
**அழைக்கின்றோம்**

ags Since 1960

நெல்லை சில்க்
நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகைவர்களின் பயங்கர ஆட்டம் விரைவில்



இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் அடுத்த மாதம் கால்பந்து தொடர் நடக்கவுள்ளது. இதனையடுத்து இந்த இரு அணிகளுக்கு இடையில், விரைவில் கிரிக்கெட் தொடர் நடக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

2008 இல் நடந்த மும்பை தாக்குதலுக்கு பின்னர், இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில், இரண்டு அணிகள் பங்கேற்கும் கிரிக்கெட் தொடர் நடத்தப்படவில்லை. கடைசியாக இந்த இரு அணிகளும் 2007 இல் மோதின.

சமீபத்தில் வெளியான சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) அட்டவணைப்படி, அடுத்த ஆண்டு மார்ச் - ஏப்ரல் மாதங்களில் இந்த இரு அணிகளுக்கு இடையில் மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் நடத்த ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

சமீபகாலமாக இந்திய அரசு, பாதுகாப்பு நலன் கருதி, இந்திய விளையாட்டு நட்சத்திரங்களுக்கு, பாகிஸ்தான் சென்று விளையாட அனுமதி அளிப்பதில்லை. இதனால் இந்தத் தொடரை பாகிஸ்தானில் நடத்த வாய்ப்பு இல்லை. சமீபத்தில், இங்கிலாந்து மண்ணில் பாகிஸ்தானுக்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட கால்பந்து தொடரில் விளையாட இந்திய வீரர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே இந்தியாவில் அல்லது அந்நிய மண்ணில், இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் கிரிக்கெட் தொடர் நடக்க வாய்ப்பு உள்ளது. இதற்கான முடிவு அடுத்த மாதம் நடக்கவுள்ள இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

பி.சி.சி.ஐ துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா கூறியதாவது:

இந்தியா - பாகிஸ்தான் தொடருக்கு, இந்திய அரசு மறுப்பு தெரிவிக்கிறது என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடுவது குறித்து, அடுத்த மாதம் தான் முடிவு செய்ய உள்ளோம். அதன்பின்னர் இந்திய அரசிடம் அனுமதி கேட்க உள்ளோம் - என்றார். (15)

# கோட்டை விட்டதால் தோற்றுப் போனோம்

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலை அடைந்தது வேதனை தருகிறது, என்று இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் புலம்பியுள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் சென்ற இந்திய அணி டெஸ்ட் தொடரை 1-0 என்று கைப்பற்றியது. இரு அணிகள் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி ஆட்டம் சமநிலையடைந்தது. இந்த ஆட்டத்தில் சந்தர்போல் கொடுத்த பிடியை இரண்டு முறை டிராவிட் நழுவ விட்டார். இதே போல, கிர்க் எட்வர்ட்சிற்கு மூன்று முறை வாய்ப்பு வந்தது. இதனை கோட்டை விட்டதால், இருவரும் சதம் அடித்து இந்திய அணியின் வெற்றிக்கு முட்டுக் கட்டையிட்டனர்.

இது குறித்து ஹர்பஜன் சிங் கூறியது: டொமினிகா டெஸ்ட் ஆட்டத்தில் நான்கு விக்கெட்டுகள் வீழ்த்தினேன். இன்னும் மூன்று விக்கெட்டுகள் வீழ்த்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இந்த ஆட்டம் சமநிலையடைந்தது வருத்தமாக உள்ளது. துடுப்பாட்டத்திற்கு சாதகமான ஆடுகளத்தில், துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாடவில்லை என் கின்றனர். அதே நேரம் நான்கு விக்கெட்டுக்கள் கைப்பற்றிய என்னை



பாராட்ட மறுக்கின்றனர்.

இது விநோதமாக உள்ளது. தவிர, உண்மையில் முட்டாள் தனமானது. கடந்த முறை தென்னாபிரிக்கா சென்ற போது, எப்படி பந்து வீசினால் நல்லது என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் ரவி சாஸ்திரி ஆலோசனை தந்தார். இதன்படியே செயல்பட்டதால் தான் கேப்டவுன் டெஸ்டில் 120 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்கள் வீழ்த்த முடிந்தது. இதற்காக அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

இதேபோன்று தான், மேற்கிந்தியத்தீவுகள் மண்ணிலும் சிறப்பாக பந்து வீச முயற்சி செய்தேன். ஆனால், துடுப்பாட்ட வீரர்கள் சுழற்பந்து வீச்சை, பயமின்றி எளிதாக சமாளிக்க கற்றுக்கொண்டனர்.

சர்வதேச டெஸ்ட் போட்டியில் 400 ஆவது விக்கெட்டை, 85 அல்லது 86 டெஸ்ட் போட்டிகளில் எடுத்திருக்கலாம். ஆனால் கிரேக் சப்பல் பயிற்சியாளராக இருந்த 2006, 2007 ஆம் ஆண்டு காலம் கடினமாக இருந்தது. இவர் வீரர்களை தொடர்ந்து கண்காணித்து கொண்டே இருந் தார். இவரது பயிற்சியின் போது விளையாடிய 14 டெஸ்ட் போட்டியில் 49 விக்கெட்டுக்கள் தான் வீழ்த்தினேன்.

எதிர்வரும் இங்கிலாந்து தொடரில் சச்சின், டிராவிட், லட்சுமண ஆகிய மூன்று மூத்த வீரர்கள் களமிறங்குகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள். மூன்று பேருக்கும் தனித் தனியாக களத்தடுப்பு வியூகம் அமைக்க வேண்டும். இவர்களுக்கு எதிராக இங்கிலாந்தின் சுவான், எப்படி பந்தை சுழற்றுவார் என்பதை பார்க்க ஆவலாக உள்ளேன் - என்றார். (15)


# நெருக்கடி கொடுப்போம்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் உலக அளவில் முதலிடத்தில் உள்ள இந்திய அணி இங்கிலாந்துடனான தொடருக்காக நேற்று புறப்பட்டுச் சென்றது.

அந்த அணி 4 டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணியுடன் மோதுகின்றது. சமீபத்தில் நடந்த நட் வெஸ்ட் ஒரு நாள் தொடரில் 3-2 ஆட்டக் கணக்கில் இலங்கை அணியை இங்கிலாந்து வீழ்த்தியது. வெற்றிவாகை சூடிய இங்கிலாந்தின் ஒரு நாள் அணிக்கு தலைவராக அலெஸ்டர் குக் இருந்தார். இங்கிலாந்து அணி தனது முதல் டெஸ்ட்டை லோர்ட்ஸ் மைதானத்தில் இந்தியாவை எதிர்கொள்கின்றது. இந்த டெஸ்ட் தொடரில் எங்களுக்கு சாதகமான விடயங்களை பயன்படுத்தி இந்திய அணிக்கு நெருக்கடி தருவோம் என்று அண்ட்ரு ஸ்ரோஸ் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

# பேடியால் டோனிக்கு தாக்குதல்

## டொமினிகா டெஸ்டால் வந்தது வினை



மும்பை,ஜூலை 14

டொமினிகா டெஸ்டில் டோனி எடுத்த முடிவு, 'நம்பர்-1' டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளின் உலக சம்பியன் என்ற பெருமையுள்ள அணிக்கு சற்றும் பொருந்தவில்லை, என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் பிஷன் சிங் பேடி தாக்குதல் தொடுத்துள்ளார்.

டொமினிகா டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெற இரண்டாவது இன்னிங்சில், 90 பந்துகளில் 86 ஓட்டங்கள் தேவைப்பட்டது. இந்த நிலையில் கைவசம் 7 விக்கெட்டுக்கள் இருந்தும், ஆட்டத்தை சமநிலையில் முடிக்க அணித்தலைவர் டோனி சம்மதித்தார். இதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன. பிஷன் சிங் பேடி கூறியதாவது:

மேற்கிந்தியத்தீவுகள் அணி தற்போது சாதாரணமாகத் தான் காட்சியளிக்கின்றது. இந்த நிலையில் டெஸ்ட் தொடரை 3-0 என்று வென்றிருக்க வேண்டும். மழையால் தான் இரண்டாவது டெஸ்ட் போட்டியை வெல்ல முடியவில்லை என்கின்றனர்.

இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்கள் டிராவிட், லக்ஸ்மன் உட்பட யாரும் விரைவாக செயல்படவில்லை என்பது தான் உண்மை. டொமினிகா டெஸ்டில் வென்று, தொடரை 2-0 என்று வெல்வதற்கு நல்ல வாய்ப்பிருந்தும், 1-0 என்று முடித்துக் கொண்டது மோசமான செயல்.

இந்தியாவின் வெற்றிகரமான அணித் தலைவர் என்று டோனியை சொல்கிறார்கள். தவிர, உலக சம்பியன் பட்டம் வேறு கைப்பற்றி தந்துள்ளார். இந்த நிலையில் இவரிடம் இருந்து இப்படி ஒரு முடிவை எதிர்பார்க்கவில்லை.

தற்போது அனைத்து பாராட்டுக்களும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு சென்றுவிட்டது. இதனால் தாங்கள் சர்வதேச தரத்துக்கு உயர்ந்து விட்டதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருப்பார்கள். இனிமேலாவது இந்திய அணி 'நம்பர்-1' அந்தஸ்துக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் - என்றார். (15)

# ஆஸி.சம்பியன்

3 ஆவது உலகக் கிண்ண வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஆஸ்திரேலிய அணி சம்பியனாகியுள்ளது.

ஜூலை 3 முதல் 10 ஆம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெற்ற இந்த தொடரின் இறுதிப் போட்டியில் நியூஸிலாந்து அணியை ஆஸ்திரேலிய அணி வெற்றி கொண்டது. மிகவும் கடுமையாக நடைபெற்ற இந்தப் போட்டியின் முதல் 3 சுற்றுகளிலும் நியூஸிலாந்து அணியே முன்னிலையில் இருந்தது. எனினும் நான்காவது சுற்று முடிவில் இரு அணிகளும் தலா 46 கோல்களைப் பெற்று சமநிலையில் இருந்தன.

இதனால் மேலதிக நேரம் ஒதுக்கப்பட்டது. அதிலும் இரு அணிகளும் தலா 6 கோல்களை புகுத்தி சமநிலை பெற்றதால் இரண்டாவது மேலதிக நேரம் வழங்கப்பட்டது. அதில் ஆஸ்திரேலியா 6 கோல்களையும் நியூஸிலாந்து 5 கோல்களையும் புகுத்தின. இதனால் ஆஸ்திரேலிய அணி 58-57 கோல்கள் விகிதத்தில் வெற்றி பெற்றது. கடந்த தடவையும் சம்பியனாகிய ஆஸ்திரேலிய அணி, மொத்தமாக 10 தடவை சம்பியனாகியுள்ளது. நியூஸிலாந்து அணி 4 தடவை சம்பியனாகியுள்ளது.

இந்த முறை 3 ஆவது இடத்திற்கான போட்டியில் இங்கிலாந்து அணி, ஜமைக்காவை தோற்கடித்தது. 16 அணிகள் பங்குபற்றிய சுற்றுப் போட்டியில் இலங்கை அணி 14 ஆவது இடத்தைப் பெற்றது. ஏனைய ஆசிய அணிகளான சிங்கப்பூர் 15 ஆவது இடத்தையும் மலேஷியா 16 ஆவது இடத்தையும் பெற்றன. (15)

# வேகங்கள் வேகமாய் தாக்க வேண்டும்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணியின் வெற்றி, வேகப்பந்து வீச்சாளர்களின் உடற்திறனை பொறுத்துதான் உள்ளது, என்று டிராவிட் தெரிவித்துள்ளார்.

இந்தியா, இங்கிலாந்து அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் ஜூலை 21 இல் லோர்ட்ஸில் தொடங்குகின்றது. இந்திய அணியின் மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் டிராவிட் கூறியதாவது:

இப்போதைய டெஸ்ட் தொடர் மிகவும் முக்கியமானது. சமீபகாலமாக இரு அணிகளும் டெஸ்ட் போட்டிகளில் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றன. 2007 தொடரில் இந்திய அணி, இங்கிலாந்தை வென்றது. இந்த முறை இங்கிலாந்து அணியினர், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த காத்திருப்பர். இங்கிலாந்து அணி அதன் சொந்த மண்ணில் விளையாடுவது கூடுதல் பலம்.

அதேநேரம் நாமும் சிறப்பான அணி என்பதில் சந்தேகம் இல்லை. சில ஆண்டுகளாக அனைத்து போட்டிகளிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றோம். இந்த நிலையில் தொடரில் யார் வெல்வது என்பதை கணிப்பது கடினம்.

நமது வேகப்பந்து வீச்சாளர்கள் நல்ல உடற்திறனுடன் இருக்கும் பட்சத்தில், கடுமையான போட்டியை கொடுத்து வெற்றி பெறலாம்.

இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் அபாரமாக பந்து வீசுகின்றார். சுழற்பந்து வீச்சாளர் சுவான், நன்கு தேறியுள்ளார். முதன் முதலாக அவரை இங்கிலாந்தில் பார்த்த போதே, வளர்ச்சியடைவார் என்று கணித்து இருந்தோம். இவர் சற்று வித்தியாசமான பந்து வீச்சாளர். எப்போதும் விக்கெட் வீழ்த்து வதிலேயே கவனமாக இருப்பார்.

இதற்காக துடுப்பாட்ட வீரர்கள் எளிதாக பந்தை அடிக்கும் வகையில் பந்து வீச்சு செய்யவும் தயங்கமாட்டார். சுழற்பந்து வீச்சை நன்கு எதிர்கொள்ளும் துடுப்பாட்ட வீரர்கள் யாராக இருந்தாலும், இதைக் கண்டு பயப்படாமல் அடித்து விளையாடுவார்கள். இவரும், அண்டர்ஸனும் இங்கிலாந்து அணிக்கு துருப்பு சீட்டாக இருப்பார்கள்.

இந்திய அணி 'நம்பர்-1' அணியாக இருப்பது பெருமையாக உள்ளது. இந்த இடத்தை அவ்வளவு விரைவாக பிடித்து விடவில்லை. இதற்காக கடுமையாக உழைத்து இருந்து தொடங்கியது ... என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14 ஜூலை 2011 வியாழக்கிழமை

# மரண அறிவித்தல்

## வேதநாயகம் இம்மனுவேல் இராஜநாதன்

[கோல்டன் பாம் உரிமையாளர்]



புலோலி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், இல.77, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேதநாயகம் இம்மனுவேல் இராஜநாதன் கடந்த (11.07.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேதநாயகம்-மேரியம்மா தம்பதியரின் மகனும், ஜோக்கீம்பிள்ளை- மரியம்மா பாக்கியம் தம்பதியரின் மருமகனும், மாலா ஜொவிற்றாவின் அன்புக் கணவரும், வேஜின் கியூறி(கொமர்ஷல் வங்கி), அல்ஸ்ரன் பிறாங்,இனோ டினேஸ், வில்சன் வூட்ஸ் (சென். ஜோன்ஸ் கல்லூரி), அலக்ஸ் கொட்வின்(சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் ஜெகநாதன், விமலாபத்மினி காலஞ்சென்ற கௌசாம்பிகை மற்றும் ராகினி, காலஞ்சென்ற லோகநாதன் ஆகியோரின் அருமைத் தம்பியும், மாலதி(கனடா), மாலினி (லண்டன்), ஜொய்சி(ஓமான்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஊர்வலத் திருப்பலி இன்று (14.07.2011) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக புலோலி புனித சூசையப்பர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

77, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (5745)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## சிவலிங்கம் விவேகானந்தன் (பாப்பா)



கட்டுவன் சைவ மடத்தடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு துரை வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் விவேகானந்தன் நேற்று (13.07.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா சிவலிங்கம் (ஓய்வுபெற்ற, தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி அதிபர்) மற் றும் பூபதி தம்பதியரின் அன்பு மகனும் சிவநேசகுகன், சிவராணி சோமநாதன், சிவபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வள்ளிநாயகி, சிவசக்தி, புவிமன்னசிங்கம், ராஜகுலேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் கம்சாயினியின் சித்தப்பாவும் சிவநந்தினியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2011) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துரை வீதி, கோண்டாவில் மேற்கு,
இணுவில். (5784)
தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி நடேசன் சிவயோகம்



காலையடி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருமதி நடேசன் சிவயோகம் நேற்று (13.07.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசன் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) அவரின் அன்பு மனைவியும், அழகரத்தினம்(இளைப்பாறிய சுங்க அதிகாரி), காலஞ்சென்ற சண்முகலிங்கம்(இளைப் பாறிய அதிபர்) மற்றும் குமாரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலாநிதி இரவீந்திரன் (உப பீடாதிபதி, தேசிய கல்வியியற்கல்லூரி, தர்காநகர்), இரமணீந்திரன், இந்திரகுமாரி, காலஞ்சென்ற மல்லிகா மற்றும் புவீந்திரன், நிர்மலா ஆகியோரின் அன்புத் தாயும், சத்தியமலர், விஜயலட்சுமி, செல்வராசா, விஜிதா, ரமேஸ் ஆகியோரின் அன்பு மாமியும், சுபாரா, சுமண்யன், கபிஷன், ஜனார்த்தன், குகதீசன், டிவானி, பைரவி, பிரவின், வைஷவி, டியாஸ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2011) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் பனிப்புலம் பண்டத்தரிப்பில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அம்மன் கோயிலடி,
பனிப்புலம், பண்டத்தரிப்பு.
கலாநிதி ந.இரவீந்திரன் (உப பீடாதிபதி,
தேசிய கல்வியியற்கல்லூரி, தர்காநகர்)

## கந்தையா குமாரசாமி



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குமாரசாமி நேற்று (13.07.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மனோன்மணி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் மற்றும் மங்களேஸ்வரி, கனகாம்பிகை, ஜெக தாம்பிகை (ஜேர்மனி), யோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நடராசா, விநாயகமூர்த்தி, கனகசபாபதி, பராசத்தி, பாக்கியம் ஆகியோரின் சகோதரனும் சுரேந்திரச்சந்திரன் (மணி, ஆனைக்கோட்டை தேநீர்க்கடை), சிறிதரன், இரத்தினகுமார் (ஜேர்மனி), சிவலோகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் துசானி, வானதி, றக்சனா, நிருஷன், மிலானி, ஆர்த்திகா, காவியா, நந்தனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (14-07-2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
"ஐயனார் கோயிலடி"
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
சுரேந்திரச்சந்திரன் (மருமகன்)
(மணி தேநீர்க்கடை , ஆனைக்கோட்டை)

## வாடகைக்கு

பிறவுண் வீதி, 1ஆம் ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய அறைகள் ஆண் மாணவர்களுக்கு, அலுவலர்களுக்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு-
0779578244,
0213734306,
0776387702

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## மீள் கேள்வி அறிவித்தல்

கீழ் வரும் வேலைக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- | 15.07.2011-20.07.2011பி.ப2மணிவரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- | 21.07.2011 நண்பகல் 12 மணி வரை |
| கேள்வி திறந்து பார்க்கும் திகதி:- | 21.07.2011 பி.ப 1.30 மணி |
| கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இடம்:- | தலைமை அலுவலகம், சுன்னாகம் |

| வேலையின் விவரம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம்(வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 1. மருதனார் மடம் சந்தையில் இலத்திரனியல் மின் தராசு பொருத்துவதற்கான கொட்டகை அமைத்தல் | 9000.00 | 560.00 | M8/C9 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட "இக்ராட்" தரத்துக்கு பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடம் இருந்து என்னால் கோரப்படுகின்றன. தேசத்தைக் கட்டியெழுப்பும்(NBT) வரியாக மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணத்துடன் மேலதிகமாக 3% வீதம் அறவிடப்படும்.
பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலப்பிரதி "செயலாளர், வலி காமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும் அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்", " பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் உரிய காலத்துக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம். 13.07.2011

திருமதி சு. முருகநேசன், செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ, கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, கௌரவ ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்ட நிகழ்வுகள் 13.07.2011 - 17.07.2011 திகதிவரை யாழ். மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

# இன்றைய தினம் நடைபெறவுள்ள நிகழ்வுகள்

| இல. | உள்ளூராட்சி மன்றங்களின் பெயர் | திட்டத்தின் பெயர் | | வேலைகளின் விவரம் | திட்ட அமைவிடம் | பாதீட்டு மதிப்பீடு (மில்லியன் ரூபாவில்) | நிகழ்வுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வலி வடக்கு பிரதேச சபை | துரித மீள் எழுச்சித்திட்டம் | 1 | சந்தைக்கட்டத்தொகுதி, பஸ் தரிப்பு நிலையத்துக்கான அடிக்கல் நாட்டுதல் | தெல்லிப்பழை | 9.150 | அடிக்கல்நாட்டு விழா |
| | | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 2 | பொன்னையா வீதி புனரமைப்பு | பன்னாலை | 5.903 | கால்கோள் விழா |
| 2 | வலிகாமம் தெற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 3 | காளி கோயில் வீதி புனரமைப்பு | ஏழாலை | 4.475 | கால்கோள் விழா |
| | | துரித மீள் எழுச்சித்திட்டம் | 4 | இராஜேஸ்வரி அம்மன் கோயில் வீதி | குப்பிளான் | 4.725 | திறப்பு விழா |
| 3 | வலிகாமம் தெற்கு, மேற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 5 | ஆலங்குழாய் வீதி புனரமைப்பு | மானிப்பாய் | 7.529 | கால்கோள் விழா |
| 4 | வலிகாமம் மேற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 6 | சுழிபுரம் பெரிய தம்பிரான் வீதி மீள்புனரமைப்பு | சுழிபுரம் | 10.996 | கால்கோள் விழா |

ஏனைய பிரமுகர்களால் ஆரம்பித்து வைக்கப்படும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்

| இல. | உள்ளூராட்சி மன்றங்களின் பெயர் | திட்டத்தின் பெயர் | | வேலைகளின் விவரம் | திட்ட அமைவிடம் | பாதீட்டு மதிப்பீடு (மில்லியன் ரூபாவில்) | நிகழ்வுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வலி வடக்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 7 | குட்டியப்புலம் மயான வீதி புனரமைப்பு | குட்டியபுலம் | 5.789 | கால்கோள் விழா |
| 2 | வலிகாமம் தெற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 8 | மல்வம் 3 ஆம் குறுக்குத்தெரு வீதி புனரமைப்பு | உடுவில் | 4.779 | கால்கோள் விழா |
| | | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 9 | காடக்கடம்பை மயான வீதி புனரமைப்பு | குப்பிளான் | 6.831 | கால்கோள் விழா |
| 3 | வலிகாமம் தெற்கு, மேற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 10 | சேமக்காலை வீதி புனரமைப்பு | இளவாலை | 6.121 | கால்கோள் விழா |
| | | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 11 | உச்சியோடை வீதி புனரமைப்பு | மானிப்பாய் | 5.362 | கால்கோள் விழா |
| | | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 12 | சின்னப்பா வீதி புனரமைப்பு | மானிப்பாய் | 7.696 | கால்கோள் விழா |
| 4 | வலிகாமம் மேற்கு பிரதேச சபை | உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் | 13 | நொச்சியம்பதி பச்சந்தை வீதி புனரமைப்பு | அராலி | 13.198 | கால்கோள் விழா |

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
யாழ்ப்பாணம்.
(அ/1748)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீரிஸ் இன்று பாக். புறப்பாடு

கொழும்பு, ஜூலை 14

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று பாகிஸ்தான் செல்கிறார். பாகிஸ்தான் ஜனாதிபதி அஸீட் அலி சர்தாரி உட்பட உயர் அதிகாரிகளை அவர் சந்தித்து பேச்சு நடத்துவார் என அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (சி)

# யாழ். நகரில் அமிர் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 14

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கத்தின் சிரார்த்த தின நிகழ்வு உணர்வு பூர்வமாக நேற்று யாழ். நகரில் உள்ள தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

அமரர் அமிர்தலிங்கத்தின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் செயலாளர் நாயகம் வரதராஜப் பெருமாள் உள்ளிட்ட பிரமுகர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், புளொட் தலைவர் சித்தார்த்தன் மற்றும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். இதே வேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்திலும் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. (ஓ-14-319)

## றொகான் குணவர்தனவுக்கு எதிராக கனடாவில் வழக்கு

கொழும்பு, ஜூலை 14

இலங்கை அரச ஆதரவாளரும் புலி எதிர்ப்பாளருமான பேராசிரியர் றொகான் குணவர்தனவுக்கு எதிராக கனடாவின் முன்னணித் தமிழ் அமைப்பான கனடியத் தமிழ்க் காங்கிரஸ் மான நஷ்ட மற்றும் அவதூறு வழக்குகளை கனடாவின் ஒன்றாரியோ உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கனடாவில் கனேடியன் தமிழ் காங்கிரஸ் என்ற பெயரின் கீழ் இயங்குவதாக ரொஹான் குணவர்த்தன லக்பிம பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார். இதனை எதிர்த்தே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் பேட்டியைப் பிரசுரித்த லக்பிம பத்திரிகையிடமும் கனேடிய தமிழ்க் காங்கிரஸ் நஷ்ட ஈடு கோரியுள்ளது. (உ)

## உலக கம்யூனிஸ்டுகளிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்துள்ளது.

சென்னையில் உள்ள அலுவலகத்தில் வைத்து உதயன் பிரதிநிதிக்கு வழங்கிய பேட்டியில் கம்யூனிஸ்ட் கட்சி தமிழக மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் மேலும் தெரிவித்தாவது:-

உண்மையான தகவல்கள் உலக கம்யூனிஸ்டுகளுக்குப் போய்ச் சேரவில்லை.

நடந்தது பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்று இலங்கை அரசு செய்த பிரசாரத்தின் அடிப்படையிலேயே பல கம்யூனிஸ்ட் அரசுகளும் கட்சிகளும் இதுவரை முடிவுகளை எடுத்து வந்தன.

இப்பொழுது அந்தந்த நாட்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு உண்மை என்ன என்பதை நாம் எடுத்து விளக்கி வருகிறோம். பயங்கரவாதத்துக்கு எதிரான போரிலா லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் மற்றும் பல லட்சம் மக்கள் அகதிகளாக்கப்பட்டும் உள்ளார்கள் என்ற யதார்த்தத்தை அவர்களுக்குப் புரிய வைக்கிறோம்.

இது தொடர்பான தரவுகள், ஆவணங்களுடன் 49 நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு நாம் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளோம். அவற்றில் 10 நாடுகளில் இருந்து, ''இப்போதுதான் உண்மை தெரிந்தது. உங்கள் முயற்சியை வரவேற்கிறோம்'' என்று பதில் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் 5 நாடுகளில் இருந்து எமது கடிதம் கிடைத்து விட்டது என்ற பதில் அனுப்பப்பட்டுள்ளது.

நாங்கள் எமது கடிதத்தை ஆங்கிலத்திலேயே அனுப்பி வைத்தோம் என்பதால், அவற்றை அந்தந்த நாட்டு மொழிகளில் பெயர்த்து எடுப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தால் ஏனைய நாடுகளிடம் இருந்து பதில் கிடைப்பது தாமதமாகிறது.

எப்படி இருந்த போதும், உலகிலுள்ள முற்போக்கு சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி ஈழத் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கப் போராடுவோம். பாலஸ்தீனப் பிரச்சினையில் செயற்பட்டது போன்ற அதேயளவு வேகத்துடனும் உணர்வுடனும் உலக முற்போக்கு சக்திகள் அனைத்தையும் நாம் அணி திரட்டுவோம்.

இந்த முயற்சியில் நாம் வெற்றிபெறுவோம் என்று திடமாக நம்புகின்றேன். குறிப்பிட்டளவு முன்னேறி இருக்கிறோம் என்றும் கருதுகின்றேன்.

- இப்படி தனது பேட்டியில் தா. பாண்டியன் தெரிவித்தார். (உ)

## நயினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழமையாக மாலை 6 மணியுடன் படகு சேவைகள் நிறுத்தப்படும். ஆனால் நேற்று இரவு மின்சார வெளிச்ச வசதி செய்து படகுகளில் மக்கள் நயினைக்கு அழைத்து வரப்பட்டனர். இந்தச் சேவையில் 130இற்கு மேற்பட்ட படகுகள் கடற்படையினருடன் சேர்ந்து சேவையில் ஈடுபட்டன.நேற்றிரவு 8 மணி வரை சுமார் 10 ஆயிரம் பக்தர்கள் ஆலயத்தில் கூடினர் என எமது செய்தியாளர் அறிவிக்கிறார்.

இரவு 11 மணியளவில் அம்மன் சப்பரத்தில் ஆரோகணித்து அருட்காட்சி வழங்கினார். இன்று காலை 7 மணிக்கு கொடித்தம்ப பூசையுடன் வசந்தமண்டபப் பூசையும் இடம்பெற்று அம்பாள் தேருக்கு எழுந்தருளுவார்.

காலை 9.30 மணிக்கு நயினை அம்பாள் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்மழை பொழிவார்.

(உள்ளே 9 பக்கங்களில் சிறப்பிதழ்கள்)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொரட்டுவை, கெஸ்பாவை - புறக்கோட்டை, நீர்கொழும்பு - புறக்கோட்டை, கடவத்தை - புறக்கோட்டை, கடுவெல - புறக்கோட்டை மற்றும் ஹோமாகம - புறக்கோட்டை ஆகிய சேவைகளுக்காக ஆறு புதிய சொகுசு பஸ்கள், போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கமவினால் நேற்று புதன்கிழமை அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. (இ-01)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்தை அடையும் நாள் வெகு தொலைவில் இல்லை'' என்று அவர்கள் கூறினார்கள்.'' என்றார்.

இலங்கையை விற்று தமிழக அரசியல்வாதிகள் அரசியல் நடத்துகின்றனர் என்று சீறிய அஸ்வர்ர ''அங்கு தேர்தல் முடிவடைந்துள்ளபோதிலும் தமிழக அரசியல்வாதிகள் இப்படித்தான் பேசி வருகின்றனர்.'' என்றும் கூறினார்.

இலங்கையின் உண்மை நிலைமையை அறியத் தமிழகத் தலைவர்களை இங்கு வந்து நேரில் பார்க்கும்படியும் அவர் அழைப்பு விடுத்தார். (உ-சி)

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன. சிவில் நிர்வாகம் அங்கு நிலைநிறுத்தப்பட்டிருந்தால் இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதற்கு வழியில்லை.'' என்று அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக்காலை தமிழ் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். அவர் இந்தச் சந்திப்பின்போது தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சர்வதேசம் இலங்கை மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்றது. இப்பிரச்சினைகளிலிருந்து மீளவேண்டுமானால் தேர்தல்களை நீதியாகவும் நேர்மையாகவும் நடத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. வீதிகளும் கட்டடங்களுமே அமைக்கப்பட்டு வருகின்றன. இவை அனைத்துக்கும் வெளிநாட்டு உதவிகள் கிடைத்துள்ளன. மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் தமக்குப் போதிய வசதிகள் செய்து கொடுக்கவில்லை எனக் குறை கூறினால் அவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் முழுமையாக நீக்கப்படவில்லை. உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டு அங்கு வாழ்ந்த மக்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவர் என தேர்தலின்போது அரசு வழங்கிய வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. - இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ-சி)

## இராணுவத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் உங்களின் பதில் என்ன? எனக் கேட்டபோதே யாழ். இராணுவத் தளபதி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

''தமிழ்த் தலைமைகள் பிரி வினைவாதம் பற்றிப் பேசியே அரசியல் நடத்தி வந்தன. அவர் களால் அக்காலப் பகுதிக்குள் ஒன்றும் செய்து கொள்ள முடியாமல் போனது. இதனை நன்கு உணர்ந்த மக்கள் இன்று அரசுடன் இணைந்து செயற்பட ஆரம் பித்துள்ளனர்.

இந்த நிலையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தோல்வியடைந்து விடுவோம் என்ற பீதி கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ளது. இப் பொழுது அவர்களுக்குச் செய்வதற்கு ஒன்றுமில்லை. எனவே, இராணுவத்தினர் அடாவடியில் ஈடுபடுகின்றனர் எனப் பொய்ப் பிரசாரம் செய்து அனுதாப வாக்குகளைப் பெற முயற்சிக்கின்றனர்.''

தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளின்போது இராணுவம் இடையூறு விளைவித்தது எனக் கூறப்படுவதாவது அப்பட்டமான பொய். நாம் பாதுகாப்புக் கடமைகளிலேயே ஈடுபடுகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-சி)

## யானைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யானைகள் கணக்கெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இந்தக் கணக்கெடுப்பின் மூலம் யானைகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை தெரிந்துவிடும் எனக் கூறும் பத்திராஜ, ஆண், பெண், குட்டிகள், கொம்பன்கள் என எல்லாவிதத்திலும் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்றார்.

இதன் மூலம் யானைகளைப் பாதுகாப்பதற்கு சட்டங்களைத் தயாரிக்க வேண்டுமா என்பதையும் அரசால் முடிவு செய்யக்கூடியதாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

''இந்தக் கணக்கெடுப்பு மூலம் இனிவரவுள்ள பல வருடங்களுக்கு யானைகள் தொடர்பான கொள்கைகள், திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அரசுக்கும் அதிகாரிகளுக்கும் உதவும்'' என்றும் பத்திராஜ தெரிவித்தார்.

இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 250 யானைகள் கொல்லப்படுகின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் பெரும்பாலானவை விவசாயிகளாலேயே கொல்லப்படுகின்றன. அதே போன்று யானைகளால் வருடாந்தம் 50 பேர் கொல்லப்படுகின்றனர்.

சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் இலங்கையில் 10,000 முதல் 15,000 வரையான யானைகள் இருந்ததாகக் கண்டறியப்பட்டிருந்தது. ஆனால் இப்போது இந்த எண்ணிக்கை 5,000 முதல் 6,000 வரையே இருக்கும் என்று அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். (உ)

**தவறிவிட்டது**

WH6150 என்னும் இலக்கமுடைய சபாரி மோட்டார் வாகன இலக்கத் தகடு தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் தொ.பே இல தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும்.

தொடர்புகளுக்கு-
தொ.பே-0212222873 (கண்ணன்)

**யாழ். பஸ் நிலையப் பகுதியில் இருக்கும் ஒரு வர்த்தக நிறுவனத்துக்கு வேலையாள் தேவை**

முன் அனுபவம் உள்ள கணக்காளர்
முன் அனுபவம் உள்ள விகிதர்
தகுந்த தராதரப் பத்திரத்துடன் வதிவிட கிராம சேவையாளரின் நற்சான்றிதழுடன் விண்ணப்பம் இணைக்கப்படல் வேண்டும்.

விளம்பர இல: 4161,
c/o: உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**மலிவு விற்பனை**

4ரக்டர்கட்டு மண்23000/- 4 ரக்டர் பூச்சுமண் 25000/- சிமெந்துகற்கள், கருங்கல் சல்லிக்கல் போன்றவையும் உண்டு.

தொடர்பு-0776253719

**Scooter Sale**

நல்ல நிலையில் உள்ளVespa Scooter, Slect-II, L.M.L ஒன்று விற்பனைக்கு உண்டு . Self Start வசதியுடையது. விலை -45000/-

தொடர்பு-0714275384

**சமையல் ஆள் தேவை**

மாணவர்களுக்கு உணவு வழங்கக் கூடியவர்கள், சமைக்கக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்

0779578249

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் மதுவரித் திணைக்களத்துக்கு அடுத்து அமைந்துள்ள நான்கு அறைகளுள்ள விசாலமான வீடு வாடகைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு- 0777252669

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை லோகநாதன்



புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 49/1, விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை லோகநாதன் நேற்று(13.07.2011) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியரின் குலக் கொழுந்தான அன்பு மகனும், காலஞ்சென்ற பத்மதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னம்பலம் (மல்லாகம்) மற்றும் பத்தினி தம்பதியரின் அன்பு மருமகனும், சண்முகாதேவன், பாமதேவன், பாஸ்கரதேவன், காலஞ்சென்ற சத்தியதேவி ஆகியோரின் அன்பு அத்தானும், காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் பத்மநாதன் ஆகியோரின் மருமகனும், பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.07.2011) வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரின் மைத்துனியின் இல்லத்தில் [(திரு.திருமதி சௌந்தரநாதன் -குகாயினி (ரவி)] நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இரா-சங்கரன்
[மைத்துனன்] 0775297260

இலக்கம்-112, பாற்பண்ணை அருகில்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு கூட்டத்துக்கு மறுக்கப்பட்ட ஒலிபெருக்கி சில நிமிடங்களில் கிடைத்தது

## எம்.பியின் அதிரடி நடவடிக்கையால் கைமேல் பலன்

ஏழாலை, ஜூலை 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் அதிரடி நடவடிக்கையினால் மறுக்கப்பட்ட ஒலிபெருக்கி அனுமதி சில நிமிடங்களில் வழங்கப்பட்டது.

ஏழாலை தெற்கு மயிலங்காட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கூட்டமைப்பு அமைப்பாளர்களினால் ஏழாலை மயிலங்காடு சிறி முருகன் சனசமூக நிலையத்தில் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்துக்கு ஒலிபெருக்கி பாவிப்பதற்கான அனுமதி கோரி 5 நாள்களுக்கு முன்னரே சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் நேற்று மாலை கூட்டம் நடைபெறவேண்டிய வேளை வரை ஒலிபெருக்கிக்கான அனுமதி வழங்கப்படவில்லை.

சகல ஏற்பாடுகளையும் செய்துவிட்ட அமைப்பாளர்கள் மத்தியில் பெரும் கலக்க நிலை ஏற்பட்டது. செய்வதறியாது தடுமாற்றம் அடைந்தனர்.

அதேவேளை கூட்டம் நடைபெறவிருந்த மண்டபமுகப்பில் ஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் படத்துடன் பெரியளவிலான கட்டவுட் ஒன்றையும் கட்டி விட்டிருந்ததோடு மண்டபத்தை அண்டிய எல்லா இடங்களிலும் ஈ.பி.டி.பி பிரசார போஸ்டர்களும் ஒட்டப்பட்டிருந்தன. இந்த விடயம் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

கூட்டமைப்பின் பிரசார கூட்டத்துக்கு இடையூறு விளைவிக்கவும் கூட்டத்தை முடக்கிவிடும் நோக்கத்துடனும் மேற்கொண்ட இந்த நடவடிக்கை உறுப்பினர் சரவணபவனை கொதிப்படைய செய்து விட்டது.

வாகனத்தில் பயணம் செய்தவாறே பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவின் பத்மதேவாவுடன் தொலைபேசி மூலம் அறிவித்ததுடன் பக்க சார்பாக செயல்படும் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கடுமையாகக் கூறினார்.

இந்தச் செய்தி உயர் பொலிஸ் அதிகாரிகளின் ஊடாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எட்டிவிட்டது. சரவணபவன் கூட்டம் நடைபெறும் இடத்துக்கு செல்வதற்கு முன்னரே அங்கு வந்திருந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வந்திருந்த சரவணபவனிடம் வந்து விநயமாகப் பேசினார்.

ஒலிபெருக்கி அனுமதி மறுக்கப்படவில்லை என்றும் ஒலிபெருக்கி அனுமதிக்கான கட்டணமாக 250 ரூபா செலுத்தப்படவில்லை. அதனால் தான் தாமதம் ஏற்பட்டது என்றும் அதில் உள்நோக்கம் ஏதும் இல்லை என்றும் சாக்குப் போக்கு கூறினார்.

அதனைத் தொடர்ந்து சரவணபவன் கட்டணத் தொகையை அருகில் நின்றவரிடம் கொடுத்து ரசீது பெறுமாறு கூறினார்.

இதனை அவதானித்த சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தானும் தனது ஜீப்பில் சென்று கட்டணத்துக்குரிய ரசீதையும் ஒலிபெருக்கி அனுமதிக்கான அனுமதியையும் கையோடு கொடுத்து அனுப்பியதுடன் பாதுகாப்புக்காக நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களையும் அனுப்பி வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் இந்த அதிரடி நடவடிக்கையினால் மறுக்கப்பட்ட ஒலிபெருக்கி அனுமதி சில நிமிடங்களில் வழங்கப்பட்டது.

இது இந்தப் பிரதேச மக்கள் மத்தியில் புதிய தெம்பை ஏற்படுத்தியது. (ஒ-2-14)

# மும்பையில் தொடர் குண்டு வெடிப்பு 20 பேர் உயிரிழப்பு; 113 பேர் காயம்

மும்பை, ஜூலை 14

இந்தியாவின் வர்த்தக நகரான மும்பையில் நேற்று புதன் கிழமை மாலை தொடர் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவங்களில் குறைந்தபட்சம் 20 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 113 பேர் காயமடைந்துள்ளனர் என்று முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. மும்பை நகரிலுள்ள சன நெரிசல் மிக்க வர்த்தக பகுதியான தத்ரா, ஒபேரா மற்றும் ஸவேரி பஸார் ஆகிய பகுதிகளிலேயே குண்டுகள் வெடித்தன.

20 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என மஹாராஷ்டிரா மாநில முதலமைச்சர் பிருதிவிராஜ் சவான் தெரிவித்துள்ளார். இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என இந்திய உள்துறை அமைச்சர்.பி. சிதம்பரம் கூறியுள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டிலும் மும்பையில் பயங்கரவாதிகளினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தாக்குதலுக்கு அமெரிக்கா இலங்கை பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளதுடன் இறந்தவர்களது குடும்பத்தினருக்கும் அனுதாபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-10)

**வணிகக் கல்வி A/L இலவசக் கருத்தரங்கு**

CIMA நிறுவனத்தின் அனுசரணையில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர், விரிவுரையாளர்களால் நடத்தப்படவுள்ளது.

இடம்: DCM கல்வி நிறுவனம் (பொருளியல் மண்டபம்) (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

காலம்: இன்று (14.07.2011) வியா முன் காலை 9 மணி

✵ குறிப்பேடுகள் வழங்கப்படும்.

**உடன் தேவை**



☞ கணினி வடிவமைப்பாளர்
☞ கணினி தட்டெழுத்தாளர்

ஈஸ்வா டிஜிற்றல் பிறஸ்
பரமேஸ்வரா சந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0771659845, 0775437217

MyWay English இன் இலவச ஆங்கில பயிற்சிப்பட்டறை

**ENGLISH WORKSHOP**

ஆங்கிலம் பேசுவதற்கு தேவையான அனைத்து விடயங்களும் இரண்டு மணிநேரத்தில் முழுமையாக கற்பிக்கப்படும்

காலம் : 14.07.2011 வியாழக்கிழமை (போயா விடுமுறை)
பிரிவுகள் : 8.00 - 10.00, 10.00-12.00. 2.00-4.00, 4.00-6.00
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)

இடம் : யாழ் மத்திய கல்லூரி

**அனுமதி இலவசம்**

* ADMISSION
* CERTIFICATE
* BOOK
ALL FREE

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், வங்கியாளர், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், பட்டதாரிகள், A/L மாணவர், இளைஞர், யுவதிகள் கலந்துகொள்ளலாம்.

கலந்துகொள்ளும் அனைவருக்கும் கலந்துகொண்டதற்கான சான்றிதழ், மற்றும் கற்றல் புத்தகம் முற்றிலும் இலவசம்

MyWay English
182, Stanley Rd, Jaffna
077 33 63 456

## 'போன்' பேசி வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

கைத்தொலைபேசியில் உரையாடியவாறு வாகனம் ஓட்டிச் சென்ற உரும்பிராய் வாசிக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கோப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்தவழக்கை நேற்று விசாரித்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா 3 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் தவறின் ஒருமாதகால சாதாரண சிறைத்தண்டனை விதித்தும் தீர்ப்பளித்தார்.

(4)

## மரண அறிவித்தல்

### முருகு செல்லத்துரை



மூர்த்தியாங்கூடல், Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகு செல்லத்துரை கடந்த (11.07.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.07.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று மதியம் ஒரு மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூர்த்தியாங்கூடல்,*
*Dr.சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - 2011**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**



இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்

**திரு.தருமலிங்கம் கிருஷ்ணராசா**

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

ஓய்வுபெற்ற கிராம அலுவலர் (பத்தமேனி, இடைக்காடு, ஊரெழு, உரும்பிராய்)




பிரபல சமூக சேவையாளர்
வெற்றியீட்ட முழுமையாக வாக்களிப்போம்

**இடமாற்றம்**



**LANKA WALLTILE PLC & LANKA FLOORTILE PLC**

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் 85 ஆம் இலக்கத்தில் இயங்கி வந்த LANKA WALLTILE PLC & LANKA FLOORTILE PLC நிறுவனம் 16.07.2011 முதல் இல.469, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு (வண்ணை சிவன் கோயிலுக்கும் மனோகரா தியேட்டருக்கும் இடையில்) இடமாற்றப்படவுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்
LANKA WALLTILE PLC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய
## தேர்த் திருவிழா சிறப்பு மலர் 14.07.2011



### ஏழ் கடல் தாண்டி அம்பிகையை சரணடைய வாருங்கள்



அருள்வளர் ஸ்ரீ நயினை நாகபூஷணி அம்பிகையின் திருவருள் பூர்வமாக வருடம் தோறும் ஆனி பூரணையைத் தீர்த்தமாகக் கொண்டு பதினைந்து நாள்களும் பெரும் திருவிழா எடுத்து அம்பிகைக்கு உரிய பதினாறு முதல் அறுபத்தினான்கு உபசாரங்களைச் சமர்ப்பித்து வேத திருமுறை, நாத, கீத மங்கள உபசாரத்தோடு அடியவர்களுடைய நாத நாமத்துடன் அழகிய வாகனத்தில் சர்வ அலங்காரங்களுடன் அடியவர்கள் புடை சூழ அரச காவலர்கள் அணிவகுத்து ராஜோபசாரமும் செலுத்துவர். பூலோகக் கைலாயமென நயினைத் திருத்தலம் விழாக்கோலம் கொண்டுள்ளது.
அடியவர்களும் நிர்வாகத்தினரும் பூலோகக் கைலாயத்தில் அம்பிகைக்கு வழி வழி திருத்தொண்டு செய்ய இந்திரன் முதலாய தேவர்கள் எல்லோரும் போல் எமது வழித்தோன்றலாகிய நாம் பாக்கியசாலிகள் அருளாளர் என போற்றுகின்றோம்.

இன்று (14 ஆம் திகதி வியாழன்) காலை [illegible] மணியளவில் பக்தகோடிகளின் அரோகரா கோசத்துடன் அம்பிகையின் திருத்தேர் வடம் பிடித்து தம் பிறவிப் பிணிகளை நீக்க அம்பிகையின் திருத்தேரை வீதியிழுத்து தம்மைப் பக்குவப்படுத்தித் தாயின் திருப்பாதக் கமலங்களிடம் சரண்புகுவதான பரமானந்த நிலையை நாமும் கலந்து ஆனந்தத் திருநடனத்தைக் கண்டுகளித்திட ஏழ்கடல் தாண்டி அம்பிகையைச் சரணடைய வாருங்கள் எனக்கூவி அழைக்கின்றோம். வாரீர், பேரின்பத்தை அடைவீர் என அழைக்கிறோம்.

ப.முத்துக்குமாரசாமிக்குருக்கள்,
பிரதமகுரு, மஹோற்சவ குரு,



### அன்னையின் அருளாசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்



தமிழ் நாடு சிதம்பரம் திரு.க.புருஷோத்தமனின் கருத்தில் உருவான 30 அடி உயரமான கைலைக் காட்சியுடன் அமைந்த திருக்குள சிற்பாலயம் கண்டு வியக்கும் அடியார், கைலை தரிசனப் பேறு பெற்ற மனநிறைவுடன் திரும்பும் மனநிறைவே போதும் அன்னையின் அருள் மாட்சிக்கு.

கொடுக்கக் கொடுக்கக் குறையாத அமுதசுரபி கிடைத்த இந்தப் புனித தலத்திற்குத் தினமும் அம்பாளை வழிபடவரும் அடியார்க்கு நித்திய அன்னதானப்பணியை அடியார்களின் துணையுடன் கோயில் வளாகத்தில், அறங்காவலர் சபையினர் ஆற்றிவரும் சேவையை, எழுத்தால் எழுதமுடியாது. அமுதருந்திச் செல்லும் அடியாரின் மனம் நிறைந்த நிலையில், இந்தப் பணியில் தம்மையும் ஒருவராகப் பதிந்து செல்லும் தன்மையே ஒரு சான்றாகும்.

ஆனி மாத உயர் திருவிழாக்காலமான 16 நாள்களும் அன்னையைத் தரிசிக்கவரும் அனைவருக்கும் பகல் இரவாக அமுதசுரபி அன்னதான சபையினர் அமுதமளித்து அரும்பணி ஆற்றிவருவது போற்றற்கரிய அரிய பணி. இந்த வ்கையில் தம் சேவையைச் செய்யும் அனைவர்க்கும் அன்னையின் அருளாசி கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

"தாயே ஆகி வளர்த்தனை போற்றி"

ஆ.தியாகராசா, தலைவர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணிஅம்மன் ஆலயம், நயினாதீவு.

### தேரேறி வருகின்றாள் பூஷணி..!

பெற்றதா லன்னை பெறுமுயி ரனைத்தும்
பேணலா லன்னை பெற்றிட வோ
உற்றதா லன்னை விரும்பிய அனைத்தும்
உதவலா லன்னை எக்கலையும்
சொற்றதா லன்னை உலகொடு வானுந்
தொழுதலா லன்னை என்றென்றும்
புற்றதாங்கருணை பொழிதலா லன்னை
பராபரை நாக பூஷணியால்

நாகமணிப்புலவர்,
நயினை.

### அருள் வழங்கும் பெருவிழா இன்று



அலைகடல் ஓரத்தில்இருந்து தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருள் மழையை அள்ளி வழங்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க அன்னை நாகபூஷணி திருத்தேரில் ஏறி அருள் வழங்கும் பெருவிழா இன்றாகும். இதற்கு வாழ்துச் செய்தி வழங்குவதில் பெருமை அடைகின்றேன்.

அழகிய கலை நுணுக்க வேலைப்பாடுகள் நிறைந்த சித்திரத்தேரில் அம்பாளும் ஏனைய இரண்டு தேர்களில் விநாயகரும் வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியரும் பவனிவரும் இந்தக் காட்சியை காண கோடி கண்கள் வேண்டும். சாதி மத பேதமற்று அன்னையின் சந்நிதியில் கூடி நிற்கும் அடியார்களின் "தாயே" என்ற ஒலியும் "அரோகரா" என்ற ஒலியும் வானைப் பிளக்க வேத மந்திரங்களும் மங்கள வாத்தியங்களும் இசைக்க அம்பாள் திருத் தேரில் பவனி வரும் காட்சியை காண உலகெங் கிருந்தும் பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் ஒன்று கூடி நயினாதீவு ஜன சமுத்திரமாக காட்சி அளிக்கும். பெருவிழா சிறக்கவும் அன்னையின் தெய்வீகத் திருவருள் அனைவருக்கும் கிடைக்கவும் பிராத்திக்கின்றேன்.

திரு.ந.மோகனரூபன், செயளாலர்.




இருளை நீக்கிட வருவாயம்மா
உந்தன் அருளைப் பொழிந்திடு தாயே அம்மா!

நவநாகரிக நவீனமய ஆடைகள்,
புத்தம் புதிய சாறி வகைகள்,
நங்கையருக்கேற்ற ஜவுளிகள்
அனைத்துக்கும் அதி சிறந்த
உன்னதமான இடம்

மிலேனியம் பெஷன்
& பொம்பே பஸார்

MILLENNIUM FASHION
& BOMBAY BAZAAR

No.10, 11, POWER HOUSE RD,
GRAND BAZAAR, JAFFNA.
(மலாயன் கபே முன்பாக)
T.P: 021 222 9399



தீராத வினைகளை அறுத்திடம்மா தாயே!

அலுமினியம் பிற்றிங், அனைத்து அளவிலான
படம் பிறேம் போடுதல் மற்றும்பல சேவைகளை
எம்மிடம் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



பட்டாபி படமாடம்
கண்ணாடி வகைகளின் ஏக விநியோகஸ்தர்
64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7821
இல.225, 227, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 4351



மாறாத கருணை
எமக்கருள் தாயே...!



Fridge, Deep freezer, Bottle cooler, Airconditioner, T.V. மற்றும் சகலவிதமான
மின்சார இலத்திரனியல் உபகரணங்களை அபான்ஸ் நிறுவனத்தின் உத்தரவாதத்துடனும்
இலவச விநியோக சேவையுடன் பெற்றுக்கொள்ள

LG No 1 Dealer in SriLanka

JAFFNA ELECTRICAL
Authorized Dealer for Abans

Show Rooms :
141,Power House Road, Jaffna.
T.P: 021 222 8378, 5766.

No. 135, A9 Road, Kilinochchi
T.P: 021 2228008

Cool Line:
0777725258

94 (6), Stanley Road, Jaffna.
021 222 2353


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த் திருவிழா சிறப்பு மலர் 14.07.2011



## மணிபல்லவத் திருத்தேரில் நாகம்மாளின் அருட்காட்சி காண வாரீர்..!

உலகுயிர்கள் உய்யும் வண்ணம் எம்பிரானாகிய சிவபெருமான் தமது சக்தியைப் பதித்தற்குரிய இடங்கள் அறுபத்து நான்காகும். இவை சக்தியின் பீடங்கள் எனப்படும். பலப்பல தலங்களில் பலப்பல திருநாமங்களை கொண்ட பேரருட் சக்தியானவள் நயினாதீவு எனப்படும் மணிபல்லவத்திலே புவனேஸ்வரி பீடத்தினை அலங்கரித்துக் கொண்டு நாகேஸ்வரி, நாகபூஷணி முதலாய திருநாமங்களுடன் எழுந்தருளி அருளாட்சி நடத்தி வருகின்றாள்.

நாகம் வழிபட்டதால், நாகத்தால் பூசிக்கப்பட்டதால் அன்னைக்கு நாகேஸ்வரி என்ற திருநாமம் அமைந்தது என்பர். நயினை ஆலயத்தின் கருவறையில் ஐந்து தலை நாகமும் அம்பாளும் இணைந்த விக்கிரகம் அருள் பொழிந்த வண்ணமாக உள்ளது.

கலப்பற்ற தூய்மையான நாக வழிபாட்டுப் பண்பினை நயினாதீவில் காணலாம். இந்த நாகச் சிலை பதின்னான்கு ஆயிரம் வருடம் பழைமை வாய்ந்தது. இது சர்ப்ப வழிபாட்டின் தொன்மைக் கருவூலமாக விளங்குகின்றது. நாக வழிபாட்டிலே தொடங்கி காலப்போக்கிலே நாகபூஷணி வழிபாடாக வளர்ந்து அந்த வழிபாட்டின் தொடர்ச்சியின் மகோன்னத நினைவுச் சின்னமாக நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது.

நயினாதீவுக்கு இடப்பட்ட பழைய பெயர் நாகதீவு அல்லது நாகத்தீவு என்று கொள்ளலே பொருத்தமாகத் தெரிகின்றது. இந்த மணித்தீவு நாகத்துவீபம் என வழங்குவதாலும் நாகம், நாகர் தொடர்புகளின் தொன்மை புலப்படுவதாலும் இலங்கை எங்கனமுள்ள ஆலயங்கள் யாவிலும் மிகவும் பழைமை வாய்ந்தது நயினைதீவு நாகபூஷணி ஆலயமே.

''பூத்தவளே புவனம் பதினான்கையும்
பூத்த வண்ணம் காத்தவளே''

என அபிராமிப் பட்டர் அம்பிகையின் சர்வ உலக வியாபகத்தினை விவரித்திருக்கின்றார். அந்த வியாபகம் எங்கள் தாயாக விளங்கும் நாகபூஷணி அம்பாளுக்கும் பொருந்துவதாகவே அமைகின்றது.

நயினை வாழ் நல்லடியார்களுக்கு மட்டுமல்ல நாடளாவிய சைவர்கள், பௌத்தர் முதலாய எல்லாருக்கும் பொதுவினளாக அம்பாள் வணக்கத்துக்குரியவளாகின்றாள். இத்தகு சரித்திர வரலாற்றுப் பெருமைகளை தன்னகத்தே கொண்டுள்ள அன்னை நாகம்பாளின் ஆலயத்தில் இன்று (2011.07.14) இலட்சோப இலட்சம் மக்கள் மத்தியில் அம்பாள் தேரேறி அருள்பாலிக்கும் திருக்காட்சி இந்திர விழாக்காட்சியாக அமைந்துவிடும்.

மதுரகவி, காரை.எம்.பி.அருளானந்தன்
பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய
# தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 14.07.2011



## “தேரேறி வருகிறாள் நாகபூஷணி”

திருமதி.தவமணி சபாநாதன்
(ஓய்வுவு பெற்ற அதிபர்), நயினாதீவு

“மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி குனிதரும் சேவடிக் கோமளமே.... என்று அன்னை பராசக்தியின் திருவடி மகிமைபற்றிப் பேசுவார் அபிராமிப்பட்டர். உலக மாதாவாகிய பராசக்தியினுடைய பாத கமலங்களை மண்ணுலகில் வாழும் மனிதர்களும், விண்ணுலகத் தேவர்களும், தவ முனிவர்களும் போற்றி வணங்குவர் என்பது இதன் பொருள்.

“அம்பிகையை சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம், நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு” என்ற பாரதியின் கூற்றுப்படி இவ்வுலக வாழ்வு இன்பமாய் அமைவதற்கும்; மறுமைப்பேறு கிட்டுவ தற்கும் சக்திவழிபாடே சிறந்த மார்க்கம் என்பது நமது சமய நம்பிக்கையின் துணிவாகும்.

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய கற்பக்கிரகம் மிகவும் அற்புதமானது. புதுமையானது. சுயம்புவாகத் தோன்றிய ஒரு லிங்க வடிவத்தின் பின்புறம் ஐந்து தலை நாகத்தின் கற்சிலை வடிவம். நாகத்தை தலையில் பூண்டிருப்பதால் நாகபூஷணி என்ற திருநாமம் அம்பாளுக்கு அமைந்தது. இலங்கையில் ஆதிக்குடி மக்களாகிய நாகர் வாழ்ந்த இடம் நயினாதீவு எனவும்; அவர்கள் வழிபட்ட நாக வழிபாட்டிடமே நாகபூஷணி ஆலயம் எனவும் பழைய ஆலய வரலாறுகள் கூறுகின்றன. இந்த ஆலயத்தில் எழுந்தருளி அம்பாள் விக்கிரகமும் தெய்வீக அழகுமிக்கது. ஐம்பொன் விக்கிரகமாகிய எழுந்தருளி விக்கிரகம் தங்கம் போன்று பிரகாசிக்கின்றது. பல்வேறு விதமான அழகிய தங்கத்திரு ஆபரணங்கள் பூண்டு; தங்கத்தாலான நாகத்தை திருமுடியில் தாங்கி அம்பாள் வீதி உலாவரும் காட்சிகாண ஆயிரம்கோடி கண் வேண்டும்.

அலைகடல் நடுவே இனிதமர்ந்து அருள் மழை பொழியும் அன்னை நாகபூஷணியின் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகின்றது. மாமேரு மலையை ஒத்த மிகப்பெரிய சிற்பத்தேரிலே ஏறி மண்ணவர் கண்மாரி சொரிய விண்ணவர் பூமாரி சொரிய திருவீதியுலா வருகிறாள் உலக மாதாவாகிய நாகபூஷணி. அம்பாளுடைய திருத்தேர் பழமை வாய்ந்தது. ஈழத்துச் சைவ ஆலயங்களிலுள்ள தேர்கள் யாவற்றிலும் மிகப்பெரியது. வரலாற்றுச் சிற்பங்களை தன்னகத்தே கொண்டது. ஆலய வரலாறுகள் பலவும் திருத்தேரிலே அழகிய சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

தென்னிந்தியச் சிற்ப விற்பன்னர்களாலே வடிவமைக்கப்பட்ட திருத்தேர் 1950 ஆம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்டது. நயினை அம்பாளுடைய தேர்த்திருவிழாவிலே அம்பாளுடைய தேருடன் விநாயகப் பொருமானுடைய திருத்தேரும் சுப்ரமணியப் பெருமானுடைய திருத்தேரும் சேர்ந்து வீதியுலாவரும் காட்சி மிகவும் அற்புதமான காட்சி ஆகும்.

நயினை நாகபூஷணி அம்பாளுடைய தேர்த்திருவிழாவைக் காணவேண்டும்; தேர்வடம் பிடித்து மோட்சத்தில் இடம் பிடிக்கவேண்டும் என்று ஆராத ஆசையால் உந்தப்பட்டு, மக்கள் கூட்டம்- அடியார் கூட்டம் அலை அலையாகத் திரண்டு வருகின்றனர்.

எத்தனையோ இடர்களையெல்லாம் துச்சமெனத்தாண்டித் துணிந்து வரும் அடியார்களின் பக்தி வைராக்கியத்தை என்னென்பது. “அழகிற்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியின்” அழகொழுகும் காட்சியைக்காண ஆயிரமாயிரமாய் வரும் அடியவரின் அருட்பசியைத் தீர்த்துப் பேறும் பெருவாழ்வும் அருளுகின்றாள் அன்னை நாகபூஷணி.

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கு வருகின்ற அடியவர்களின் பசி தீர்க்கும் அமுத சுரபி அன்னதான சபையும் தாகம் தீர்க்கும் தாகசாந்தி நிலையங்களும் குறிப்பிடத்தக்க பெரும் பணியை ஆற்றுவதும் போற்றுதற்கு உரியவையாகும்.

மிகப் புராதனமான நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் போர்த்துக்கீசர் காலத்தில் அழிக்க ப்பட்டதாகவும் பின்னர் சைவ அன்பர்களாலும், வணிகப்பெரு மக்களாலும் மீண்டும் உன்னத நிலை அடைந்ததாகவும் வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. தற்போது ஆலயத்தில் பல திருப்பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஆலய வீதிகளிலே பல வரலாற்றுச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிழக்கு வாயிலிலே கட்டப்பட்ட 108 அடி உயரமான இராச கோபுர வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளது. நிதி மிகுந்தவர்கள் பெருநிதிக் கொடையாலும் அறங்காவலர் சபையினரின் பெரு முயற்சியாலும் அம்பிகையின் பேரருளினாலும் ஆலயம் ஆழகுறப்பொலிந்து, சிறப்புற அமைந்து அடுத்த ஆண்டில் குடமுழுக்குக்காண உள்ளமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

நயினை நாகபூஷணி அம்பாளுடைய தேர்த்திருவிழாச் சிறப்பினையும், அருள் ஒழுகும் அன்னையின் அருட்கோலத்தினையும் கண்டு பேரானந்தமும் முத்திப் பெரும் பேறும் பெறுவோமாக.




நயினைத் தாயே! நலம் காக்கும் அன்னையே!! தேரேறிவந்து நம் குறைகளைத் தீர்த்திடுவாய்!!

திருமணப் பட்டுப் புடைவைகளுக்கும் நவீனரக ஆடைத் தெரிவுகளுக்கும் சிறுவர் சிறுமியர்களுக்கான சிறந்த ரெடிமேட் ஆடைகளுக்கும்
லலிதா ரெக்ஸ்
(கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்)
இல.5, 6, நவீனசந்தை, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5260

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகளை மற்றும் நவீன காலணி வகைகளை நித்தம் நித்தம் அறிமுகம் செய்யும் ஸ்தாபனம்
நியூ லலிதா ரெக்ஸ் & ஆ பலஸ்
(கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்)
இல.42, பஜார் வீதி, வவுனியா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய
## தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 14.07.2011

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
ROYAL Pure Glucose
ஏக விநியோகஸ்தர்கள்:
[illegible]
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
இலவசம்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

தேர் ஏறிப் பவனிவரும் திருசூலி நயினை நாயகியே! தீராயோ எங்கள் துயர்!
தரமான சைக்கிள்,
சைக்கிள் உதிரிப்பாகங்கள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
மிக மலிவாகவும்
பெற்றுக்கொள்ள

வெங்கடேஸ்வரா
இல.125A, 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 8306 , பக்ஸ்: 021 222 8306.

சிம்மவாகனம் ஏறும் அன்னையே... தெய்வச் சிரிப்போடு எமை ஆளும் புரந்தரியே

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள்
அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
ஆர்.வி.ஜி
மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D முன்பாக) யாழ்ப்பாணம். தொ.பே. 0212222129
R.V.G
ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6806

துன்பமெல்லாம் தீர தீய குணங்கள் வாட தூய உன் அருள் சேர துதிக்கின்றோம்...
AYAM ELECTRONICS
மலிவு விலைகளில்
TV, DVD Player, Ampli fear, SpeaKer Box மற்றும் சகலவிதமான
இலத்திரனியல்பொருள்களும் உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.


339, K.K.S.Road, Jaffna. T.P: 0774041910

தாயே உந்தன் புகழைப் பாடி சரணடைந்தோமே,
எங்கள் வாழ்வில் உந்தன் அன்பைத் தந்தருள்வாயே....!

சுந்தர்சன்
யாழ்.வீதி, மானிப்பாய்.
கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மின் இணைப்புப் பொருள்கள் நீர் வழங்கு பைப் வகைகள் இணைப்புக்களின் விற்பனைத்துறையில் தனக்கென தனி இடத்தினைப் பெற்று பல சாதனைகள் புரிந்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நன்மதிப்பைப் பெற்றுவரும் ஒரே ஸ்தாபனம் சுந்தர்சன். அதி நவீன ரக தொங்கும் லைற் வகைகள், மின்சாரத்தில் இயங்கும் இலத்திரனியல் உபகரணங்கள், பரிசுப்பொருள்கள், போன்றவை அதிசயிக்கத்தக்க விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. அது மட்டுமின்றி பலவகையான கையடக்கத் தொலைபேசிகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்.
ஒரு முறை சுந்தர்சன் காட்சி அறைக்கு விஜயம் செய்து உண்மையை அறிந்து கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்
அன்புடன் அழைப்பவர்கள்
SUNDHARSON
Jaffna Road, Manipay.
TP: 021 225 5136


தேரேறி வந்து இன்னல்கள் தீர்த்திடம்மா...
புதிய வினோ
நகைமாடம்


நவீன அழகிய தங்க ஆபரணங்களை
மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ளலாம்
புதிய வினோ
நகைமாடம்
[illegible]
மொபைல் பிளாஷா
பிரதான வீதி, சங்கானை. (HNB Bank அருகில்)
தொ.பே:0779352902.
பிரதான வீதி, சங்கானை.
(செலான் வங்கிக்கு அருகில்)
தொ.பே: 0215672588, 0776002588.

சிங்க வாகனத்தில் ஏறி சிங்காரப் பவனி வரும் நயினை தாயே... போற்றி!

ANNA
"ஜீவாகாரம்"
தேக ஆரோக்கியத்துக்குப்
போஷாக்கு நிறைந்த ஜீவாகாரம்
அண்ணா கறிமிளகாய்த் தூள்
அண்ணா கோப்பி
அண்ணா அப்பம் மா
அண்ணா பற்பொடி
அண்ணா அரிசி மா
அண்ணா தோசை மா
வாழ்க்கை முழுவதும் வளமுடன் வாழ
* வளர்ந்துவரும் குழந்தைகளுக்கும்
* பாலூட்டும் தாய்மார்களுக்கும்
* கர்ப்பிணித் தாய்மார்களுக்கும்
* போஷாக்குக் குறைவான குழந்தைகளுக்கும்
இல்லத்தரசிகளே! அண்ணா கோப்பி தயாரிப்புக்களை வாங்கிப் பாவித்து இன்புறுங்கள்!
* குமரன் விபூதி
* துர்க்கா பத்தி
* [illegible]
* ரோஸ் பத்தி
அண்ணா தொழிலகம்
இணுவில்.
தொ.பே: 021 222 3560, 0217200800

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய
# தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 14.07.2011



## "அன்னையே அருளாய்"

அலைகடல் நடுவில் அமர்ந்து அருளாட்சி கொண்டு அனைத்துயிர்க்கும் அருள்பாலிக்கும் அன்னை நயினை நாகபூசணி அம்பாள் தேரில் வீதியுலா வந்து பக்தர்களுக்குக் காட்சிதரும் நன்னாள் இந்த நாளாகும்.

காமர் கோடி அழகெலாம் ஒன்று திரண்டு ஒருருவாய்த்திகழும் அகிலாண்ட கோடிப் பிரமாண்ட நாயகியாக விளங்கும் அன்னை பராசக்தி நாகபூசணியாக காட்சிதரும் திருத்தலம் நயினையம்பதி.

சரித்திர காலத்துக்கு முற்பட்டே காலாதி காலம் அன்பர்கள் அன்னையின் அருளை நாடி வழிபட்ட வரலாறுகளும், அவர்கள் பெற்ற அனுபவங்களும் எண்ணிலடங்கா. கர்ணபரம்பரைக் கதைகளாகவும், செவி வழிச்செய்திகளாகவும், இலக்கியச் சான்றுகளாகவும் எமக்கு அன்னையின் அருளையும், நயினையம்பதியின் பெருமையையும் அவை விளக்குகின்றன.

அநாதியாக, வரலாற்றுக் காலத்துக்கு முன்பே விளங்கியதாகக் கருதப்படும் சைவ சமயம் பரம்பொருளையும், அதனின்றும் வேறாகாத ஆற்றலையும் ஒன்றாகவே உணர்ந்து "சிவம்சக்தி" எனச் சுட்டி உணர்த்தி உள்ளமை எம்மனைவரும் சிந்திக்கத்தக்கது.

பொருளை ஆண்மையாகவும் ஆற்றலைப் பெண்மையாகவும் கொண்டு 'சிவசத்' எனச் சுட்டிக்குறித்து, "எத்திறம் அவன் நிற்பானோ அத்திறம் அவளும் நிற்பாள்" என்று கூறி, இயற்கையோடு மாறுபடாது "அம்மை அப்பரே உலகுக்கு அம்மை அப்பர்" என்று குறிப்பிடுகின்றது சைவம்.

"மாதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய் ஆதாரம் நீயல்லால் ஆரெமக்குப்பாரினிலே" என்று புரட்சிக் கவிஞனாக விளங்கிய மகாகவி பாரதி பாடியுள்ளார்.

எப்பொருட்கும் ஆதாரமாக உள்ளது ஆற்றலே. ஆற்றல் இல்லையேல் எவையும் நிலைபெறா. இவ்வுண்மை யாவர்க்கும் ஏற்புடைத்தே.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவ்வுண்மையை உணர்ந்தனர். உணர்ந்ததை உணர்த்தினர். அவ்வுணர்வு பரம்பரை பரம்பரையாக கொண்டு வரப்பட்டு "சக்தி பின்னமிலாம்" என விளக்கப்பட்டது.

இயற்கையோடியைந்த வாழ்வு நெறியாக விளங்கும் சைவம், சிவனாகவும் சக்தியாகவும் ஆண் பெண் என இருவேறுவகைக் குறியீடு கொண்டு வழிபாடாற்றுகின்றது.

*"சத்தியும் சிவமுமாய தன்மை இவ்வுலகமெல்லாம்"*

*"உடையாள் உன்றன் நடுவிருக்கும்*
*உடையாள் நடுவுள் நீயிருத்தி"*

*"ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக*
*எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே"*

*"பூத்தவளே புவனம் பதினான்கினையும் பூத்தவண்ணம்*
*காத்தவளே பின் கரந்தவளே*
*கறைக்கண்டனுக்கு மூத்தவளே மூவா முகுந்தற்கு இளையவளே*
*மாத்தவளே யுன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே"*

என்று பல்வேறு வகையாகப் பேசினும் உரைப்பினும் சத்தியும் சிவமுமாக விளங்கும் இவ்வுலகம், அவ்வகையிலேயே சிவத்தலங்களையும் சக்திபீடங்களையும் அமைத்து வழிபாடாற்றி உய்தியடைய வழிப்படுத்துகின்றது சைவசமயம்.

சக்தி பீடங்களில் ஒன்றாகிய நயினையம்பதியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அன்னை மாதாபராசக்தி அடியவர்களால் பல்வேறு பெயர்ச்சுட்டினாலும் அழைக்கப்பட்டு, தோத்திரஞ் செய்யப்பெற்று வழிபாடாற்றும் முறைக்கிணங்க, மகோற்சவத்தின் சிறப்பான இரதோற்சவ நாளாகிய இன்று, பல்லாயிரக்கணக்கான அடியார்கள் நேரிலும், இலட்சோபலட்சம் மக்கள் மனத்திலும் தியானித்து வழிபட அருள் பாலித்து அனைத்துயிரும் அமைதியும், சாந்தியும், சமாதானமும், சுபீட்சமும் பெற வேண்டும் எனப் பிரார்த்தனை செய்வோமாக.


இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

*சைவப்புலவர்*
*மு.திருஞானசம்பந்தபிள்ளை*
*தலைவர்,*
*அகில இலங்கைப்புலவர் சங்கம்.*

உமை நாடி வந்தோமே.... எமைக் காத்தருள்வாயே...!



ரமணன்
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
சகல விதமான கட்டடப் பொருள்களை
நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
525, 528, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 9296






தேர் ஏறிப் பவனிவரும் திருசூலி நயினைவளர் தாயே..!
தீராயோ எங்கள் துயர்?
மொத்த, சில்லறை விற்பனையாளர்
ஏகாம்பரம்
புடைவை மாளிகை
(72), 9, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

நையினையிலே கோயில் கொண்ட நாயகியே!
நாயகிக்கு நாயகியாய் நாம் வணங்கும் அபிராமியே!!



றிக்கணேஷ்
மூக்குக் கண்ணாடி அகமும்
பல் கட்டுமிடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2486
கிளைகள்: பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல.86, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.


நயினையிலே கோயில் கொண்ட நாயகியே... நாயகிக்கு நாயகியாய் நாம் வணங்கும் அபிராமியே...
சிங்கப்பூர் ஜுவல்லறி
SINKAPOORE JEWELLERY
றெடிமேட் நகைக்கான சாம்ராஜ்யம்
இல.93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 4590260



எங்கள் வாழ்வில் உந்தன் அன்பைத் தந்தருள்வாயே....!



Importers and Dealers in Tractor Spare Parts,
Specialist in Massy. Ferguson Engineers
& Tipping Course Pressure Pipe fitting.



TRACTOR SPARES
7, Kannathiddy Road, Jaffna. T.P. 021 2225055

மண்ணில் நீடித்த அமைதி நிலவ வேண்டும் தாயே!



குளிர்ச்சியின் சிகரம் ராஜா!
அறுசுவையின் சின்னம் ராஜா!
சுகாதார முறைப்படி, தரமான சுவைகுன்றா தயாரிப்புக்களே ராஜாவின் இத்தனைகால சேவையின் முத்திரை! கொழுத்தும் வெய்யிலிலும் உங்களைக் குளிர்ச்சியில் மூழ்கடிக்க புத்தம் புதிய வகைத் தயாரிப்புக்களுடன் உங்களை வரவேற்கின்றது..




ராஜா கிறீம் ஹவுஸ்
36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய

## தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 14.07.2011





அசல் 22 கரட் நிரம்பிய நவீன
வண்ணங்கொண்ட தங்க நகைகளை
எண்ணம் போல் தெரிவுசெய்து
நீங்கள் விரும்பும் தினத்தில்
உங்களுக்கு தருபவர்கள்



சாணுகா
நகைமாடம்

தேரேறி வருவாய்
அம்மா நாகபூஷணி
தேசநலன் காத்திடம்மா
நாகபூஷணி!

200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## "பாமாலை"

வெள்ளி மாமலையே போன்ற
விண்ணிலி பெரிய தேரில்
எண்ணிலா அடியார்
சூழஏறியே இனிது வைகி
புண்ணிய நயினை
மூதூர்ப் புனிதையே பூஷணி!
கண்ணினால் அடியார் கண்டு
களித்திட வீதி ஊர்ந்து
எண்ணிய வரங்கள் யாவும்
எம்மவர்க் கருளும் தாயே!
இன்னும் ஒரு வரம் தான்
வேண்டும்இறைமையால் நாமும் வாழ
மண்ணிலோர் தமிழர்
நாடுவழங்கியே வாழவைப்பாய்
அம்மா! கண்மணி!
பூஷணி!களிக்கின்றார்
கனிவினோடும்.

திருமதி த. சபாநாதன்.

நயினைத் தாயே சரணம்!

ஆறுமுகம்
சிற்பாலயம்
Specialist All Kinds of Wood carvings, Sculptures,
Temple Chariots,Vaganams, Rathams, and etc.
Arumugam Sitppalayam
kalikovilady, Thirunelvely West, Jaffna. T.P: 021 2222892.

வருவாய் வருவாய் வருவாய் அம்மா.....!
செ.இராசரட்ணம்
நீர் இறைக்கும் இயந்திர
உதிரிப்பாக உற்பத்தியாளர்
S.R.P பம்புகள்
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில், தாவடி.

காவலுக்கு நீயன்றி எமைக்காக்க யாருண்டு?
வெளிநாட்டிலிருந்து WESTERN UNION மூலம்
பணம் அனுப்பிப் பணப்பரிமாற்றம் இலக்கம்
(MTCN 10 இலக்கங்கள்) கிடைத்து ஒருசில
நிமிடங்களில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
MMBL Money Master
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
NO. 303 K.K.S.ROAD, JAFFNA.
T.P.021 222 2670, 5392, Hot Ling 0777427182, Fax 021 222 3214
e.mail:- Srimurugan@eurekare.lk

தேரேறி வந்து வினை அறுத்திடுவாய் அன்னையே...!
பலசரக்கு மற்றும் மிக்சர் தயாரிக்கும்
பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெறுவதற்கு நாடவேண்டிய ஒரே இடம்
ஜெகன் களஞ்சியம்
இல.475, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.தொ.பே: 021 222 5035

நயினையிலே வீற்றிருந்து அருளாட்சி நடத்தும் அன்னையே.... சரணம்!
PSB Communication
Local Call, Net IDD Calls, Net Browsing, Photocopy, DVD Writting,
DVD Movies, Mobile Phone Sales& Parts.
337 (555), K.K.S. Road, Jaffna.
T.P: 021 222 7477 Fx: 021 222 4501

அலைகடல் ஓரத்தில் வீற்றிருந்து அருளாட்சி நடத்தும் அன்னையே..! தேரேறி வருக... தேரேறி வருக.. தேரேறி வருக...
* உங்களை அழகுபடுத்திக் கொள்ளவும் (பேசியல்) ஆண், பெண் இருபாலாருக்குமான பேசியல்கள்)
* திருமண வைபவங்களுக்கு மணமகளை அழகுபடுத்திக் கொள்ளவும் (புதிய ஸ்டைல்களில்)
* உங்கள் வைபவங்களுக்கு (திருமண, பிறந்தநாள்) கேக், ரிச்கேக் வகைகள் ஒடர் செய்துகொள்ளவும்.
* ஆடைகளுக்குப் பொருத்தமான ஆபரணத் தெரிவுகளுக்கும்
* உங்கள் மேனியை மிருதுவாக்கி அதற்குப் பொருத்தமான கிறீம் வகைகளை நிபுணரின் உதவியுடன் பெற்றுக்கொள்ளவும்
FASHION FANCY & BEAUTY CORNER
நவநாகரிக நங்கையரின் இருப்பிடம்
உங்களின் தேவை எங்களின் சேவை
297A, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Mrs.செந்தூரன் ஜெயவாணி.
T.P: 0773530691.

வல்வினைகள் தீர்க்கும் நயினை நாகம்மா...!
சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No: 222 6972, Fax. No: 222 8869
இணை நிறுவனம்
சாரங்கா ஜுவல்லறி
இல.55, செட்டித்தெரு,கொழும்பு - 11,
TEL: 2434971. FAX: 0112434071
சிவா நகைமாடம்
இல.14, கண்டி வீதி,
நவீன சந்தை, சாவகச்சேரி.
தொ.பே: 021 4922398

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த் திருவிழா சிறப்பு மலர் 14.07.2011



## நாகம் பூசித்த நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்

எமது குலதெய்வம் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் இந்தவருட தேர்த் திருவிழாவையொட்டி வெளிவரும் சிறப்புக்கு வாழ்த்துச் செய்தி யொன்றினை அனுப்புவதில் பெருமன மகிழ்வெய்துகிறேன். வரலாற்றுச் சிறப்பும், வழிபாட்டுச் சிறப்பும், அடியார்க்கு வரமருளுஞ் சிறப்பும், ஒருங்கே கொண்டுள்ள சக்திபீடம் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் சன்னிதானமாகும். ஆதியில் நாகம்பூசித்த அம்மன் என்னும் காரணத்தால் நாகபூஷணி அம்மன் என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

அடியார்களை ஈர்த்து ஆட்கொள்ளும் அதிசயதெய்வம் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் என்றால் மிகையில்லை. அன்பர்களது கனவிலேயும், கண்முன்னேயும் நாகமாக அம்பாள் அருட்காட்சி கொடுத்து தனது அருள்பெரும் தன்மையை உணர்த்திவரும் தனித்துவமகிமை இத்தலத்தில் உறைகின்ற அம்மனுக்கே உரியது. மூலஸ்தானத்திலே ஐந்து தலைநாக உருவின் பின்னணியிலேயே அம்மனின் திருவுருவம் உள்ளது. எழுந்தருளி அம்மனின் முடிக்கு மேலேயும் ஐந்து தலை நாகமே உள்ளது. இதனால் இந்தத் தலத்து வரலாறு நாகவழிபாட்டு முறைமையினடியாகவே இன்றும் நோக்கப்படுகிறது. நாகதோஷத்தைப் போக்கும் தனித்துவ சக்தி ஸ்ரீ நாகபூஷணி.

இந்த ஆண்டுத் திருத்தேர்ப் பவனி அனைத்துயிர்களினதும் வேண்டுதல்களையும் நிறைவேற்றுவதாக அமையட்டும். அம்பாளின் பேரருள் தரணியில் சாந்தியையே அருளட்டும் என்று பிரார்த்தித்து நிற்கிறேன்.

கனகசபாபதி நாகேஸ்வரன்.






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினை நாகபூசணி அம்மன் ஆலய தேர்த் திருவிழா சிறப்புமலர்-14.07.2011

திருவே உருவாய் வருவாய் அம்மா..!

ஓரியண்டல் அக்கூரியம்
மல்ரி பாம் சென்ரர்

வளர்ப்பு கலர் மீன் வகைகள்,
நவீன வகையான மீன் தொட்டி,
மீன் தொட்டி உபகரணங்கள்,
வளர்ப்புக் குருவிகள்,நாய்க்குட்டி இனங்கள்,
செல்லப் பிராணிகள், பூக் கன்றுகள்,
பூஞ்சாடிகள் என்பன நியாயமான
விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு விசேட
விலைக்கழிவு வழங்கப்படும்.

Multy Travels

யாழ்→கொழும்பு வான்சேவை மற்றும்
உள்ளூர் வான்சேவை, திருமண சேவை,
சுற்றுலா பிரயாணங்கள்
என்பவற்றிற்கு சகல வசதிகளுடன்
கூடிய AC & Non AC

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
0217912997, 0754985400,0759880000

நயினைத் தாயே...! தேரேறி வந்து கருணை மழை பொழிந்திடம்மா...!!

உள்நாட்டு வெளிநாட்டு துரித
கடிதங்கள் பொதிகள் பரிமாற்ற சேவை

Our Agents DHL aramex SriLankan Cargo ups

மஹாராஜா Food நிறுவனத்தினர் யாழ்.நகரில்...!
உங்கள் வெளிநாட்டில் உள்ள உறவுகளுக்கு பொருள்களையும் ஆவணங்களையும்
குறைந்த செலவில் பாதுகாப்பாகவும் விரைவாகவும் உத்தரவாதத்துடனும்
அனுப்பி உறவை வலுப்படுத்த நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்.

G.T.V Enterprises (Pvt) Ltd.
ஜி.ரி.வி என்ரபிறைஸ்சஸ் (பிறைவேற்) லிமிட்.

உங்கள் வெளிநாட்டு உள்நாட்டு உறவுகள் அனுப்பும்
பொதிகளை எமது யாழ்.கிளையில்
பெற்றுக்கொள்ளலாம்.

உள்நாட்டிற்கான பொதிகள் நாட்டின் எப்பாகத்திலும்
ஒப்படைத்த அடுத்த நாளில் விநியோகிக்கப்படும்.

11Kg இற்கு அதிகமான பொதிகளிற்கு விசேட கட்டண சலுகை

யாழ்ப்பாணம்:- #225, Kasthuriyar Road, Jaffna. T.P: 0212224338.
#272, K.K.S. Road, Jaffna. T.P:0212224825.
கொழும்பு: #18/3,Dr.E.A Cooray Mawatha, Wellawatte. T.P: 0112360926, 0112259849.

ஓங்கார ரூபிணி அகிலாண்ட நாயகி...
அடியார்கள் வினை தீர்க்கும் ஆதிபராசக்தி!

நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

சிறி சிவாஞ்சனா நகையகம்

இல. 149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 222 9227

அல்லல் தீர்த்து எமைக் காக்கத் தேரேறி வருகின்றாள்!
அடியவர்க்கு அபயமளிக்கத் தேரேறி வருகின்றாள்!!



தரமான நவீன கணினிகள், உதிரிப்பாகங்கள்,
மற்றும் மின்சார இலத்திரனியல்
பொருள்களை கொள்வனவுசெய்திட

Abans

World's No 1

நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோகசேவையைப் பெற்றிட

Midea Electro Mart
Authorized Dealer for Abans Ltd.
Midea PC Show Room

e-mail: midea21@gmail.com

No: 04,New Market,
Chavakachcheri.
T.P: 021 227 0268, Fax:021 227 0129

No: 1-1, 1-H, Stanley Road,
Jaffna, SriLanka.
T.P: 021 222 4566, Fax:021 222 1646.

வருவாய் வருவாய் வருவாய் அம்மா..! திருவே உருவாய் வருவாய் அம்மா..!

எமது நிறுவனத்தின் vsp லஞ் ஒயில் கொழும்பு வாழ் மக்களின்
நலன்கருதி கொழும்பிலும் விற்பனையாகிறது.

V.S.P லஞ் ஒயில்

பரிமளா ஸ்ரோர்ஸ்

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 2224135, 2229165.

உணவுத் தேவைகளுக்குச்
சுத்தமாக தயாரிக்கப்படுகிறது





DHL

உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான
துரித கடிதங்கள் பொதிகள் சேவை

10 கிலோவுக்கு மேற்பட்ட பொதிகளுக்கு
விசேட விலைக்கழிவு

London Rs 750

Canada, USA, France, Denmark,
Germany, Italy, Norway, Swiss Rs.900

குறிப்பு: கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. போலி முகவர்களுக்கு
கூடுதலான கட்டணத்தைச் செலுத்தி ஏமாற்றமடையாதீர்கள்.
ரூபாவிலோ அன்னிய நாட்டுச் செலாவணி முறையிலோ
செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாணத்தில்
DHL
வலைப்பின்னலுடன் முதன் முதலாக
திருமுருகன் கொம்நெற்
இணைக்கப்பட்டுள்ளது.

220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஆகாய கடல் மார்க்கமாக
உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள்
DVD, VCD போன்ற பொருள்களை மிகவிரைவாகவும்
பாதுகாப்பாகவும் அனுப்பிவிட நாடுங்கள்.

TCN Express
2B, Nelsan Place, Colombo -06.
Customer Service No: 021 222 7835

உங்கள் பொதிகளைச் செலுத்தி உங்களுக்கான DHL Tracking Numberகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

DHL Online Tracking
(வடமாகாணத்தில் அங்கீகாரம்பெற்ற ஒரே முகவர்)

திருமுருகன் கொம்நெற்

இல.259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல.05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org